ISSN 1888-1246

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி: 05 | நவம்பர் 2008 | பார்வை: 51 | விலை: ரூபா 70/-



- கற்போரை உருவாக்குதல்
- ஆசிரிய நிலைமாற்று வகிபாகம்
- கல்வி குடிபெயர்வுக்கான சாதனம்

விவாதம்:

## 5ம் வகுப்புப் பரீட்சை மீளாய்வு...

* தை.தனராஜ் * ந.பார்த்திபன் * ஏ.பரமானந்தம் * கி. புண்ணியமூர்த்தி
* வ. மேரியூடிற் * ஆர். சுரேஸ்குமார் * சபா.ஜெயராசா * மா. சின்னத்தம்பி
* எஸ்.கே.யோகநாதன் * ஏ.சி. யோர்ச்

# வெளிவந்துவிட்டது

# கூடம் - 9




**விலை: 100.00**

*தொடர்பு:*
*3, டொரிங்டன் அவனியூ*
*கொழும்பு 07*
தொலைபேசி: 011 250 6272
மின்னஞ்சல்: *koodam@viluthu.org*

K.BHARANEETHARAN
Editor Jeevanathy
Editor Kadal
Kalaiaham, Alvai.

ISSN 1888 - 1246

# அகவிழி

மாத இதழ்

ஆசிரியர் : தெ. மதுசூதனன்

ஆசிரியர் குழு : சாந்தி சச்சிதானந்தம்
ச. பாஸ்கரன்
காசுபதி நடராஜா

ஆலோசகர் குழு : பேரா.கா.சிவத்தம்பி
*(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*
கலாநிதி சபா.ஜெயராசா
*(முன்னாள் பேராசிரியர் கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*
பேரா.சோ.சந்திரசேகரன்
*(பீடாதிபதி, கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)*
கலாநிதி ஹுசைன் இஸ்மாயில்
*(துணைவேந்தர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)*
கலாநிதி ப.கா.பக்கீர் ஜஃபார்
*(கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)*
கலாநிதி மா.கருணாநிதி
*(கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)*
பேராசிரியர் மா.செல்வராஜா
*(கல்வித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)*
கலாநிதி உ.நவரட்ணம
*(பணிப்பாளர், சமூகக்கற்கை, தேசிய கல்வி நிறுவகம்)*
தை. தனராஜ்
*(முதுநிலை விரிவுரையாளர், கல்விப்பீடம் இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)*
மா.சின்னத்தம்பி
*(முதுநிலை விரிவுரையாளர், கல்வித்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*

இதழ் வடிவமைப்பு : செல்வி. த.மைதிலி

அச்சு : ரொக்னோ பிரின்ட், கொழும்பு - 06
தொலைபேசி: 0777-301920

வெளியீடு மற்றும் தொடர்புகட்கு:

வெளியீடு : AHAVILI
3, Torrington Avenue, Colombo - 07
Tel 011-2506272
E-mail ahavili2004@gmail.com
ahavili2004@yahoo.com

## உள்ளே...

- ஆசிரியரின் நிலைமாற்று வகிபாகம் 03
- வாண்மைத்துவமிக்க .... 07
- 50 வது இதழை நோக்கி அகவிழி... 10
- ஊக்குவிக்கப்பட்ட கற்போரை... 11
- இலங்கையில் கல்வி நோக்கங்கள்.... 15
- பிரச்சினைக்குரிய குழந்தைகளும்... 25
- ஆசிரியர்கள் நிர்வாகக் கடமைகளில்.... 27
- ஐந்தாம் வகுப்புத் தேசியப் பரீட்சையும்... 30
- கல்வி குடிபெயர்வுக்கான சாதனம்... 33
- பாடசாலை மட்ட முகாமைத்துவத்தில்.. 37

அகவிழியில் இடம் பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு. கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் "அகவிழி"யின் கருத்துக்கள் அல்ல.

# ஆசிரியரிடமிருந்து...

நாம் அகவிழி 50வது இதழை "ஆசிரியத்துவமும் வாசிப்பும்" என்னும் பொருளில் சிறப்பிதழாக வெளியிட்டிருந்தோம். இதற்குப் பரவலான வரவேற்பு இருந்தது. இன்று நாம் மாணவர்கள் மத்தியில் வாசிப்பு குறைவடைந்து வருகிறதென்று பார்ப்பதைவிட எமது ஆசிரியர்களிடம் தான் வாசிப்பு அரிதாகி வருகிறது. இந்த எதார்த்தத்தை நாம் முழுமையாக உணர்ந்து கொள்ள வேண்டும். அப்பொழுது தான் நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிச் சிந்திக்க முடியும் மாற்றுச் செயற்பாடுகளில் ஈடுபட முடியும்.

இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் 'ஆசிரியம்', 'ஆசிரியத்துவம்' சார்ந்த எண்ணக்கருக்கள் மீது எமது கவனத்தைக் குவித்துக் கொள்வோம்.

"ஆசிரியம் (Pedagogy) மற்றும் "ஆசிரியத்துவம்" போன்ற எண்ணக்கருக்கள் சமகாலக் கல்வியியலில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

ஆசிரியத்துவம் என்பது ஆசிரியருக்குரிய செயற்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்கிய அகல்விரி (Comprehensive) எண்ணக்கருவாகின்றது. முதற் கண் ஆசிரியருக்குரிய மெய்யியல் அந்தஸ்து அந்த எண்ணக்கருவிலே தொக்கி நிற்கின்றது. அதாவது சோக்கிரட்டீஸ் காலம் தொடக்கம் ஆசிரியத்துவம் மெய்யியல் தோய்ந்த வாண்மையாகவே வளர்ச்சியுற்று வருகின்றது.

மேலும் ஆசிரியத்துவம் உளவியல் தழுவிய பரிமாணங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. "எவற்றைக் கற்பிப்பது" என்பது எத்துணை முக்கியத்துவமும் சிறப்பும் "எவ்வாறு கற்பித்தல்" என்பதற்குமுரியது.

நவீன கல்வியியல் கோட்பாடுகளை வகுப்பறையில் பயன்படுத்துதல், "எவ்வாறு கற்பித்தல்" என்ற வினைப்பாட்டில் உள்ளடங்குகின்றது. அதேவேளை ஆசிரியத்துவம் வாண்மையின் இயல்புகள் அனைத்தையும் தம்முள் நிறைவித்த வண்ணமுள்ளது. கல்விமேம்பாடு, சமூக நோக்கு நீண்ட காலப் பயிற்சி முதலியவற்றை உள்ளடக்கி மேல் நோக்கி நிமிர்ந்து நிற்கின்றது. அத்துடன் ஆசிரியத்துவம் உயர் விழுமியங்களோடும் தொடர்புபட்டும் நிற்கின்றது. இதனால் உயர் விழுமியங்களின் மாதிரிகை வடிவினராகி ஆசிரியர் எழுச்சி கொள்கின்றனர்.

மேலும் நவீன ஆசிரியர் சீர்மியராகச் செயற்படல் வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றனர். மாணவரிடத்து இங்கிதமான உளக்கோலங்களை உருவாக்கித் தருதலும் நல்லாற்றுப்படுத்தலும் கூட ஆசிரியரின் கடமைகளாகின்றன. ஆக அறிவு நலத்தோடு உள நலத்தையும் சங்கமிக்கச் செய்தல் ஆசிரியத்துவமாகின்றது.

ஆசிரியம் என்பது கற்பித்தலுடன் மட்டும் கட்டுப்பட்டு நிற்கும் எண்ணக்கருவாகின்றது. ஆனால் ஆசிரியத்துவம் ஆசிரியரின் அந்தஸ்தோடும் கடமையோடும் (Teachers Status of Office) தொடர்புபட்டுள்ளது. இது மாத்திரமன்றி திறன்களோடும் செயல்வினைப்பாடுகளோடும் ஆற்றல்களோடும் இணைந்து நிறைவு பெறுகின்றது.

கற்றல் இலக்குகளினூடாக வாழ்க்கை இலக்குகளை நோக்கி மாணவரை இங்கித அசைவுக்கு உட்படுத்துதல் ஆசிரியத்துவமாகின்றது. அவ்வாறு நகர்ந்து செல்லும் செயற்பாட்டை உராய்வுகளின்றி நெகழ்ச்சிப்படுத்தலும் வாழ்வின் அறை கூவல்களுக்கு முகம் கொடுக்கவல்ல ஊக்கலைத் தருதலும் ஆசிரியத்துவத்தின் எழு பொருட்களாகின்றன.


விளிம்பு நிலையிலும் எல்லை நிலையிலும் ஓரங்கட்டப்பட்ட நிலையிலும் உள்ள பிரதி கூல மெய்தியோருக்கு அறிவுக் கையளிப்பை மேற்கொள்ளல் ஆசிரியத்துவத்தின் பணிக்கூறுகளில் முதன்மை பெறுகின்றது. ஆசிரியத்துவம் நிலைத்த (Static) உறுபொருள் அன்று. மாறாக அது இயக்கத்தின் இயக்கமாகின்றது.

ஆசிரியத்துவமும் தலைமைத்துவமும் உடன்பாடு கொண்ட எண்ணக்கருக்கள். குறிப்பாக ஆசிரியத் தலைமைத்துவம் இருபக்க வினைப்பாடுகளைக் கொண்டது. அதாவது ஒரு பக்கத் தொடர்பாடலன்றி இருபக்கத் தொடர்பாடல் வழி எழும் 'மலச்சியைக் கொண்டுள்ளது.

ஆசிரியத்துவம் உறங்குதல் இல்லை. ஏனெனில் ஆசிரியரது உள்ளம் உறக்கத்தின் போதும் தொழிற்படும். இது பிராய்ட் குறிப்பிடும் அமுங்கிய உள்ளத்தின் தொழிற்பாடு அன்று. மாறாக அறிவுப் பெரு வெளி உசாவலாக இது அமையும்.

பொதுவாக இன்று அனைவருக்கும் தரச்சிறப்புமிக்க கல்வி என்ற செயற்பாட்டின் நகர்வு அறிவொழுக்கம் (Discipline) என்ற எண்ணக்கருவின் மீளாய்வுக்கு இட்டுச் செல்கிறது. 'பல்துறை அறிவெழுக்க வேலை' 'ஊடிணைப்பு அறிவொழுக்க வேலை' 'அதீத அறிவொழுக்கவேலை' என்றவாறான எண்ணக்கருக்கள் சமகாலக் கல்வியில் எடுத்தாளப்படுகின்றன. இந்நிலையில் அறிவொழுக்கக் கையளிப்பு மிகுந்த விமரிசனத்துக்கு உள்ளாக்கப்படுகின்றது. ஆகவே "ஆசிரியம்" "ஆசிரியத்துவம்" குறித்தான பார்வைகள் இன்னும் எம்மிடையே ஆழ அகலப்படவேண்டும்.

தெ. மதுசூதனன்





**தை. தனராஜ்,**
**முதுநிலை விரிவுரையாளர் கல்விப்பீடம்,**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.**

**சிறப்புக்கட்டுரை**

மனித சமூகம் அறிவுமைய சமூகமாக புதிய பரிணாமத்தைப் பெற்றுள்ளது. அதற்கு ஏற்றவகையில் பாடசாலையின் கட்டமைப்பும் அதன் தொழிற்பாடுகளும் மாற்றமடைவதோடு ஆசிரியரின் வகிபங்கும் மாணவர் - ஆசிரியர் உறவுநிலைகளும் கூட மாறவேண்டிய தேவைகள் உள்ளன.

# ஆசிரியரின் நிலைமாற்று வகிபாகம்

## அறிமுகம்

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலின் அசுரவேக வளர்ச்சியும் அதன் தவிர்க்கமுடியாத விளைவுகளான அறிவுப் பிரவாகம் மற்றும் பூகோளமயமாக்கம் போன்றவையும் மனித வாழ்வியலின் பல்வேறு பரிமாணங்களையும் துரிதமான மாற்றங்களுக்கு உள்ளாக்கிவருகின்றன. மனித சமூகம் அறிவுமைய சமூகமாக புதிய பரிணாமத்தைப் பெற்றுள்ளது. அதற்கு ஏற்றவகையில் பாடசாலையின் கட்டமைப்பும் அதன் தொழிற்பாடுகளும் மாற்றமடைவதோடு ஆசிரியரின் வகிபங்கும் மாணவர் - ஆசிரியர் உறவுநிலைகளும் கூட மாறவேண்டிய தேவைகள் உள்ளன. இவ்வாறான புதிய அறைகூவல்களுக்கு விளைத்திறனுடன் துலங்கக்கூடியவர்களாக எந்தளவுக்கு எமது ஆசிரியர்கள் வலுவூட்டம் பெற்றுள்ளனர் என்பது ஆய்வுக்குரிய விடயமாகும். எனினும் தமது புதிய வகிபங்குகளை திறமையுடன் ஆற்றக்கூடியவர்களாக எமது ஆசிரியர்கள் "உருமாற்றம்" பெறவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அதற்கான வழிவகைகளைத் தேடி அறிந்து ஆவன செய்யவேண்டியது கல்வி முகாமைத்துவத்தின் பொறுப்பாகவும் அமைகிறது. ஆசிரியர்களின் இத்தகைய புதிய வகிபாகம் பற்றியும் அதனை ஆற்றுவதற்கு அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய மனப்பாங்குகள், தேர்ச்சிகள் பற்றியும் இக்கட்டுரை சில விடயங்களை முன்வைக்கிறது.

## நிலைமாற்று வகிபாகம் *(Transformational Role)*

வகிபாகம் என்பது அடிப்படையில் அரங்கியல் சார்ந்த ஒரு சொல்லாகும். ஒரு நாடகத்தில் அல்லது திரைப்படத்தில் பல்வேறு பாத்திரங்கள் / வகிபாகங்கள் ஏற்று நடிக்கப்படுகின்றன. சமூக வாழ்விலும் இவ்வாறான வகிபாகங்களை நபர்கள் ஏற்று செயற்படுகின்றனர். உதாரணமாக, ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதில் இன்னார் முக்கிய வகிபாகம் கொண்டிருந்தார் என்றோ, இன்னொருவர் நிறுவனத் தலைவர் என்ற வகிபங்கினையும் குடும்பத் தலைவி என்ற வகிபங்கினையும் சிறப்பாக ஆற்றிவருகிறார் என்றோ நாம் கூறுகிறோம்.

முகாமைத்துவத்தில் வகிபாகம் என்ற எண்ணக்கரு 1970களில் பிரசித்தி பெற்றது. ஹென்றி மின்ஸ்பேர்க் (Henry Mintzberg, 1973 – Quoted in Griffin, 1997) என்னும் அறிஞர், முகாமையாளர் அடிப்படையில் நிறுவனங்களில் பத்து வகிபாகங்களை ஆற்றுகின்றனர் என்பதை தமது ஆய்வின் மூலம் கண்டறிந்தார். முகாமையாளர் ஆற்றுகின்ற தலைமை உரு, தலைவர், தொடர்பாளர், கண்காணிப்பாளர்,

தகவல் பரப்புபவர், பேச்சாளர், முயற்சியாண்மையாளர், பிரச்சினையைக் கையாள்பவர், வளங்களைப் பகிர்பவர், பேரம் பேசுபவர் ஆகிய பத்து வகிபாகங்களை அவர் ஆளிடை வகிபாகம், தகவல்சார் வகிபாகம், தீர்மானம் மேற்கொள்ளும் வகிபாகம் ஆகிய மூன்று பிரதான வகிபாக பகுதிகளுக்குள் இனங்கண்டார்.

ஏறக்குறைய இதே காலப்பகுதியில் நிலைமாற்று தலைமைத்துவம் பற்றிய கருத்துக்களும் தோற்றம் பெற்றன. 1973 இல் டவுண்ரன் (Downton) என்பவர் நிலைமாற்றுத் தலைமைத்துவம் என்னும் பதத்தை முதலில் அறிமுகஞ் செய்தார். எனினும் இதனை முக்கிய தலைமைத்துவ அணுகுமுறையாக பிரபல்யப்படுத்தியவர் பேர்ன்ஸ் (J.M.Burns, 1978) என்னும் அரசியல் சமூகவியலாளராவர். இவர் நிலைமாற்றுத் தலைமைத்துவத்தினை கொடுக்கல்வாங்கல் (Transactional) தலைமைத்துவத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டினார். ஒரு கொடுக்கல்வாங்கல் தலைவர் என்பவர் தனது பணியாளருக்கு உரிய ஊதியத்தை வழங்குதல், அவர்கள் ஒழுங்குவிதிகள், தராதரங்களைப் பேணலை உறுதிசெய்தல் போன்ற உறவுநிலைகளை மாத்திரமே கொண்டுள்ளார். ஆனால் நிலைமாற்றுத் தலைமைத்துவம் என்பது பணியாளர்களின் தேவைகளும் இலக்குகளும் தலைவரின் தேவைகள் மற்றும் இலக்குகளோடு ஒன்றிணைந்த நிலையாகும். நிலைமாற்றுத் தலைமைத்துவத்தை நோர்த்ஹவுஸ் (Northhouse, 2003) என்பார் பின்வருமாறு விளக்குகிறார்.:

**"நிலைமாற்றத் தலைவர் என்பவர் பணியாளர்களின செயலாற்றுகையுடன் மாத்திரமல்லாது அவர்களது முழுமையான ஆற்றலை விருத்தி செய்வதிலும் கவனம் செலுத்துவார். அவர் தன்னைப் பின்தொடர்வோரை (Followership) தொடர்ச்சியாக ஊக்கப்படுத்துவார். நிலைமாற்றுத் தலைவர்கள் உயரிய விழுமியங்களையும் இலட்சியங்களையும் கொண்டிருப்பதால் பணியாளர்கள் மீது ஆழமான செல்வாக்கைச் செலுத்தமுடிகிறது".**

நிலைமாற்றுத் தலைவரின் பண்புக் கூறுகளாக பர்ன்ஸ் பின்வரும் நான்கு அம்சங்களை முன்வைத்தார் :

1. வசீகரம் (Charisma)

நிலைமாற்றத் தலைவர்கள் தன்னைப் பின்தொடர்வோருக்கு ஒரு வகிபங்கு மாதிரிகை (Role model) யாக அதாவது ஒரு கதாநாயகன்/நாயகியாகத் தோன்றுகின்றனர். மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா, அன்னை தெரேசா, வேல்ஸ் இளவரசி டயானா போன்றோர் இத்தகைய வசீகரத்தன்மையைக் கொண்டிருந்தனர் எனக் கூறப்படுகின்றது. வசீகரத்தன்மை பல்வேறு பரிமாணங்களைக் கொண்டிருக்கலாம். அன்னை தேரேசாவும் நெல்சன் மண்டேலாவும் அடிப்படையில் வேறுபட்டிருந்தாலும் வசீகரம் என்பது அவர்களது பொதுத்தன்மையாகும்.

2. உயிர்ப்பூட்டும் ஊக்கல் (Inspirational Motivation)

நிலைமாற்றத் தலைவர்கள் ஒரு தரிசன நோக்கினைக் கொண்டிருப்பதோடு அதனை வெற்றிகரமாக தம்மைப் பின்தொடர்வோருக்கு கடத்துகின்றனர். அத்தரிசன நோக்கினை அடைவதற்காக தமது மக்களை அவர்கள் தொடர்ச்சியாக ஊக்கப்படுத்துவதோடு அவர்களது அடைவுமட்டங்களை உயரிய நிலைக்கு இட்டுச் செல்கின்றனர். இந்நிலைமைக்கு மிகச் சிறந்த உதாரணம் மலேசிய நாட்டின் முன்னாள் முதலமைச்சர் மகத்தீர் மொகமட் ஆகும். அவர் தனது Vision 2020 மூலம் மலேசியர்களை ஒன்றிணைத்தோடு தனது நாட்டினை முன்னேற்றப் பாதையில் வழிநடத்திச் சென்றார்.

3. அறிவார்ந்த தூண்டல் (Intellectual Stimulation)

அறிவார்ந்த தூண்டல் என்பது பின்தொடர்வோர் தாமே தமது புத்தாக்கச் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபடச் செய்வதாகும். ஒருவர் பழைய நம்பிக்கைகள், விழுமியங்களை புதிய கோணத்தில் பார்க்காமல் அல்லது அவற்றுக்கு சவால் விடுக்காமல் புதியவற்றை படைக்க முடியாது. இது சிந்தனைத் தூண்டல் மூலமே சாத்தியமாகும். தலைவர்கள் தம்மையும் தமது பின்தொடர்வோரின் விமர்சனத்துக்கு உட்படுத்திக் கொள்வதோடு சுய விமர்சனத்துக்கும் உட்படுத்திக் கொள்ள வேண்டுவது நிறுவன வளர்ச்சிக்கு மிகவும் அவசியம். இதன் மூலமே கற்கும் நிறுவனங்களை (Learning Organization) உருவாக்க முடியும்.

4. தனியாள் ரீதியான அக்கறை (Individualized Consideration)

நிலைமாற்றத் தலைவர்கள் தமது பணியாளரின் பிரச்சினைகளைத் தனித்தனியாகச் செவிமடுப்பதோடு அவர்கள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு உதவுகின்றனர். எல்லாப் பணியாளர்களையும் அவர்கள் ஒட்டுமொத்தமாக நோக்காது எவரெவர்க்கு என்னென்ன தேவையோ அவற்றை செய்து கொடுக்க அவர்கள் முனைகின்றனர். பணியாளர்களில் சிலருக்கு ஆதரவு தேவைப்படலாம் சிலருக்கு அதிகாரங்கள் தேவைப்படலாம் சிலருக்கு வழிகாட்டல் அவசியப்படலாம். நிலைமாற்றத் தலைவர்கள் தமது பின்தொடர்வோர் பற்றி தனித்தனியாகக் கவனமெடுத்து அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்கின்றனர்.

நிலைமாற்றுத் தலைமைத்துவம் பற்றிய கோட்பாட்டிலிருந்து தான் நாம் இன்று சிலாகித்துக்கூறும் ஆசிரியர்களுக்கான நிலைமாற்று வகிபாகம் ஊற்றெடுக்கிறது எனக் கூறலாம். இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவை அனைத்தையும் பற்றி இச்சந்தர்ப்பத்தில் விளக்குவது சாத்தியமானதல்ல.

### நிலைமாற்று வகிபாகம் ஏன் அவசியமானது?

உலகம் இன்று அதிவேகமான மாற்றங்களுக்கு உள்ளாகின்றது. இன்று புத்தம் புதிதாய் தோன்றும் விடயங்கள் பழங்கதையாய்ப் போய்விட சில மாதங்கள், சில நாட்களோ கூட போதுமானவைகளாக உள்ளன. மனித சமூகம் தனது தோற்றத்திலிருந்து இன்றுபோல் என்றுமே இவ்வளவு துரிதமான மாற்றங்களுக்கு முகம் கொடுக்கவில்லை எனக் கூறப்படுகிறது. தகவல் தொடர்பாடல் தொழில்முறையியலிலும், போக்குவரத்திலும் ஏற்பட்டுவருகின்ற அசுர வளர்ச்சியும் அதன் விளைவான அறிவுப் பிரவாகமுமே இதற்கு அடிப்படையான காரணங்கள் எனக் கூறலாம்.

இத்தகைய "மாற்ற வெள்ளத்தில்" அள்ளுண்டு போகாமல் இருக்க வேண்டுமெனில், பாடசாலைகளும் மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளது. பல நாடுகளில் பாடசாலைகளின் கட்டமைப்பு, செயற்பாடுகள் மற்றும் சமூகத்தில் அதன் வகிபங்கு ஆகியவை வேகமான மாற்றங்களுக்கு உள்ளாகின்றன.

மரபுசார்ந்த கற்பித்தலை மையமாகக் கொண்ட பாடசாலைகளைப் பற்றி கார்ள் றொஜர்ஸ் (Carl Rogers, 1980 – Quoted in Law and Glover, 2000) என்பார் பின்வரும் அம்சங்களைக் குறிப்பிட்டார்:

மரபுசார்ந்த பாடசாலைகளில் -

- ஆசிரியர்கள் சகல அறிவையும் கொண்டுள்ளனர். அவற்றை மாணவர்கள் வகுப்பறையில் குந்தியிருந்து கவனமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- ஆசிரியர்கள் வழங்கும் அறிவை எந்தளவுக்கு மாணவர்கள் பெற்றுக்கொண்டார்கள் என்பதை சோதனைகளும் பரீட்சைகளும் அளவிட்டுக் காட்டும்.
- ஆசிரியர்கள் வலுவாண்மை (Power) யைக் கொண்டிருக்கின்றனர். மாணவர்கள் அதற்குப் பணிந்து நடக்கவேண்டும்.
- ஆசிரியரின் அதிகாரத்தின் கீழேயே வகுப்பறைகள் செயற்படுகின்றன.
- மாணவர்களில் நம்பிக்கை கொள்ள முடியாது. ஆசிரியரின் மேற்பார்வை, கட்டுப்பாடுகளின் கீழேயே அவர்கள் திருப்திகரமாக தமது வேலைகளைச் செய்வர்.
- மாணவர்களைச் சிறப்பாகக் கட்டுப்படுத்துவதற்கு அவர்களுக்கு ஆசிரியர் மீது ஒரு "பயம்" இருக்கவேண்டும்.
- மாணவர்களின் தனிப்பட்ட இலக்குகளை ஆசிரியரே உருவாக்கி வழங்கவேண்டும்.
- ஜனநாயம் என்பது கற்பிக்க வேண்டிய ஒரு பாடப் பொருளாகும். வகுப்பறையில் அதனை நடைமுறைப்படுத்த முடியாது.
- மாணவர்களின் அறிவு வளர்ச்சியே மிகவும் முக்கியமானது, மனவெழுச்சி விருத்தி போன்றவை மிக முக்கியமான விடயம் அல்ல.
- இவ்வாறான சிந்தனை எவ்வளவு பிற்போக்கானது என்பதை விளக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் எழுபதுகளில் இவ்வாறான கல்விச் சிந்தனைகளே மேம்பட்டுநின்றன.

ஆனால் பாடசாலை கற்பிக்கும் நிறுவனம் என்ற நிலையிலிருந்து கற்கும் நிறுவனமாக (Learning Organization) மாறுநிலை அடைந்தபோது பாடசாலை பற்றிய சிந்தனைகளிலும் பாரிய மாற்றங்கள் (Paradigm Shift) நிகழ்ந்தன. அதன்படி ஒரு கற்கும் நிறுவனம் என்றவகையில் பாடசாலைகள் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. (Ferguson, 1982, Quoted in Law and Glover, 2000):

- எவ்வாறு கற்கவேண்டுமென்பதை கற்றுக் கொள்வதில் குவிமையம்.
- கற்றல் ஒரு முடிவில்லாத நீண்ட பயணம்.
- படைப்பாற்றல் விருத்தி செய்யக்கூடிய விரிசிந்தனை.
- தனிப்பட்ட மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றலை வெளிக்கொணர்தல்.
- மாணவரும் ஆசிரியரும் கற்றல் செயற்பாட்டில் பங்காளிகள்.
- ஆசிரியருக்கும் மாணவரிடமிருந்து கற்றுக்கொள்ளும் தேவை உள்ளது.
- மிகவும் நெகிழ்வான கட்டமைப்பு கற்பித்தலையும் கற்ற அனுபவங்களையும் கலத்தல்.
- அருவமான அறிவுடன் பரிசோதனைகளும், அனுபவங்களையும் ஒன்றிணைத்தல்.
- கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்கு சாதகமான பொருத்தமான தொழின்முறையியல்.
- சாதகமான கற்கும் சூழல்.
- சமுதாயத்திலிருந்து உள்ளீடுகளை வரவேற்றல்.
- கல்வி ஒரு வாழ்க்கை நீடித்த செயன்முறை. பாடசாலைக்கு அப்பாலும் அது விரிகிறது.

ஒரு விளைதிறன்மிக்க பாடசாலை மேற்படி பண்புகளையும், குவிமையங்களையும் கொண்டிருக்க வேண்டும் என்பது எண்பதுகளில் முனைப்புப் பெற்றது. விளைதிறன்மிக்க பாடசாலை பற்றிய ஆய்வுகளும் முதன்மை பெற்றன.

### ஆசிரியரின் வகிபங்கு மாற்றம்

எந்தவொரு கல்விமுறைமையிலும் மாணவருக்கு அடுத்தபடியான மிக முக்கியமான தொகுதியினர் ஆசிரியர்களாகவே இருப்பதால் மேற்படி பண்புகளைக் கொண்ட ஒரு விளைதிறன் மிக்க பாடசாலை

ஆசிரியர்களின் ஒத்துழைப்பின்றி சாத்தியப்படாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே ஆசிரியர்களின் மரபுசார்ந்த "கற்பிப்போன்" என்னும் வகிபங்கும் மாற்றமடைந்தது. ஆசிரியர் ஒரு மருத்துவர், பொறியியலாளர் போன்ற வாண்மையாளராக (Professional) நோக்கப்பட்டார். அனுசரணையாளர், தொடர்பாளர், மாற்ற முகவர், மதிப்பீட்டாளர் போன்ற தலைமைத்துவ பண்புகளைக் கொண்டவராக ஆசிரியர் உருமாறுவதோடு மாணவரின் உருமாற்றத்துக்கும் அடித்தளமாக இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இத்தகைய சிந்தனைகளும், எதிர்பார்ப்புகளுமே ஆசிரியரின் நிலைமாற்ற வகிபங்குக்கு காரணிகளாக அமைந்தன.

ஆசிரியர் தமது நிலைமாற்று வகிபங்கினை செவ்வனே ஆற்றுவதற்கு பின்வரும் பண்புக் கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது :

- மாணவரிடையே தரிசனநோக்கினை (Vision) விருத்திசெய்து அதனை அடைவதற்கு அவர்களை இடையறாது ஊக்குவித்தல்.
- மாணவர்கள் மீது நம்பிக்கையும் விசுவாசத்தையும் கொண்டிருப்பதோடு உடன்பாடான மனப்பாங்குகளை வெளிப்படுத்தல்.
- மாணவர் அடையும் சிறு வெற்றிகளைக் கூட முதன்மைப்படுத்தி கொண்டாடுதல்.
- உதாரணமான நடத்தையையும் நட்பு, சகிப்புத்தன்மை, பண்புடைமை, நெகிழ்ச்சி, ஜனநாயகப் பண்பு ஆகியவற்றையும் கொண்டிருப்பதோடு அவற்றை வெளிப்படுத்தலும் வேண்டும்.
- சுய விளம்பரம், அங்கீகார எதிர்பார்ப்பு போன்றவற்றை தவிர்த்து பாடசாலை அணியில் ஒரு பொறுப்புமிக்க உறுப்பினராகச் செயற்படுத்தல்
- தேவையான மாற்றங்களை ஏற்று அவற்றை நடைமுறைப்படுத்த மனப்பூர்வமாக ஒத்துழைத்தல்.
- பெற்றார் உட்பட பாடசாலை சமுதாயத்துடன் பயனுள்ள இடைவினைகளை மேற்கொள்ளுதல்.
- மாணவரின் கற்றலுக்கும் அவர்களது பூரண விருத்திக்கும் பொறுப்புடைமை மாத்திரமின்றி வகை கூறலையும் கொண்டிருத்தல்.
- தமது வாண்மைத்துவ இயலளவுகளை தொடர்ச்சியாக மேம்படுத்திக் கொள்ளுவதற்காக வாண்மைத்துவ தேர்ச்சிகளையும், மனப்பாங்குகளையும் தொடர்ச்சியாக இற்றைப்படுத்திக் கொள்ளுதல்.

## முடிவுரை

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலின் வளர்ச்சி மற்றும் அறிவுப் பிரவாகம் போன்ற காரணிகளினால் மானிட வாழ்வு வேகமான மாற்றங்களுக்கு உட்படுகிறது. இம்மாற்றங்கள் பௌதிக, சமூக கட்டமைப்புக்கள், செயன்முறைகள் உட்பட மானிட சிந்தனைகளிலும் உறவு முறைமைகளிலும் ஆழமான மாற்றங்களை ஏற்படுத்திவருகின்றன. இம்மாற்றங்களுக்கு பாடசாலைகள் விதிவிலக்கல்ல. ஒப்பீட்டளவில் இலங்கை போன்ற வேரூன்றிய மரபுரிமைகளைக் கொண்ட நாடுகளில் கல்வி முறைமை மற்றும் கட்டமைப்புகளிலும் செயன்முறைமைகளிலும் காத்திரமான மாற்றங்களைத் துரிதமாக அறிமுகஞ் செய்வதோ, நடைமுறைப்படுத்துவதோ சிரமமான காரியமாகும். எனினும் மாற்றங்கள் தவிர்க்க முடியாததவையாகும். காலத்தின் மாற்றங்களுக்கும், தேவைகளுக்கும் நெகிழ்ந்து கொடுக்காத நிறுவனங்களினால் சமகாலத் தேசிய அறைகூவல்களுக்கும், தேவைகளுக்கும் வெற்றிகரமாக முகங்கொடுக்க முடியாது போய்விடலாம். சமகாலத்தின் புதிய செல்நெறிகளை உள்வாங்கிய விளைதிறன் மிக்க நிறுவனங்களாக எமது பாடசாலைகளை மாற்றியமைக்கும் பாரிய பணியில் பெரும்பகுதி ஆசிரிய சமூகத்தைச் சார்ந்ததே என்பதில் எவ்வித மாறுபாடான கருத்துக்கும் இடமில்லை. இந்த பின்னணியில் தான் ஆசிரியர்கள் நிலைமாற்று வகிபாகத்தை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வகிபாகத்தை விளைதிறனுடன் ஆற்றக்கூடியதாக தமது வாண்மைத்துவ இயலளவுகளையும் தேர்ச்சிகளையும் ஆசிரியர்கள் விருத்திசெய்து கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்.

வாசகர் கவனத்திற்கு !

"ஆசிரியரின் நிலைமாற்று வகிபாகம்" என்னும் தலைப்பில் முதுநிலை விரிவுரையாளர் தை.தனராஜ் எழுதிய கட்டுரை கடந்த இதழில் இடம் பெற்றிருந்தது. அக்கட்டுரையில் சில பகுதிகள் தவறுதலாக விடுபட்டிருந்தன. ஆகவே அக்கட்டுரை முழுமையாக மீளவும் இங்கு பிரசுரமாகின்றது. தவறுக்கு வருந்துகின்றோம்.

ஆசிரியர்.





ந. பார்த்திபன்
வ/தேசிய கல்விக் கல்லூரி,
வவுனியா.

ஆசிரியத்துவமும் வாசிப்பும்

புத்தகங்கள் இல்லா வீடு ஜன்னல் இல்லாத வீட்டைப் போன்றது. நூலகங்கள் உலகின் எட்டாவது அதிசயம். நல்ல நூல்களே நல்ல நண்பர்கள்.

# வாண்மைத்துவமிக்க ஆசிரியத்துவத்திற்கு வாசிப்பின் இன்றியமையாத்தன்மை

எங்கே ஒரு நூலகம் திறக்கப்படுகின்றதோ அங்கே ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படும் என்பது நூலகத்தின் தாற்பரியத்தையும் அதன் வினைத்திறனான பயன்பாட்டையும் எடுத்துக்காட்டுகிறது. யுனெஸ்கோ அமைப்பு "நூலகம் என்பதனைக் கல்வி அறிவுக்கான உயிருள்ள சக்தி என்றும், கருத்துத் தகவல் மையம் என்றும், பண்பாட்டை வலியுறுத்தும் அமைப்பு என்றும் மக்களுக்கும் நாட்டுக்கும் இடையே அமைதியையும் புரிதலையும் உண்டாக்குகின்ற இன்றியமையாத தரகர்" என்றும், வரையறுக்கின்றது. சிறைச்சாலை மூடப்படுவதற்கும் மக்களுக்கும் நாட்டுக்கும் இடையே அமைதியையும் புரிதலையும் உண்டாக்குகின்ற இன்றியமையாத தரகர் என்று குறிப்பிடுவதற்கும் உரித்துடையது நூலகம் என்ற நிலையில் நூலகமும் அதன் விளைதிறனான வாசிப்பும் எமக்கு எத்துணை அவசியம் என்பதை அனைவரும் உணரலாம். ஆயினும் இதனை நாம் எவ்வளவு தூரம் உணர்ந்தோமென்பது கேள்விக்குறியே.

வாசிப்பின் அவசியம் பற்றி தேவையான அளவிற்கு, மனதில் பதியும் வண்ணம் குறிப்பிட்டாயிற்று. வாசிக்கத் தெரியாதவன் யோசிக்கத் தெரியாதவன். புத்தகங்கள் இல்லா வீடு ஜன்னல் இல்லாத வீட்டைப் போன்றது. நூலகங்கள் உலகின் எட்டாவது அதிசயம். நல்ல நூல்களே நல்ல நண்பர்கள். ஒரு மனிதனின் வாழ்விற்கு தேவையான அனைத்தையும் அள்ளித்தரும் ஓர் அட்சயபாத்திரம் போன்றதே வாசிப்பு. ஆதவனைப் போல எம்மைச் சுடர் வீசச் செய்யும் வல்லமை வாசிப்புக்கு மட்டுமே உண்டு. வாசிப்பதனால் ஒரு மனிதன் பூரணத்துவம் அடைகின்றான். நன்றாக வாசிப்பவன் நடமாடும் பல்கலைக்கழகம். மேற்கூறிய கருத்துக்கள், தத்துவங்கள், அனுபவங்கள் பல பலராலும் கூறப்பட்டுள்ளன. இருந்தும் எமது மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட்டு நாம் தொடர்ந்து வாசிக்கின்றோமா? நன்றாய் வாசித்துப் பெறும் பயன்களுக்குப் பதிலாக நவீன தொடர்பு சாதனங்களினூடாக கிடைக்கும் தரமற்ற பல நிகழ்வுகளையும் பார்த்து இரசிக்கவே விரும்புகின்றோம். பொன்னான நேரத்தை பொழுது போக்கென்ற பெயரில் வீணடிக்கின்றோம்.

'நீ நூலைத் தேடு உலகம் உன்னைத் தேடும்' என்பது பழமொழி. 'அறியாமை என்னும் இருட்டறைக்குள் நிற்கும் ஒருவன் நூல்களாகிய சாளரங்களைத் திறப்பானாயின் மட்டுமே அறிவெனும் ஒளியைப் பெற்றுக் கொள்வான்'

என்பது மூதறிஞர்கள் கூற்று. "என்னை எச்சந்தர்ப்பத்திலும் கைவிடாத நல்ல நண்பர்கள் நூல்களே." எனவும் வாசிப்பின் மூலம் யோசித்து அதனை நேசிப்போம்" என்றார் ஓர் ஆங்கிலக் கவிஞர். "யாரோ செய்த தவத்தால் நாங்கள் பெற்ற வரங்கள் : புத்தகங்கள்" என்று குறிப்பிட்டார் கவிஞர் வைரமுத்து. "புத்தகங்கள் இல்லாத வீடு ஆத்மா இல்லாத உடலைப் போன்றது" என்று குறிப்பிட்டார் அறிஞர் ஸிஸேரா. "நான் அறிஞர் பலருடைய கட்டுரைகளைப் படித்து அவற்றைப் போன்றே எழுதிப் பழகி நல்ல மொழிநடையை, எழுதும் திறனைப் பெற்றேன்" என்று குறிப்பிடுகிறார் அறிஞர் ஸ்டீபன். "என்னைச் சிறையில், தனி அறையில் உணவு, போதியளவு நீர் போன்றன தராவிடினும் ஒரு நூலைத் தராது விடுவது தான் பெரிய தண்டனை" என ஓர் அறிஞர் குறிப்பிட்டார்.

தேவநேயப் பாவாணர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*"மனிதரெலாம் அன்புநெறி காண்பதற்கும்*
*மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து*
*தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்*
*சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்*
*இனிதினிதாய் எழுந்த உயர் எண்ண மெல்லாம்*
*இலகுவது புலவர்தரு கவடிச் சாலை;*
*புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்*
*புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்"*

மேலும் வான்மறை தந்த வள்ளுவரும் கல்வி, அறிவு என்பன பற்றி பல இடங்களில் குறிப்பிட்ட போதும் பின்வரும் குறள், நூல்களின மகத்துவத்தை பெரிதும் எடுத்துக் காட்டுகின்றது.

*"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு*
*கற்றனைத் தூறும் அறிவு"*

மேலே கூறப்பட்ட குறளின் கருத்தானது; ஒரு கிணற்றை எவ்வளவு ஆழமாகத் தோண்டுகையில் தண்ணீர் எவ்வளவு அதிகமாகக் கிடைக்கின்றதோ அது போல் நாம் நூல்களை அதிகமாக வாசிக்க அறிவெனும் பெரும் புதையல் கிடைக்கும் என்பதாகிறது.

மேற்கூறியவை யாவும் நூலகம், வாசிப்பு, பயன்பாடுகள், இன்றியமையாத் தன்மைகள் போன்றவற்றையே எடுத்துரைக்கின்றன. இவை யாவும் பெரும்பாலும் அநேகருக்கும் தெரிந்தவையே. ஆயினும் நாம் இப்போது கவனம் செலுத்த வேண்டியது என்ன? ஏன் விரும்பி வாசிக்கின்றார்களில்லை? நூலகம் நோக்கி ஏன் செல்கின்றார்களில்லை? ஓய்வு நேரங்களைப் பயனுள்ள முறையில் செலவு செய்ய ஏன் முயற்சிக்கின்றார்களில்லை? இவ்வாறான ஆதங்கத்துடனான பல்வேறு கேள்விகளுக்கெல்லாம் விடைகள் தான் என்ன?

"வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு அல்லது ஊக்குவிப்பதற்கு பொருத்தமான இடம் பாடசாலையே" என்பது கல்வியியலாளர் கருத்து. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்ற பழமொழிக்கேற்ப சிறியவயதில் வாசிக்கும் பழக்கம், ஆர்வம் ஏற்பட்டால் அது பெரியவர்களான பின்பும் தொடரும். மாறாக பெரியவர்களான பின் வாசிப்பின் பயன் அறிந்து வாசிப்பவர்கள் மிகக் குறைவு. இதற்கு நல்லதோர் உதாரணம்; முதுகலைமாணி கற்கை நெறியை மேற்கொண்ட பலர் தமது ஒப்படைக்குத் தேவையான நூல்கள், கல்விச் சஞ்சிகைகள், பத்திரிகைக் கட்டுரைகள் எனத் தேடித் தேடிப் படித்தார்கள். பரீட்சையும் நிறைவு பெற்று, ஒப்படைகள் எழுதும் தேவையும் இல்லாத போது அந்த வளர்ந்த ஆசிரியர்களே நூலகம் வருவதையோ, புத்தகங்கள் இரவல் வாங்கிச் செல்வதையோ செய்யவில்லை என்று ஒரு நூலகர் குறிப்பிட்டார். ஆக, இவ்வாறான மனப்பாங்கு கொண்டவர்களுக்கு தொடர்ந்து படிப்பும் பரீட்சையும் இருப்பது ஒன்றே தான் இவர்களை வாசிக்கத் தூண்டுமென்பது புரிகின்றது.

"ஒருவன் எப்போது கற்பதை நிறுத்துகிறானோ அப்போதே கற்பிப்பதை நிறுத்த வேண்டும்" என்று அறிஞர்கள் குறிப்பிடுவர். அதிலும் இன்று நவீன தொடர்பு சாதனங்களின் பெருக்கமும் வேகமான தகவல்களின் வருகையும் அறிவின் பெருக்கத்தைக் கொண்டுவரும் நிலையில் ஆசிரியர்கள் தமது அறிவைக் கூட்டுவதைக் கூட செய்கின்றார்களில்லை. முன்மாதிரியாக தனது நடத்தை மூலம் மாணவர்களை வழிகாட்ட வேண்டியவர்கள் இந்த முன்மாதிரியை மேற்கொள்ளும் மனப்பாங்கற்றவர்களாக காணப்படுகின்றார்கள். வாசித்து, கிரகித்து பொருளை அறிந்து கொள்ளும் வல்லமை பெற்றவர்களாக இருந்தும் அக்கறையுடனான வாசிப்பைச் செய்வதில்லை. உண்மையில் தொலைக்காட்சியில் தொடர் நாடகங்களைப் பார்த்து பலமணி நேரங்கள் வீணடிக்கும் பலர் வாசித்தறிய விரும்புவதில்லை. அந்த நாடகங்ளின் கரு, கருத்து, சொல்லும் முறை என்பன பயனுள்ளதாக இருப்பினும் அதற்கான நேரத்தின் அளவு (விளம்பரம், விபரங்கள்) நேரச் செலவீனம் என்பன அதனைத் தொல்லைக்காட்சியாகவே மாற்றுகின்றன. அநேகமான நாடகங்கள் நாவல்களாக வெளியிடப்பட்டுள்ளன. அவற்றை வாசித்து (கரு, கருத்து, படிப்பினை, பயன்பாடு) அவற்றின் சிறப்பைக் கிரகிக்க முடியாதவர்கள் தான் அதிக நேரத்தை அதற்காகச் செலவு செய்கின்றார்கள்.

தீட்டத் தீட்ட கத்தி கூர்மையடைவது போல் தேடத் தேட புத்தி கூர்மையடையும். தொடர்ந்து வாசிக்காததால் வாசிப்பின் போது இடர்ப்படும் பலரை, குறிப்பாக மாணவர்களை நாம் பார்க்கிறோம். பல்வேறு வகையான வாசிப்பு வகைகளைத் தெரிந்து கொண்ட போதும் அவற்றுள் ஏதாவதொரு வகையைப் பயன்படுத்தி வாசிக்கத் தவறுகின்றார்கள்.

இந்நிலையில் வாசிப்பு மாதம், வாசிப்புச் செயற்பாடு, வாசிக்கத் தூண்டும் போட்டிகள் எனப் பல்வேறு பயனுள்ள ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். வாசிப்பு மாதம் என்ற சிறப்பான முயற்சி ஒன்றை 2005 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முழுவதும் தினக்குரல் பத்திரிகை நிறுவனத்துடன் அகவிழி சஞ்சிகை இணைந்து மேற்கொண்ட முயற்சி விளைதிறனான நல்ல முயற்சியாகும். அந்தக் கால கட்டத்தில் பல மாணவர்களும் அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர் என பல்வேறு தரப்பினரும் பயனுள்ள தேடல்களை மேற்கொண்டு வாசிப்புத் தொடர்பான கனதியான, காத்திரமான கட்டுரைகளை எழுதியுள்ளார்கள். இது மாணவர்கள் மத்தியில் மட்டுமன்றி ஆசிரியர்களிடையேயும் புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்தது.

மட்டக்களப்பு ஆரையம்பதி மகா வித்தியாலய அதிபர் திரு.செ. மகாநாதசிவம் வாசிப்பை ஊக்குவிக்க செய்ய வேண்டியவை என்ற தலைப்பில் பாடசாலையிலுள்ள நூலகங்களுக்கு எல்லா வகுப்பு மாணவர்களுக்கும் நிரலணியில் கட்டாயம் ஒரு பாடவேளை ஒதுக்கப்பட வேண்டும் எனவும், வகுப்பு மட்டங்களிலும் பாடசாலை மட்டத்திலும் வாசிப்புப் போட்டியை ஏற்பாடு செய்து, வாசித்த விடயங்களில் வினா விடைப் போட்டி, தமது உரைநடையில் எழுதும் போட்டி போன்றவற்றை நடாத்தி ஊக்குவிக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் சில பாடசாலைகளில் நேரசூசி தயாரிக்கும் போது நூலகப் பாட வேளை போடப்படுவதில்லை. டாக்டர். ந.சுப்புரெட்டியார் "1, 2, 3 வகுப்புகளுக்கு வாரத்திற்கு ஒரு பாடவேளையும் 4,5,6 வகுப்புகளுக்கு இரண்டு வாரங்களுக்கு ஒரு பாடவேளையும் ஒதுக்கப்பட வேண்டும்" என்றும் "வகுப்பு ஆசிரியர்கள் நூலகத்திற்கு பொறுப்பை ஏற்றால் தான் நூலகப் படிப்பு திறமையாக நடைபெற இயலும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"ஒரு பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் கூடுதலான செல்வாக்கினைப் பெற்றுக் கொள்வது வாசிப்பேயாகும்" என்று கூறுகிறார் ஆசிரிய ஆலோசகர் பெ.பேரின்பராஜா. இதற்காகவே பலகோடி ரூபா செலவில் இலவசப் பாடநூல்கள் பாடசாலைகளினூடாக வழங்கப்படுகின்றது. ஆனால் இலவசமாக வழங்குவதனாலோ என்னவோ மாணவர்கள் இப்புத்தகங்களைக்கூட கருத்தூன்றி வாசிப்பதில்லை. அதற்கான பயிற்சிகளும் ஆசிரியர்களால் கொடுக்கப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. வகுப்பறைகளைப் பொறுத்தவரை வாசிப்புப் பயிற்சியை வழங்கும் போது பாடநூல்களை மட்டும் கவனத்தில் கொள்ளாது, பாடநூல்களுக்கு மேற்பட்ட பதிவுகளையும் வெளியீடுகளையும் பயன்படுத்துதல் வேண்டும். அப்பொழுதே வாசிப்புப் பற்றிய தேர்ச்சியை மாணவர்கள் விரைவாக அடைந்துகொள்வார்கள். வகுப்பறைகளில் பாடநூல்களோடு விளம்பரங்கள், அறிவித்தல்கள், அழைப்பிதழ்கள், கடிதங்கள், தகவல் துணுக்குகள், பொருட்களைச் சுற்றியுள்ள உறைகள், சுவரொட்டிகள், பத்திரிகைத் தலைப்புகள், பத்திரிகை துணுக்குகள், சஞ்சிகைகள் முதலியவற்றை வாசிக்கச் செய்வதனூடாக வாசிப்புப் பயிற்சியைக் கூட்டுவதுடன் மொழியாற்றலையும் வளர்த்துக் கொள்ளலாம். இவை வாசிப்பிற்கு கற்பித்தல் துணையாகவும் வாசிப்புச் சூழலைச் சிறப்பாக ஏற்படுத்தவும் உதவும்.

யுனெஸ்கோ தன் நோக்காக "வாசிப்போரிடையே நூலார்வத்தைத் தூண்டி வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்துதல், வாசிப்போர் சுயமாகவே அறிவேடுகளிலிருந்து விடயங்களைக் கற்றுக்கொள்ளும் ஆற்றலை அபிவிருத்தி செய்தல், கற்போருக்கும் கற்பிப்போருக்கும் பாடங்களுக்கு அனுசணையான நூல்களையும் அவர்தம் தொழில் அபிவிருத்திக்கான அறிவேடுகளையும் கொடுத்து உதவுதல், பாடவிதானத்துக்குத் துணைபோகும் அறிவேடுகளைச் சேகரித்து வைக்க உதவுதல், வாச்கர்களினது ஓய்வு நேரத்தினைப் பயனுள்ளதாகக் கழிக்க உதவுதல்" போன்றவற்றை கொண்டிக்கிறது. இங்கு கற்பிப்போருக்கும் பாடங்களுக்கு அனுசரணையான நூல்களையும் அவர்தம் தொழில் அபிவிருத்திக்கான அறிவேடுகளையும் கொடுத்து உதவுதல் என்பதற்கேற்ப ஆசிரியர்கள் செயற்படுகிறார்களோ என்பது கேள்விக்குறியே. ஆசிரியர்கள் மேலதிக வாசிப்புக்கு தங்களை உட்படுத்துவதில்லை என்பது பெரும்பாலும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**"1, 2, 3 வகுப்புகளுக்கு வாரத்திற்கு ஒரு பாடவேளையும் 4,5,6 வகுப்புகளுக்கு இரண்டு வாரங்களுக்கு ஒரு பாடவேளையும் ஒதுக்கப்பட வேண்டும்"**

வாசிப்பதன் மூலம் தர்க்கரீதியானதும் விமர்சனக் கண்ணோட்டத்துடனுமான சிந்தனை வளர்க்கப்படுகின்றது. ஒரு மனிதனின் வாசிப்புக்கேற்பவே அவன் ஞாபகசக்தியும் விருத்தியாகின்றது. ஒன்றை வாசித்து விளங்கி வெளிப்படுத்தும் ஆற்றலே மெய்யான மொழியாற்றலாகும். வாசிப்பினால் மன அமைதியையும் ஓய்வு நிலையையும் கலாரசனையுணர்வையும் பெறமுடிகின்றது. மாணவர்களுக்கு வாசிப்பின் மகத்துவத்தை உணர்த்த ஆசிரியர்கள் முன் வரவேண்டும். அதற்கு முன் ஆசிரியர்கள் முன்மாதிரியானவர்களாகத் திகழ வேண்டும். நூல்கள் வாங்குவதிலும் நூல் வெளியீட்டு விழாக்களில்

கலந்து கொள்வதிலும் கூட ஆசிரியர்கள் அக்கறை காட்டுவதில்லை.

ஒப்படைகளிலோ, பரீட்சை விடைகளிலோ தான் சொல்லிக் கொடுத்த விடைகளை, மேற்கோள்களைத் தவிர்த்து வேறு விடைகளை மேற்கோள்களை எழுதினால் புள்ளி வழங்கமாட்டார்கள் என்ற மனோ-நிலையும், ஆசிரியர்களுக்கே வேறு மேற்கோள்களும், விடயதானங்களும் தெரியாது என மாணவர்கள் கேலி செய்வதையும் பார்க்கிறோம். காலா காலமாக பல்கலைக்கழகங்களிலும், பாடசாலைகளிலும், இன்று தனியார் கல்வி நிலையங்களிலும் கொடுக்கப்-படும் பாடக்குறிப்புக்கள் மாற்றத்திற்கு உட்படுத்தக்-கூடா குர்ஆனோ, பைபிளோ என்று கேட்குமள-விற்கு ஆசிரியர்களுடைய தேடுதல் அமைந்துள்ளது.

வாசிப்பின் பயன்களை ஒவ்வொருவரும் உணர-வேண்டும். குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு மணி நேர-மாவது வாசித்து புதிய விடயங்களையும் அறிவையும் தெளிவையும் பெற மாணவர்களைப் பக்குவப்படுத்த-வேண்டும். பரீட்சை விடைகளோ, ஒப்படைகளோ, கட்டுரைகளோ மேலதிக வாசிப்பினூடாக அடிக்-குறிப்பும், உசாத்துணை நூல்களும் போட்டு எழுதப் பழக்கப்படுத்த வேண்டும். நூல் கொள்வனவு செய்-யும், நூல்களை நினைவுப் பரிசாக வழங்கும், ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழியில் போக்க நூல்களை கைவசம் வைத்திருக்கும் பண்புகளை வழங்க வேண்டும். ஒரு மனிதன் எப்படிப்பட்டவன் என்பதை அவன் நண்பர்களைப் பார்த்து அறிவது போல வாசிக்கும் நூல்களையும் பார்த்து அறியலாம் என்பதை உணர்ந்து வாசிக்கப்பழக வேண்டும்.

## 50 வது இதழை நோக்கி அகவிழி....

எஸ்.கே.யோகநாதன், பீடாதிபதி, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

மனித வாழ்வியலின் வரலாற்றுக் கோட்டின் வழியே தனது துலக்கமான பதிவுகளை ஆணித்தரமாகப் பதித்து கல்விப்புலத்திற்கும், சமூகத்திற்கும், தனிமனிதனுக்கும் அணி செய்யும் ஒரு நூலாக அகவிழி மிளிர்கின்றது. இது கல்விப்புலத்தில் கற்றலை இலகுபடுத்தும் ஒரு நூலாகவும், வளர்ந்து வரும் இளைய தலைமுறையினரை நவீனத்துவத்தை உள்வாங்கிக் கற்பவனை கற்கும் நிலைக்குத் தயார்படுத்தும் ஒரு சிறந்த சஞ்சிகையாகவும் திகழ்கின்றது.

மழைக்கு முளைக்கின்ற காளான்கள் போல, கல்வி சம்பந்தமாக காலத்திற்கு காலம் பல மாதாந்த சஞ்சிகைகள் வெளி வந்த போதும், அவை யாவும் இன்று தொடர்ந்து வெளிவர முடியாது அல்லது வாசகர்களின் ஆதரவு இல்லாததால் அவை இல்லாது ஒழிந்து போயின. ஆனால் அகவிழி தரமான, காத்திரமான கட்டுரைகளை தாங்கி வெளிவந்தமையால் இன்னும் வாசகர்களின் மனங்களில் நிறைந்தவையாக உள்ளமை பாராட்டுதலுக்குரிய தொன்றாகும்.

சமூக வாழ்வியலைப் பிரதிபலிக்கின்ற காலத்தின் கண்ணாடியாகிய அகவிழி மாதாந்த இதழானது தனது 50ஆவது இதழினை வெளியிட்டு உயர்ந்து, நிமிர்ந்து பெருமையுடன் நிற்கின்றது. கல்வியு-லகத்தினருக்கு இந்நூல் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இது நவீன விடயங்கள் பலவற்றைச் சுமந்துவரும் வாழ்வியல் வழிகாட்டியுமாகும். கல்விப் பிரச்சினைகள், சமூகப்பிரச்சினைகள், தேவைகள், மாறுகின்ற உலகிற்கேற்ப மாற்றமுறும் நவீனத்துவங்கள் போன்றவற்றைத் தத்ரூபமாக விளக்கி நிற்பதுடன் கல்விப்புலம் சார்ந்தோர் சந்தேகங்களைத் தீர்க்கும் அருமருந்தாகவும் அமைவதுடன் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் பாரிய பங்கை வகிக்கின்றது.


புதிய விடயங்களைப் படிக்க விரும்புவோர் தேடிவாங்கும் மாத இதழ் அகவிழி எனக் கூறக்கூடி-யளவுக்கு இதன் தரம் உயர்வானதாக உள்ளது. இம் மாத இதழில் பிரசுரிக்கப்படுகின்ற அனைத்து விடயங்களுமே சிறப்பானவை. கற்றோரின் பாராட்டைப் பெற்றிப்பவை.

ஒவ்வொரு இதழின் முன் அட்டை மிக எளிமையாக அமைந்திருப்பதுடன் அதில் வெளிவரும் அட்டைப் படம் மூலம் பல தத்துவங்கள் பிரசுரிக்கப்பட்டிருப்பது வாசகர்களை தூண்டும் வகையில் அமைந்-திருப்பது சிறப்பானதாகும்.

அகவிழியின் உள்ளே விடயங்களை முன்வைக்கும் ஒழுங்கமைப்பு பாராட்டுக்குரியது. இது அகவிழியைப் படிப்போர் மனதைத் தொட்டு மேலும் மேலும் வாசிக்கத் தூண்டுவதுடன் புதிய விட-யங்களின் தேடலையும் ஏற்படுத்தும்.

ஆசிரியர்கள் புதிய தலைமுறைக்கான அறிவையும் அறிவு தேடும் மூலங்களையும் இனங்காண்பவர்கள் இந்த மாதாந்த இதழில் உள்ள உண்மைகளை, தகவல்களை, தத்துவங்களை, உள்வாங்கி விளக்கி

(தொடர்ச்சி 36ம் பக்கத்தில்)



# ஊக்குவிக்கப்பட்ட கற்போரை உருவாக்குதல்:



ஏ.பரமானந்தம்,
ஆசிரிய கல்வியியலாளர்,
தேசிய கல்வியியற்கல்லூரி, வவுனியா.

**கற்பித்தல்**

கற்றல் என்பது ஒருவரது நடத்தையில் ஏற்படும் மாற்றமாகும். ஒரு புதிய அனுபவத்தின் மூலம் ஆற்றலைப் பெறுதல், திறனைப்பெறுதல் அல்லது மனப்பாங்கினைப் பெறுதல் அல்லது அறிவு, திறன், மனப்பாங்கினை மேம்படுத்துதல் கற்றல் எனலாம்.

*தமது கற்றலை எவ்வாறுதிட்டமிட்டு மேற்பார்வை செய்ய வேண்டுமென்பதையும், தமது சொந்த கற்றல் இலக்குகளை எவ்வாறு அமைத்துக்கொள்ளலாம் என்பதையும் தமது தவறுகளை எவ்வாறு திருத்திக்கொள்ளலாம் என்பதையும் கற்போர் அறிந்தகொள்ள வேண்டும்.*

(பிள்ளைகள் எவ்வாறு கற்கிறார்கள் பக்: 32)

கற்றல் என்பது ஒருவரது நடத்தையில் ஏற்படும் மாற்றமாகும். ஒரு புதிய அனுபவத்தின் மூலம் ஆற்றலைப் பெறுதல், திறனைப்பெறுதல் அல்லது மனப்பாங்கினைப் பெறுதல் அல்லது அறிவு, திறன், மனப்பாங்கினை மேம்படுத்துதல் கற்றல் எனலாம். இவ்வாறான கற்றலுக்கு உடலும் உள்ளமும் ஆயத்தநிலையில் தயாராக இருக்க வேண்டும். இவ்வாறான தயார் நிலையில் ஊக்கமானது அவரின் முயற்சியை வேகப்படுத்தி விடுகின்றது. அதாவது கற்றலானது கற்போனின் ஊக்கலின் செல்வாக்கிற்கு உள்ளாகின்றது. அன்றாட வாழ்வின் சிறு நிகழ்வுகள் கூட நமக்குள் ஒரு மனவெழுச்சியை உண்டு பண்ணி நமது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துகின்றது, அல்லது வழிப்படுத்த முனைகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் கற்றலில் அல்லது தனிமனித வாழ்வில் இரண்டு வகையில் ஏற்படலாம்.

1. அக (உள்) ஊக்கம் மூலம் *(Instrinsic Motivation)*

ஒரு மாணவரிடமிருந்து உள்ளார்ந்த ரீதியாக தோன்றும் எண்ணங்கள், ஆசைகள் விருப்பு வெறுப்புக்கள், தேவைகள், மனப்பாங்குகள், கவலைகள் போன்ற உணர்வுரீதியான காரணிகள் அக ஊக்கவிப்பாகக் கொள்ளப்படுகின்றது. உதாரணமாக கணித பாடத்திலுள்ள ஆர்வம், வரைதலில் உள்ள ஆற்றல், இசையில் உள்ள நாட்டம், கவியாற்றல், பாடும் திறன் போன்றவை கற்போனின் சிந்தனையாற்றலை மாற்றுகின்ற காரணியாக அமையும்.

2. புற (வெளி) ஊக்கம் மூலம் *(Extrinsic Motivation)*

ஒரு மாணவருக்கு வெளியிலிருந்து கிடைக்கும் ஊக்குவிப்புக்கள் புற ஊக்கிகளாகக் கொள்ளப்படுகின்றது. உதாரணமாக பெற்றோரினால், ஆசிரியரினால் வழங்கப்படும் புகழ்ச்சி, அறிவுறுத்தல்கள், தண்டனைகள், குறை கூறுதல், மற்றவர்களின் விருப்பங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்-

வாறான வெளியூக்கிகளினால் மாணவர்கள் கட்டாயத்தின் பேரில் அல்லது பயத்தினால் கற்றலுக்குத் தூண்டப்படுகின்றான். இவ்வாறான செயன்முறை பெரும்பாலும் கற்றலுக்கு தற்காலிக ஊக்குவிப்பாகவே அமையும்.

எமது வகுப்பறையில் மாணவர்கள் எல்லோரும் ஊக்கமுள்ளவர்களாக செயற்படுநிலையில் காணப்படவேண்டுமென்ற எதிர்பார்ப்பு எல்லா ஆசிரியர்களிடமும் காணப்படுகின்றது. ஆனால் இவ்விடயத்தில் எல்லா அசிரியர்களிடமும் ஒரேவிதமான கருத்துக்கள் காணப்பட்டாலும் தனியாள் மாணவர்களிடையே இயலுமை வித்தியாசம் காணப்படுவதுபோல ஆசிரியர்களிடமும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வேறுபாடானது மாணவர் கல்வியிலும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன.

அகஊக்கத்தினால் செயற்படும் மாணவர் பெரும்பாலும் கற்றலில் மகிழ்நிலையில் காணப்படுகின்றான். மாறாக புற ஊக்கத்தினால் செயற்படும் மாணவர்கள், பெற்றோர் அல்லது ஆசிரியரின் கட்டாயத்தின் பேரில் அல்லது நிபந்தனையின் பேரில் கற்க முயல்கின்றான். இதனால் அவர்கள் கற்றலில் ஈடுபாடு (Involvement) அற்ற கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதைக் காணலாம். அத்துடன் ஆசிரியர்களின் கண்டிப்பு, குறைகூறுதல் போன்ற செயற்பாடுகளையும் மாணவர்கள் விரும்புவதில்லை. எனவே ஆசிரியர் அல்லது பெற்றோர்களின் ஊக்குவிப்பானது மாணவர்களை கற்றலின் பால் தூண்டக்கூடியதாகவும், மாணவரின் சுய கற்றலுக்கு வழியமைப்பதாகவும், அக ஊக்கலைத் தூண்டுவதாகவும் அமைதல் வேண்டும்.

**ஆசிரியரின் வகிபாகம்:**

**கற்றலானது கற்போனின் ஊக்கலின் செல்வாக்கிற்குள்ளாகின்றது. தமது நடத்தைப்பாங்கின் மூலமும் தமது பேச்சின் மூலமும் மேலும் ஊக்கம் பெற்ற கற்போராவதற்கு ஆசிரியர்கள் மாணவருக்கு உதவலாம்.**

*(பிள்ளைகள் எவ்வாறு கற்கிறார்கள் பக்: 53)*

மாணவர்களின் கற்றலில் புறஊக்கிகளை வழங்கும் பிரதானமானவராக ஆசிரியர் காணப்படுகின்றார். பாடசாலை நேரத்தில் ஆசிரியரின் நேரடிக் கண்காணிப்பில் செயற்படும் மாணவர்களின் ஆற்றல் மேம்பட வினைத்திறனுள்ள ஆசிரியரினால் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட முடியும். அதாவது மாணவர்களின் திறன்களை ஒருங்கிணைப்பவராக, தட்டிக்கொடுப்பவராகவும், மாணவர்களின் கற்றலுக்கு அவர்களே காரணமாக அமைகின்றனர் என்ற எண்ணம் மாணவர்களிடத்தில் ஏற்படுத்தப்படக்கூடிய வகையில் ஆசிரியர்கள் செயற்பட வேண்டும்.

**திறன்களை ஒருங்கிணைப்பது இரண்டு வகை:**

- ஆசிரியர் தன்னிடமுள்ள திறமைகளை ஒருங்கிணைப்பது
- ஆசிரியர் மாணவர்களிடமுள்ள திறன்களை ஒருங்கிணைப்பது

மேற்சொன்ன இரண்டுவகையான செயற்பாடுகள் மூலமும் ஊக்குவிக்கப்பட்ட கற்போரை உருவாக்கும் முயற்சியில் ஆசிரியர் வெற்றி பெற முடியும்.

**திறமைகளை ஒருங்கிணைப்பதில் ஆசிரியருக்குள்ள தகுதிகள்:**

- நம்பகத்தன்மை, சுயஊக்குவிப்பு.
- எதிலும் நன்றே காணும் இயல்பு.
- சோகமான வார்த்தைகளைக் கூறாதிருப்பது.
- வெளிப்படையாக பேசும் பண்பு.
- அறிவாற்றல் விருத்தி, புத்தாக்க சிந்தனை.
- விரைவாகவும் சரியாகவும் தீர்மானமெடுக்கும் திறன்.
- சுறுசுறுப்பாக இயங்குவது, வழிகாட்டல் பண்பு.
- உடன்பாடான மனப்பாங்கு.

**ஆசிரியர் செய்ய வேண்டியவை:**

1. புதிய விடயங்களை சிந்திப்பதுடன் மாணவர்களையும் சிந்திக்கத் தூண்டுவதுடன் உயர்வான சிந்தனைகளைக் கட்டியெழுப்ப வேண்டும். இதனால், ஆசிரியர்களிலும், மாணவர்களிலும் **சுறுசுறுப்பு, தன்னம்பிக்கை ஏற்படும் துணிவு, நல்ல எதிர்பார்ப்புக்கள் ஏற்படும் வாய்ப்புக்களை, நேரத்தை வீணாக்காது பயன்படுத்தும் சந்தர்ப்பம் ஏற்படும். புதியனவற்றை ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பு, சக்திதொடர் முயற்ச்சிக்கான ஆற்றல் ஏற்படும்.**

2. குறிக்கோளை அடிக்கடி மதிப்பீடு செய்வதுடன் இலக்குநோக்கிய பயணத்தில் எப்போதும் முன்னோக்கிச் செயலாற்ற வேண்டும். இதனால்,

குறிக்கோள்: நாம் எல்லோருமே சிறப்பாக சந்தோசமாக வாழவேண்டுமென்ற எண்ணத்தை உடையவர்கள். ஆனால் எல்லோராலும் அவ்வாறு வரமுடிவதில்லை.

குறிக்கோள்கள் தெளிவானதாக, உண்மையானதாக, வாய்ப்புக்களை உணர்த்தக்கூடியதாக, எளிதில் பங்குபெறக்கூடியதாக அமைதல் வேண்டும்.

குறிக்கோள்களை அடைய தேவையான தகுதிகள், கால அளவு, வழிமுறைகளும் மாற்று வழி முறைகளும், தடைகளும் அவற்றை வெற்றி கொள்ளக்கூடிய வழிமுறைகளையும், தனித்துவத்தையும் வெளிப்படுத்த வேண்டும்.

குறிக்கோள் இல்லாது செயற்படும் மாணவர்களுக்கு எப்போதும் தூண்டல், ஊக்குவிப்பு தேவைப்படும். எவரொருவர் தனக்கென குறிக்கோளை ஏற்படுத்தி, தெளிவான புலக்காட்சி, பிரதிபலிப்பின் மூலம் செயலாற்ற முனைகின்றாரோ அச்சந்தர்ப்பத்திலிருந்தே அக ஊக்கிகள் செயற்பட ஆரம்பிக்கின்றது. எனவே மாணவர்கள் தங்கள் இயலுமைக்கேற்ப யதார்த்தமான குறிக்கோள்களை ஆக்குவதற்கு ஆசிரியர்களினால் வழிப்படுத்தப்படல் அவசியமாகின்றது.

*3. நிதானமாக எச்சரிக்கை உணர்வோடு, பதற்றமில்லாது, நகைச்சுவை உணர்வோடு, ஒருங்கிணைந்த திறன்களைப் பகிர்ந்து செயலாற்ற வேண்டும்.*

ஆசிரியர் தன்னிடமுள்ள திறன்களை மதிப்பிட வேண்டும். தான் கற்பிக்கும் மாணவர்களிடமுள்ள திறன்களை மதிப்பிடல் வேண்டும். சகஆசிரியரிடம், பாடசாலையிலுள்ளவர்களின் திறன்களை, வளங்களை மதிப்பிட வேண்டும். அவற்றை ஒருங்கிணைத்து மாணவர் கற்றலுக்காக வழிப்படுத்தல் வேண்டும்.

ஒரு மாணவன் சிறப்பான துலங்களை வெளிப்படுத்தும் போது அவர்களைப் பாராட்டுதல். உதாரணமாக உன்னிடம் காணப்படும் நல்ல பண்பே இவ்வெற்றிக்கு காரணமாக அமைந்தது. உமக்கு இன்னும் வெற்றிபெறச் சந்தர்ப்பம் உண்டு, நீங்கள் நல்ல முயற்சியுடன் கற்கின்றீர்கள், நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது போன்ற வாக்கியங்கள் மாணவர்களின் அகஊக்கத்தை விருத்திசெய்துகொள்ள உதவுகின்றது.

மாணவர்களின் இயலுமைகள், ஆற்றல்கள், விருப்புக்கள் தொடர்பாகவும் கல்வி முன்னேற்றங்கள் தொடர்பாகவும் பெற்றோருடன் ஒரு சுமுகமான தொடர்பாடலை அடிக்கடி மேற்கொள்ளுதல். பிள்ளைகளின் வீட்டுச் செயற்பாடுகள் பற்றியும் ஆசிரியர் பெற்றொருடன் கலந்துரையாடுதல். பெற்றோருக்கு ஆலோசனை வழங்குதல். அவர்களின் கல்வி முன்னேற்றம், ஒழுக்கம் தொடர்பான உடன்பாடான கருத்துக்களை வழங்கி பெற்றோரையும் ஊக்குவித்தல்.

ஆசிரியர்களின் குறிக்கோளுடைய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், கற்றல் சூழலை மகிழ்ச்சியுடையதாக்குதல், நிஜ வாழ்க்கை அனுபவங்களுடன் தொடர்புபடுத்திக் கற்பித்தல், நிறைகளைப் பாராட்டி விமர்சித்தல், புகழ்ச்சியை வழங்குதல், வெகுமதிகளை வழங்குதல், மன மகிழ்வுடன் பழகுதல் போன்ற ஒவ்வொரு மாணவரிடமும் உள்ள நல்ல விடயங்களை புகழ்தல், ஊக்குவித்தல் போன்ற ஆசிரியரின் செயலாற்றுகைகள் மாணவரின் அகவூக்கத்தை அதிகரிக்க உதவும் செயற்பாடுகளாக அமைகின்றன. இவை மாணவரை சுயமாகக் கற்பதற்கு தூண்டுகோலாக அமையும்.

**மாணவர்கள் செய்ய வேண்டியவை:**

"முடியும் என்பது எப்படி முடிகிறதோ அதைப் போலவே முடியாது என்று நினைக்கும் போது முடியாமலே போகிறது". ஒவ்வொரு நடவடிக்கையும், செயலையும் ஆரம்பிப்பதற்கு முன்பே முடியும், வெற்றி பெற்றுவிட்டேன், பாராட்டுகிறார்கள் என்பன போன்ற மனக்காட்சிகளைப் பார்க்க வேண்டும் என்கின்றார்கள் மனோதத்தவ அறிஞர்கள்.

ஒவ்வொரு செயலுக்கும் நானே பொறுப்பு என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். இதனை புத்த மதம் "நாம் இருக்கின்ற நிலமைக்கு யாரோ காரணமல்ல, நமது நிலமைக்கு நாம் தான் காரணம்" எனக் கூறுகின்றது. வேதாகமம் "ஒருவன் எதை நினைக்கிறானோ அதுவாகவே அவன் இருக்கிறான்" எனக் கூறுகின்றது. இந்துமதம் "மனம் எதை உருவாக்க நம்புகிறதோ அதை மனிதன் அடைகின்றான்" எனக் கூறுகின்றது.

(மனமே விழித்திடு - பக்: 135)

எல்லோராலும் வெற்றி பெறமுடியும். நாம் நம்முடைய முழுக் கவனத்தையும் கல்வியின் மீதும் கற்றல் செயற்பாடுகளின் மீதும் செலுத்த வேண்டும். எந்தவொரு காரியத்திலும் நமது நோக்கம் சிந்தனை செயல்யாவும் வெற்றியென்பதை மாத்திரமே இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும்.. எண்ணங்கள், சிந்தனைகள் இரண்டு வகையானதாகக் காணப்படுவதாக உளவியல் அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

**1. நேர்மறைச் சிந்தனை** *(Positive Thinking)*

என்னால் முடியும், நான் வெற்றி பெறுவேன், எல்லா ஆசிரியர்களாலும் எனக்கு பயன் கிடைக்கும், பாடசாலைக்கல்வி சிறப்பானது, நான் சாதனை படைப்பேன், என்னால் நன்கு சேவையாற்ற முடியும் போன்ற எல்லாம் வெற்றியாக அமையும் என்று நினைப்பது.

**2. எதிர்மறைச் சிந்தனை** *(Negative Thinking).*

என்னால் முடியாது, பரீட்சையில் சித்தி பெறமாட்டேன், மற்றவர் ஏமாற்றி விடுவார், குறித்த ஆசிரியர் பாடம் நடத்தினால் எனக்கு விளங்காது. பாடசாலைக்குச் செல்வது எனக்கு பயன் தராது போன்ற எல்லாம் எனக்கு தோல்வியாக அமையும் என்று நினைப்பது.

**நாம் அன்றாட நிகழ்வுகளில், செயற்பாடுகளில் எமது சிந்தனை எவ்வாறுள்ளது என்பதை மதிப்பிட்டு நேர்மறையான அக ஊக்கத்தை தூண்டக்கூடிய எண்ணங்களை அடைய மாணவர்கள் பின்பற்ற வேண்டிய படிமுறைகள்**

**1. நேர்மையான சுய பிரதிபலிப்பு**

காலையில் எழுந்ததும் அன்று முழுவதும் என்னென்ன செய்யப் போகின்றேன் என்பது தெரியுமா?

பாடசாலையில், வகுப்பறைச் செயற்பாடுகளில் நான் மகிழ்வுடன் கற்றுக்கொள்கின்றேனா?

படிப்பதற்கு போதுமான நேரம் எடுத்துக்கொள்கின்றேனா?

அமர்ந்து படிக்க கடினமாக உள்ளதா?

எனக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் கற்றலுக்கான வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்துகின்றேனா?

நான் அதிக நேரம் செலவுசெய்து குறைந்தளவே கற்றுக்கொள்கிறேனா?

போன்ற வினாக்களை சுயமாகக் கேட்டு கிடைக்கும் பிரதிபலிப்பிலிருந்து எமது கற்றல் செயற்பாடுகளை திட்டமிட்டுக் கொள்ளவேண்டும்.

**2. நிகழ்வுகள் குறித்த நேர்மறையான நோக்கு**

நம்மைச் சூழ நடைபெறும் நிகழ்வுகள், எம்மால் மேற்கொள்ளப்படும், நாம் மற்றவர்களுக்கு செய்யும் உதவிகள் போன்றவற்றில் நேர்மறையான சிந்தனை போக்குகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு செயலிலும் நல்ல விடயங்கள் நிறையவே பொதிந்திருக்கும். அவற்றை இனங்கண்டு வெளிப்படுத்தும் அல்லது கற்றுக்கொள்ளும் ஆற்றலைக் கொண்டிருத்தல். தோல்வியிலும் கற்கக்கூடிய நல்ல விடயங்களை இனங்கண்டு கற்றல் வேண்டும்.

**3. உடன்பாடான உளவியல் நடத்தை:**

எமது நடத்தைக் கோலங்களை மற்றவர்களினாலும், சமூகத்தினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் வெளிப்படுத்தல் வேண்டும். மற்றவர்களுக்கு அன்புகாட்டுதல், பாடசாலை சட்டங்களிற்கும் சம்பிரதாயங்களுக்கும் இயைபாக நடத்தல், பெரியோரை மதித்தல், ஓய்வு நேரங்களின் செயற்பாடுகள் கற்றலுக்கு துணையாக அமைத்துக்கொள்ளுதல்.

**4. சாத்தியமாகும் என்ற எண்ணம்**

எமது எந்தவொரு முயற்சியும் சாத்தியமாகும் என்ற எண்ணத்துடனான பயிற்சியில் ஈடுபடுதல். அதாவது எமது செயற்பாடுகள் வெற்றிபெறக்கூடியது. அதனை என்னால் செய்து முடிக்கமுடியும் என்ற சிந்தனையுடனான செயற்பாடுகள்.

**5. விரும்பத்தகு ஆளிடைத் தொடர்புகள்**

ஒருவருடன் ஒருவர் நேரடியான உறவில் நற்பயன் அளிக்கக்கூடிய விதத்தில் அமைந்த உறுதியான செயற்பாடுகள். உதாரணமாக சக மாணவர்களுடன், ஆசிரியர்களுடன், சமூக உறுப்பினர்களுடன் விரும்பத்தகு தொடர்புகளை ஏற்படுத்துதல். மகிழ்வுடன் மற்றவர்களுடன் பழகுதல், இயலுமானவரை நிறைகளையே வெளிப்படுத்துதல்.

**6. தனிப்பட்ட கடமைகள்**

மாணவன் என்ற ரீதியில் தனது செயற்பாடுகளையும், வீட்டிற்குப் பிள்ளை என்ற ரீதியில் வீட்டாருக்கும் பெற்றோருக்கும் செய்ய வேண்டிய கடமைகளையும் மனவிருப்போடு செய்தல் வேண்டும். அத்துடன் தனது செயற்பாடுகளின் மேல் ஆர்வமும், பற்றும் கொண்டு செயற்படல். இதன்மூலம் தனது செயற்பாடுகளுக்கு மற்றவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்றுக்கொள்ளலாம்.

**7. சுயத்தின்மேல் கேள்வியே கேட்காமல் கொள்ளும் நம்பிக்கை**

முடியும் என்று சொல்வதும், முடியாது என்று சொல்வதும் அவரவர் மனங்களிலேதான் உள்ளது. எனவே தனது கற்றலுக்கு மற்றவர்களில் காரணம் சொல்லாது என்னால் முடியும் என்ற நம்பிக்கையுடன் மாணவர்கள் செயற்பாடுகளில் முழு மனதுடன் ஈடுபடல் வேண்டும்.

**8. ஆழ்மனதை உருவாக்கல், கற்பனாசக்தியோடு செயற்படுத்தல்**

எமது இலக்கின் வெற்றி எமது ஆழ்மனதில் பதியப்பட்டு அதன் வெற்றிநிலை மனக்கண்முன் தெரிய வேண்டும். இது வெற்றிபெறுவதற்கான செயற்பாடுகளைத் திட்டமிடவும், செயற்பாடுகளில் மகிழ்வுடன் ஈடுபடவும் அக ஊக்கியாக தொழிற்படும்.

**9. மற்றவர்களின் உதவியோடு வெற்றிபெற வேண்டுமென்பதில் ஆழ்ந்த உண்மையான ஆசை**

எமது சமூக அமைப்பில் தனித்து இயங்குவது என்பது இயலாத காரியம். எனவே மற்றவர்களின் ஒத்துழைப்பை முழுமனதுடன் பெற்று எமது குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளுதல் வேண்டும். அதாவது ஒவ்வொரு மாணவரும் மற்றவர்களுக்கு உதவுதல் என்ற மனப்பாங்கோடு செயற்படுதல். அவ்வாறு செயற்படும் போது மற்றவர்களின் உதவி, பங்களிப்பு தானாக வந்து சேரும்.

மாணவர்களாகிய நீங்கள் உங்களைப்பற்றி மற்றவர்களை விட அதிகமாகவே தெரிந்து வைத்திருக்கிறீர்கள். உங்கள் குறிக்கோளைத் தீர்மானிப்பவராக, உங்கள் இயலுமைகளை, பலவீனங்களைத் தெரிந்தவராக, உதவிகளைப் பரஸ்பரம் பரிமாறிக்கொள்பவர்களாக, செயற்பாடுகளில் மகிழ்வுடன் ஈடுபடுபவர்களாக, உங்கள் வெற்றிக்கு நீங்களே பங்காளராக இருந்து செயற்படுங்கள். கற்றலில் வெற்றி உங்களைத் தேடிவரும். எப்படி ஊக்கத்தின் கொள்கைகளையும் செயற்படுத்த வேண்டுமென்று உணர்ந்து கற்றுக்கொண்டு செயற்பாடுகளில் மகிழ்ச்சியாக இருங்கள். உங்களது எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய செயல்கள் நிகழ அவற்றை இன்றே உருவாக்கத் தொடங்குங்கள்.






**கி. புண்ணியமூர்த்தி**

ஆசிரிய கல்வியியலாளர்,

தேசிய கல்வியியற்கல்லூரி, மட்டக்களப்பு.


கலைத்திட்டம்

உலகில் கலைத்திட்ட உருவாக்குனர்களின் மிகுந்த வரவேற்பைப் பெற்ற ஒரு மாதிரியே ரைலர் மாதிரியாகும்.

# இலங்கையில் கல்வி நோக்கங்கள், குறிக்கோள்களைத் தீர்மானிப்பதில் ரைலரின் கலைத்திட்ட திட்டமிடல் மாதிரியின் பிரயோகம்

கலைத்திட்ட அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு ஆய்வாளர்கள் விளக்கமளித்துள்ளனர். அதேபோல் பல்வேறு கலைத்திட்ட மாதிரிகளும் உருவாக்கம் பெற்றுள்ளன. இருந்த போதும் அவற்றுள் மூன்று மாதிரிகள் பிரசித்தி பெற்றவைகளாகும்.அவையாவன

* குறிக்கோள் மாதிரி – Objective Model
* செயற்பாட்டு மாதிரி – Process Model
* பாடசாலை மட்ட மாதிரி – School Based Model

□ குறிக்கோள் மாதிரி - Objective Model

உலகில் கலைத்திட்ட உருவாக்குனர்களின் மிகுந்த வரவேற்பைப் பெற்ற ஒரு மாதிரியே ரைலர் மாதிரியாகும். 'ரல்ப் ரைலர்' (Ralph Tyler -1949) என்பவரால் இம் மாதிரி விருத்தி செய்யப்பட்டதால் இது ரைலர் மாதிரி எனப்படுகிறது.

கலைத்திட்ட உருவாக்கத்திற்கு ரைலர் விளக்கமளிக்கும் போது "பாடஉள்ளடக்கம், கற்பித்தல் முறைகள், அவற்றின் விளைவுகள் என்பன கலைத்திட்டத்தில் அடங்குகின்றன. இம் மூன்றிற்குமிடையிலான பரஸ்பர விளைவுகளே கலைத்திட்டத்தை உருவாக்குகின்றன" என்கிறார். அடிப்படைக் கலைத்திட்ட அறிவுறுத்தல் கோட்பாடுகள் Basic Principles of Curriculum and Instruction எனும் நூலில் இது பற்றி அவர் விளக்கியுள்ளார். இந் நூல் கலைத்திட்ட உருவாக்க வரலாற்றில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது எனலாம்

இவரது மாதிரி நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். இவர் நோக்கங்களை மாதிரியின் பிதா என்கிறார். கலைத்திட்டத்திற்கு இவர் இலகுவாகவும் தெளிவாகவும் விளக்கமளித்துள்ளார். இவர் கலைத்திட்டத்திற்கு விளக்கமளிக்க முற்படுகையில் நான்கு அடிப்படை வினாக்களை எழுப்புகிறார். அவையாவன:

* ஒரு பாடசாலை அடைய வேண்டிய கல்விநோக்கங்கள் (Educational Purposes) எவை?
* அந் நோக்கங்களினூடாக அடையப்பட வேண்டிய கல்வி அனுபவங்கள் (Educational Experiences) யாவை?
* அவ் அனுபவங்களைப் பயனுள்ள வகையில் ஒழுங்கமைப்பது (Effectively Organized) எவ்வாறு?

04. நோக்கங்கள் அடையப்பட்டுள்ளதா? என்பதை எவ்வாறு தீர்மானிக்கலாம்? (Purposes are being attained)

இவ் வினாக்களை அடிப்படையாகக் கொண்டே ரைலர் தனது நேர் கோட்டுக் கலைத்திட்ட மாதிரியை இவ்வாறு தயாரித்துள்ளார்.

நோக்கமும் குறிக்கோள்களும்
↓
பாட உள்ளடக்கம்
↓
ஒழுங்கமைப்பு
↓
மதிப்பீடு

ரலப் ரைலர் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் தீர்மானிக்கையில் ஐந்து மூலாதாரங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்கிறார் அவையாவன

* கற்பவர் (Tha Learners)
* சமகால வாழ்க்கை (Contemporary Life)
* பாடம் தொடர்பான நிபுணர்கள் (Subject Specialists)
* தத்துவம் (Philosophy)
* உளவியல் (Psychology)

என்பனவாகும் அதனை அவர் பின்வருமாறு விரிவு-படுத்துகிறார்.

கற்பவர் → நோக்கமும்
சமகால வாழ்க்கை → குறிக்கோளும்
பாடம் தொடர்பான நிபுணர்கள் → தெரிவு → பாட உள்ளடக்கம்
தத்துவம் → செய்யப்படுதல் → ஒழுங்கமைப்பு → மதிப்பீடு
உளவியல் →

இதன்படி நோக்கங்களும் குறிக்கோள்களும் தெரிவு செய்யப்பட்டு அதற்கேற்ப பாடவிடயங்களும் அனுப-வங்களும் தெரிவு செய்யப்பட்டு, கற்றலுக்காக ஒழுங்குபடுத்தப்பட்டு மதிப்பீடு செய்யப்படும்.

## 1. நோக்கமும் குறிக்கோளும்

ரைலரின் மாதிரியை எடுத்து நோக்கும்போது ரைலர் நோக்கம் அல்லது குறிக்கோள்களைத் தீர்மானிப்பதன் மூலம் தனது மாதிரியை ஆரம்பிப்பது இங்கு குறிப்-பிடத்தக்கது. இதனால் பாடவிடயங்களையும், கற்பித்தல் முறைகளையும் இலகுவாக ஒழுங்க-மைத்துக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிடுகிறார்.

### □ நோக்கங்கள்

நோக்கங்கள் என்பது மிக விரிவானதும் நீண்ட கால நோக்கில் நிறைவேற்றிக் கொள்ளக்கூடியதுமான இலக்குகளாகும். இவற்றை உடனடியாக அவ-தானிக்க முடியாது. அடையப்படும் அளவினை மதிப்-பிட முடியாது. இவற்றை குறிக்கோள்களாகப் பகுக்க முடியும். கல்வியின் நோக்கங்களுக்கு உதாரணங்-களாகப் பின்வருவனவற்றைக் கொள்ளலாம்.

* இலட்சிய மனிதர்களை உருவாக்குதல்.
* தேசத்தைக் கட்டியெழுப்புதல்.
* அரசின் நற்செயல்களுக்குப் பங்களிப்புச் செய்யும் ஆற்றல்களைக் கொண்ட பிரசைகளை உருவாக்-குதல்.
* தேசிய ஒருமைப்பாட்டினை ஏற்படுத்துதல்.

ஆனால் இவற்றை அடைவது இலகுவானதல்ல. அதற்குப் பல குறிக்கோள்களை நிறைவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

### □ குறிக்கோள்கள்

நோக்கம் ஒன்றின் ஒரு பகுதியே குறிக்கோளாகும். இது குறுகியதானதாகவும், குறுங் கால நோக்கில் நிறைவேற்றிக் கொள்ளக்கூடியதுமான இலக்குகளைக் கொண்டதுமாகும். நோக்கத்தைப் போலன்றி குறிக்-கோள் அடையப்படுகிறதா என்பதை அவதானிக்க முடியும். குறிக்கோள் அடையப்பட்டதா? என்பதை கணிப்பீட்டுக் கருவிகளின் துணையுடன் கணிப்பிட முடியும்.

குறிக்கோள்களுக்கு உதாரணமாக பின்வரும் ஆரம்-பக் கல்விக் குறிக்கோள்களைக் கொள்ளலாம்.

* அன்றாடச் செயற்பாடுகளுக்குத் தேவையான தொடர்பாடல் ஆற்றலை விருத்தி செய்து கொள்வர்.
* கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளவும், அன்றாட செயற்பாடுகளுக்குத் தேவையானதுமான கணிதத் திறன்களைப் பெற்றுக் கொள்வர்.
* சுகவாழ்வுக்குத் தேவையான அடிப்படை அறி-வையும் பழக்கங்களையும் பெற்றுக்கொள்வர்.

இவற்றைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளினூடாக இலகுவாக அடைந்து கொள்ள முடியும்.

கற்றலுக்கு வழி காட்டவும் கற்றல் அனுபவங்களைத் தெரிவு செய்ய உதவவும் குறிக்கோள்கள் எழுதப்-

படுவது அவசியமென ரைலர் குறிப்பிடுகிறார். கடந்த கால அனுபவங்களிலும் அறிவிலும் இருந்தே குறிக்கோள்கள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். என அவர் குறிப்பிடுகிறார்.

ரைலரின் காலத்தில் பல கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை அவர் ஆராய்ந்த போது அவற்றில் நோக்கம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அக் காலத்தில் பல்வேறு ஆசிரியர்களிடம் அவர்களின் கற்பித்தல் செயற்பாட்டின் நோக்கம் யாது? குறிக்கோள் யாது? என வினவப்பட்டதற்கு எவரும் தெளிவாக விளக்கமளிக்கவில்லை என்கிறார். அனேகமான ஆசிரியர்கள் நான் சிறந்த கல்விமானை உருவாக்க முயற்சிக்கின்றேன் அல்லது சிறந்த சமநிலை ஆளுமை உள்ளவர்களை உருவாக்க முயற்சிக்கின்றேன். என்றார்கள்.

இதன்படி பார்க்கும் போது குறிக்கோள் பற்றிய தெளிவின்மையைக் காண முடிகிறது, இலக்கு, நோக்கம், குறிக்கோள், நடத்தைசார் நோக்கம், என்பவற்றுக்கிடையே அவர்களால் வேறுபாடு காண முடியவில்லை. இதனாலேயே நோக்கம் அல்லது குறிக்கோளுக்கு ரைலர் முதன்மையளித்தார்.

கலைத்திட்ட மாதிரியை இவர் தயாரிக்கும்போது குறிக்கோள்கள், உள்ளடக்கம், ஒழுங்கமைப்பு, மதிப்பீடு ஆகியவற்றில் சரியான தீர்மானத்திற்கு வருவது பிரச்சினையாகவுள்ளது என்கிறார். ரைலரின் குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்ட மாதிரி சிறப்புப் பெறுவதற்குக் காரணம் குறிக்கோள் மாணவர்களின் நடத்தையை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டுமே தவிர ஆசிரியரின் நடத்தையை அல்ல எனக் குறிப்பிடுவதினாலாகும். அத்துடன் குறிக்கோள் குறிப்பிட்ட அலகு கற்பித்து முடிவடைந்த பின் மாணவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை முன்கூட்டியே எதிர்பார்ப்பதாக இருக்க வேண்டும் என்கிறார்.

ரைலரால் கற்பவர், சமகால வாழ்க்கை, பாடம் தொடர்பான நிபுணர்கள், தத்துவம், உளவியல் ஆகிய ஐந்து மூலாதாரங்களிலிருந்து குறிக்கோள்கள் தெரிவு செய்யப்பட்டாலும் அவ் மூலாதாரங்களில் எதற்கு முன்னுரிமை வழங்குவது என்பது பற்றி அவர் குறிப்பிடவில்லை. ஐந்தையும் இவர் சம அளவாகவே நோக்குகின்றார் கலைத்திட்ட உருவாக்குனர்கள் கட்டாயமாகக் கலைத்திட்டத்தினை வரைய முன்னர் இவ் ஐந்து மூலாதாரங்களையும் கருத்தில் கொள்ள வேண்டுமென்று அவர் வலியுறுத்துகிறார்.

ரைலரை அடிப்படையாகக் கொண்டே பெஞ்சமின் புளூம் (Benjamin Bloom) குறிக்கோள்களுக்கு முக்கியத்துவமளிக்கிறார். இதனை அவர் மூன்று வகையாகப் பிரிக்கிறார். அவையாவன

* அறிதல்சார் ஆட்சி
* உளவியக்கசார் ஆட்சி
* மனவெழுச்சிசார் ஆட்சி

என்பனவாகும் குறிக்கோளினுள் நடத்தை, உள்ளடக்கம் ஆகிய இரு பரிமாணங்கள் உள்ளடங்குவதாக ரைலர் குறிப்பிடுகிறார். நல்ல குறிக்கோளின் பண்புக் கூறுகளாக அவர் நடத்தை (Behaviour) நிபந்தனைகள் (Conditions) தரம் (Standards) என்பவற்றைக் குறிப்பிடுகிறார். ரைலர் குறிக்கோளை உருவாக்குவதற்குக் கவனத்தில் கொள்ள வேண்டிய மூன்று மாற்று வழிகளை முன்வைக்கிறார். அவையாவன:

* ஆசிரியர்களால் செயற்படுத்தப்படுபவை எவை?
* எண்ணக்கரு விருத்தி
* நடத்தை மாதிரிகள்

என்பனவாகும். மாணவனை மையமாக வைத்தே பாடசாலைக் கலைத்திட்டம் உருவாக்கப்படுதல் வேண்டும் என ரைலர் வலியுறுத்துகிறார். குறிப்பாக ஒவ்வொரு மாணவரினதும் நடத்தைக் கோலத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகவே நோக்கங்களும், குறிக்கோள்களும் அமைதல் வேண்டும் என்கிறார். மாணவர்களின் நடத்தைக் கோலத்தில் மாற்றம் ஏற்படுவதனால் அவர்களது தேவைகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அவ்வாறான தேவைகளாக ரைலர் பின்வருவருமாறு இனங்காண்கிறார். அவையாவன:

* சுகாதாரத் தேவை (Health)
* நெருங்கிய சமூக உறவுத் தேவை (Immediate Social Relationships)
* சமூக, தேசிய உறவு (Socio - Civic Relationships)
* பயனாளியின் வாழ்க்கை நோக்கு (Consumer Aspects of Life)
* தொழில் வாழ்வு (Occupational life)
* பொழுது போக்கு (Recreational)

என்பனவாகும். நகர கிராம மாணவர்களிடையே, சமூகத்திலுள்ள பல்வேறு சமூக வகுப்புகளிலிருந்து வரும் வித்தியாசமான மாணவ குழுக்களிடையே, காணப்படும் தனியாள் வேறுபாடுகள் இனங்காணப்படுதல் வேண்டும். அதற்கேற்ப அவர்களது விருப்புக்களும் தேவைகளும் விசாரித்தறியப்படுதல் வேண்டும். அதனடிப்படையிலேயே கல்விக் குறிக்கோள்கள் கட்டியெழுப்பப்படுதல் வேண்டும் என ரைலர் குறிப்பிடுகிறார்.

இலங்கையைப் பொறுத்த வரையில் கலைத்திட்டம் அடிக்கடி மாற்றம் பெறுகிறது. ஒரு கலைத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள நோக்கங்களும் குறிக்கோள்களும் அடையப்பட்டுள்ளதா? என்பதைக் கண்டறிவதற்கிடையில் புதியதோர் கலைத்திட்டம் தோற்றுவிக்கப்-

படுகிறது. அதற்கேற்ப பாடநூல் உருவாக்கங்களும், ஆசிரியர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. எவ்வளவுதான் புதிய கலைத்திட்டம் அல்லது புதிய சீர்திருத்தம் தோற்றுவிக்கப்பட்டாலும் அவற்றின் பின்னால் கலைத்திட்ட மாதிரிகள் உள்ளடங்கியுள்ளன என்பதை நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

செயன்முறைக் கலைத்திட்டம், ஒன்றிணைந்த கலைத்திட்டம், உள்ளீட்டுக் கலைத்திட்டம், பரந்த துறைக் கலைத்திட்டம், ஓடுபாதைக் கலைத்திட்டம், சுழல் ஏணிக் கலைத்திட்டம், என கலைத்திட்டங்கள் பல்வேறு பெயர்களில் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் அவை அனைத்தும் மாணவமையமாகக் கொண்டவைகளாகும் என்பதை மறுக்க முடியாது.

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள புதிய கல்விச் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டபோது கல்வியின் தேசிய குறிக்கோள்கள் முன்வைக்கப்பட்டன. இவை 21ம் நூற்றாண்டில் நாம் எதிர்நோக்கியுள்ள சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கலைத்திட்ட உருவாக்குனர்களால் முன்மொழியப்பட்டது.

நாட்டிலுள்ள சகல மாணவர்களினதும் தேவைகளை நிறைவு செய்வதினூடாக தேசத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கு உருவாக்கப்பட்டதாகவே இக் குறிக்கோள்கள் அமைந்திருந்தன. ரைலர் குறிப்பிடும் தேவைகளை ஒத்ததாகவே இத் தேவைகளும் காணப்பட்டன. உதாரணமாக

* ஓம்பக்கூடிய வாழ்க்கைப் பாணி, வாழ்க்கைப் பாங்கு என்பவற்றைச் சிறக்கச் செய்தல் இது ரைலரின் பயனாளியின் வாழ்க்கை நோக்கு எனும் தேவையை ஒத்ததாகவுள்ளது
* நாட்டின் மேம்பாட்டுக்கான முயற்சிகளில் பங்கு கொள்வதற்கு ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கின்ற ஆழ்ந்த இடையறாத அக்கறையுணர்வு தொடர்ந்து பேணப்படுதலை உறுதி செய்தல். இது ரைலரின் நெருங்கிய சமூக உறவு தேவையை ஒத்துள்ளது.
* கண்ணியம், திருப்தி தன்னிறைவு என்பவற்றை ஏககாலத்தில் தரக்கூடிய வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல். இது ரைலரின் தொழில் வாழ்வுத் தேவையை ஒத்துள்ளது.

இலங்கையின் கல்வி நோக்கங்களும் குறிக்கோள்களும் மிகவும் பொருத்தமானதாகவும் காலத்தின் தேவையறிந்தும் உருவாக்கப்பட்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பாரிய சிக்கல்கள் காணப்படுகின்றன. இவ் நோக்கங்களும், குறிக்கோள்களும் வெளிப்படுத்தப்பட்டு ஒரு தசாப்தம் முடிவடைந்த போதும் அறிமுகப்படுத்தப்பட்டதற்கு முன்பிருந்ததைவிட பெருமளவில் மாற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை உதாரணமாக முதலாவது தேசிய குறிக்கோளான தேசிய பிணைப்பினையும்,தேசிய முழுமைப்பாட்டினையும், தேசிய ஒருமைப்பாட்டினையும் எய்துதல் என்பதனை எடுத்துக் கொண்டால் முன்பிருந்ததைவிட தேசிய பிணைப்பிலோ, அல்லது தேசிய ஒருமைப்பாட்டிலோ ஒப்பிடக்கூடியளவு விருத்தி ஏற்பட்டதாகக் காண முடியவில்லை. மேலும் மேலும் பிளவுகளே வளர்ந்து செல்கின்றன. எனவே கல்வி நோக்கங்கள் குறிக்கோள்கள் உருவாக்கப்படும்போது ரைலர் குறிப்பிடுவது போல் அவை சம கால வாழ்க்கைக்கும், யதார்த்தத்துக்கும் பொருந்தக்கூடியதாக அமைதல் வேண்டும்.

## 2. சமகால வாழ்க்கை

சம கால வாழ்க்கை தொடர்பாக ரைலர் இரு வேறு பிரச்சினைகளை இனங்காண்கிறார்.

* நடைமுறை வாழ்க்கை பல்வேறு பிரிச்சினைகளை உள்ளடக்கியது.
* கற்பவற்றுக்கும் நடைமுறை வாழ்வுக்கும் இடையில் இடைவெளி காணப்படுகிறது.

நடைமுறை வாழ்வில் குறிக்கோள்களை மையமாகக் கொண்டு ஒரு பிள்ளை கற்றுக் கொள்வதற்குப் பல்வேறு வழிகளுள்ளன என ரைலர் குறிப்பிடுகிறார். உதாரணமாக போக்குவரத்து முறைகள், விவசாயம், பொருட்கள் சேவைகள் உற்பத்தி, போன்றவற்றைக் குறிப்பிடலாம் அத்துடன் வித்தியாசமான இடங்களில் பெற்றுக் கொள்ளப்படும் அனுபவங்களையும் அடிப்படையாகக் கொள்ளலாம் என்கிறார். உதாரணமாக ஆறுகள், பள்ளத்தாக்குகள், மலைப்பிரதேசங்கள் கிராம, நகர வேறுபாடுகள், போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஒவ்வொரு சமூகத்திலும் வெவ்வேறான பண்பாட்டுச் சூழ்நிலைகள் காணப்படலாம். அவர்களது வாழ்க்கைச் சூழ்நிலையிலும், குடும்ப முறையியல்களிலும் வேறுபாடுகள் காணப்படலாம். பொருட்கள் சேவைகளை அனுபவிப்பதிலும் அவற்றைப் பரிமாற்றம் செய்வதிலும் ஒரு சமூகம் மற்றொரு சமூகத்துடன் தொடர்பாடலை மேற்கொள்வதிலும் வேறுபாடுகள் காணப்படலாம். பொழுதுபோக்குகள், சமய, கலை உணர்வுகள் போன்றவற்றிலும் வேறுபாடுகள் காணப்படலாம் என ரைலர் குறிப்பிடுகிறார். இவை யாவற்றையும் கவனத்தில் கொண்டே கலைத்திட்டம் உருவாக்கப்படுதல் வேண்டும் என்பதை ரைலர் வலியுறுத்துகிறார்.

இலங்கையைப் பொறுத்த வரையில் தேசிய அடிப்படையில் நாட்டிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் பொதுவாக ஒரே மாதிரியான கலைத்திட்ட உருவாக்கமே காணப்படுகிறது. இக் கலைத்திட்டம் தேசிய மட்டத்திலான பொதுப் போட்டிப் பரீட்சைகள் மூன்றை மையமாகக் கொண்டதாகும். அவையாவன

* 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை
* க.பொ.த சாதாரணதரப் பரீட்சை
* க.பொ.த உயர்தரப் பரீட்சை

என்பனவாகும். இந்த வகையில் இலங்கையில் ரைலர் குறிப்பிடுவது போல் பிரதேச வேறுபாடுகளோ, சமூக வேறுபாடுகளோ, கிராம, நகர வேறுபாடுகளோ பெருமளவில் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்றே கொள்ளலாம். பொதுவாக இலங்கையில் கலைத்திட்ட உருவாக்கத்தில் கிராமங்களை விட நகரங்களுக்கே கூடுதல் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. அதாவது இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களினதும் சமூக, பொருளாதார, கலை, பண்பாட்டு அம்சங்களுக்கு சமவளவான முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. கலைத்திட்டத்தில் தென்பகுதிக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் வடகிழக்குப் பகுதிகளுக்கோ, மலையகப் பகுதிகளுக்கோ கொடுக்கப்படுவதாக ஒப்பீட்டளவில் காண முடியவில்லை.

ரைலர் குறிப்பிடுவது போல் கற்பவற்றுக்கும் நடைமுறை வாழ்வுக்கும் இடையில் இடைவெளி காணப்படுகிறது. எதிர்காலத்திலாவது இவை நிவர்த்தி செய்யப்பட்டால்தான் இலங்கையின் தேசிய குறிக்கோள்களை அடையக்கூடியதாகவிருக்கும். இலங்கையின் எந்தப் பிரதேசம் என்றாலும் மாணவன் தான் கற்க வேண்டியதைத் தானே தீர்மானித்துத், தானே தெரிவு செய்து கற்கக்கூடிய வகையில் கலைத்திட்டம் நெகிழ்ச்சியுடையதாக உருவாக்கப்படுதல் வேண்டும். அதாவது பாடசாலைகளே தமக்குப் பொருத்தமான கலைத்திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் சூழ்நிலை உருவாக்கப்படுதல் வேண்டும். போதனைக் குறிக்கோளுக்கோ, பரீட்சை மையத்துக்கோ அப்பால் சமகால வாழ்க்கைக்குத் தேவையான கலைத்திட்டத்தைப் போதிப்பவைகளாகப் பாடசாலைகள் மாற்றம் பெறுதல் வேண்டும். சர்வதேச ரீதியாக இன்று பேசப்பட்டு வரும் "வாழ்க்கைக்கான கல்வி" என்னும் எண்ணக்கரு ரைலர் குறிப்பிடும் "சமகால வாழ்க்கை" எனும் எண்ணக்கருவுடன் பொருத்தப்பாடடைவதையும் இங்கு குறிப்பிடலாம்.

### 3. பாடம் தொடர்பான நிபுணர்கள

ஒரு குறிப்பிட்ட பாடம் அப் பாடத்தில் நிபுணத்துவம் பெற்றவர்களால் மாத்திரமே உருவாக்கப்படுதல் வேண்டும் என ரைலர் வலியுறுத்துகிறார். அது தவிர எவ்வாறு மாணவர்களின் கல்வி விருத்தியில் அப் பாடம் பங்குபெறுகிறது என்பதையும் அவர்கள் விளக்குதல் வேண்டும் எனவும் ரைலர் குறிப்பிடுகிறார். முறையாகப் பாடம் தொடர்பான நிபுணர்களின் கருத்துக்கள் பெறப்பட்டுக் கல்வி நோக்கங்கள் தயாரிக்கப்படுமாயின் பாட உள்ளடக்கத்திலும் மாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்படாது என்கிறார்.

உதாரணமாக 1991 இல் உருவாக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழு, கல்வியின் பல்வேறு நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நன்கு ஆராய்ந்ததுடன் பொதுமக்களினதும் பல மட்டங்களிலுமுள்ள கல்வியியலாளர்களினதும், கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரினதும் கருத்துக்களைப் பெற்றே தேசிய கல்விக் குறிக்கோள்களையும் கலைத்திட்ட நடைமுறைகளையும் உருவாக்கி வெளிப்படுத்தியது.

இலங்கையில் தற்போது கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் பாடநூல் உருவாக்கத்திற்காகப் பாடம் தொடர்பான நிபுணர்கள் நாடு முழுவதிலிருந்தும் அழைக்கப்பட்டு எழுத்துப் பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் உட்படுத்தப்பட்டு தெரிவு செய்யப்படுகிறார்கள். ரைலர் குறிப்பிடும் பாடம் தொடர்பான நிபுணர்கள் கலைத்திட்ட உருவாக்கத்தில் முக்கியத்துவம் பெறுவதை இது உறுதிப்படுத்துகிறது. ஆனால் தெரிவு செய்யப்படும் நிபுணர்கள் கல்வி அமைச்சுக்குச் சென்று பாட உருவாக்கச் செயற்பாடுகளில் ஈடபடவேண்டியுள்ளதால் அவர்கள் பல்வேறு சிரமங்களுக்குட்படுகிறார்கள். அத்துடன் அவர்களுக்கான கொடுப்பனவுகளின் அளவு போதாமல் இருப்பதும் கொடுப்பனவுகளைப் பெறுவதிலுள்ள காலதாமதமும் அவர்களைச் சலிப்படையச் செய்கிறது. அத்துடன் கல்வி அமைச்சுக்குத் தொடர்ச்சியாக நிபுணர்கள் செல்ல வேண்டியுள்ளதால் அவர்கள் கடமையாற்றும் நிறுவனங்களில் அவர்களது பணி நிறைவேற்றப்படாமல் தேக்கமடைகிறது. இதனால் நிறுவனத் தலைவர்கள் அவர்களை நூல் உருவாக்கப் பணிக்கு அனுமதிப்பதில் தயக்கம் காட்டும் சூழ்நிலையும் காணப்படுகிறது. இந் நிலமையை இலகுவாக்கும் நடைமுறைகளை கல்வி அமைச்சு மேற்கொள்ளுதல் வேண்டும்.

பொருத்தமான பாடத்துறைகளுக்குப் பொருத்தமான நிபுணர்கள் பங்குபற்றாததால் நிபுணத்துவம் குறைந்தவர்களைத் தெரிவு செய்து பணிக்கமர்த்தும் நிலையும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துக்கு ஏற்படும் சூழ்நிலையும் காணப்படுகிறது. இது பாடம் தொடர்பான விளைதிறனைப் பாதிக்கும் நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதையும் மறுக்க முடியாது.

தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் தாய்மொழி, சமயம் ஆகிய பாடங்களைத் தவிர ஏனைய பாடங்களுக்குப் பாடம் தொடர்பான நிபுணர்களை விட நிபுணத்துவம் வாய்ந்த சிங்கள தமிழ் மொழிபெயர்ப்பாளர்களே அவசியப்படுகின்றனர். பாடங்கள் யாவும் சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழி மாற்றம் செய்யப்படுகிறதே தவிர தமிழிலிருந்து சிங்களத்துக்கு மொழிமாற்றம் செய்யப்படுவதாகத் தெரியவில்லை. இது தமிழ்மொழியில் பாடம் தொடர்பான நிபுணர்களின் பற்றாக்குறையைக் காட்டுகிறதா? அல்லது மொழி,

இனம் தொடர்பான அலட்சியத்தை அல்லது வேறுபாட்டைக் காட்டுகிறதா? என்பது புலப்படவில்லை.

மேலும் சிங்கள மொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கும்போது மொழியறிவு பெற்ற நிபுணர்களிடம் பாட அறிவு குறைவாகக் காணப்படுவதால் விடயதானத்திலும் மொழியோட்டத்திலும் பல்வேறு தவறுகள் ஏற்படுகின்றன. இலக்கணப் பிழைகளும் அர்த்த முரண்பாடுகளும் பாடநூல்களில் காணப்படுவதாக அண்மைக் காலங்களில் பரவலான குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படுகின்றன. அத்துடன் வினாப்பத்திரங்கள் கூட இவ்வாறு மொழிபெயர்க்கப்படுவதால் மாணவர்கள் வினாக்களைப் புரிந்து கொள்ள முடியாமல் குழம்பும் நிலையும் காணப்படுகிறது. இதனால் உரியவர்கள் பாடம் தொடர்பான நிபுணர்களைத் தெரிவு செய்யும் போது மிகுந்த அவதானம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும்.

### 4. நோக்கம் குறிக்கோள்களைத் தெரிவு செய்வதில் தத்துவத்தின் பங்களிப்பு

ஒரு சமூகத்தில் வாழ்கின்ற மக்களின் நற்பண்புகளைப் பற்றித் தத்துவம் விளக்குகிறது. கல்வியும் தத்துவமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத இரு கூறுகளாகும். இவை ஒரு நாணயத்தின் இரு பக்கங்களுக்கு ஒப்பிடப்படுகின்றன. எனவே தத்துவமின்றிக் கலைத்திட்டமில்லை எனலாம். காலத்துக்குக் காலம் கல்வியில் மாற்றங்கள் ஏற்படுவதற்குத் தத்துவஞானிகளின் கருத்துக்களே அடிப்படையாகவுள்ளன எனலாம்.

கலைத்திட்டத்தில் தத்துவத்தைப் பயன்படுத்துவதன் மூலம் உருவாக்கப்படும் குறிக்கோள்கள் மாணவர்கள் சமூக ஒழுக்கங்களையும், சமூக மாற்றங்களையும் கற்றுக் கொள்வதை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும். அது மாத்திரமல்லாமல் பிரச்சினை தீர்ப்பதற்குரிய ஆற்றலை வளர்ப்பதாகவும் சுய கட்டுப்பாடு, சுய செயற்பாடு போன்ற பண்புகளை வளர்ப்பதாகவும் அமைதல் வேண்டும்.

இலங்கையில் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், பாடம், ஆரம்ப வகுப்புகளில் இயற்கையோடிணைந்து கற்பிக்கப்படுவதற்கு ரூசோவின் இயற்கை வாதம் அடிப்படையாகவுள்ளது. அவர் ஒவ்வொரு வயது மட்டத்திலும் எவ்வாறு இயற்கையோடிணைந்து பிள்ளை கற்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனத் தனது தத்துவத்தில் விளக்குகிறார்.

ஆரம்ப வகுப்புகளில் செயற்பாடு சார்ந்த கலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கும், தரம் 9 இல் தொழில்நுட்பத் திறன்களையும் செயன்முறைத் திறன்களையும் வளர்ப்பதற்காக செயற்பாட்டறை பாடசாலைகளில் ஒழுங்கமைக்கப்படுவதற்கும் ஜோன் டூயியின் பயன்பாட்டு வாதம் எனும் தத்துவம் அடிப்படையாகவுள்ளதைக் குறிப்பிடலாம். செயற்பாட்டுக் கல்வியைப் பற்றிக் காந்தி, கார்ல்மார்க்ஸ் போன்றவர்களும் தமது தத்துவங்களின் அடிப்படையாகக் கொண்டிருந்தனர் என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பாடசாலைக் கலைத்திட்டத்தில் தத்துவங்களை உள்ளடக்கியே பாட உள்ளடக்கங்களும் தெரிவு செய்யப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. உதாரணமாக தற்போது தரம் 7 இல் நடைமுறையிலுள்ள வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக் கல்வியும் எனும் பாடத்திலுள்ள அலகுகளுள் சில பின்வருமாறு அமைந்துள்ளதைக் காணலாம்.

* சுய விளக்கத்துடன் செயற்படுவோம்.
* ஆளுமை விருத்திக்காக ஓய்வு நேரங்களைப் பயன்படுத்துவோம்.
* விழுமியங்களை மதிப்போம்.
* சிறந்த ஆளிடைத் தொடர்புகளை வாழ்க்கையோடு இணைத்துக் கொள்வோம்.
* எமது மக்கள், சமூகம்.
* எமது கலாசாரம்.

இலங்கையில் ஆசிரிய மையம் இன்னும் வேரூன்றியிருக்கின்ற சூழ்நிலையையே அவதானிக்க முடிகிறது. ஆரம்ப வகுப்புகளிலேயே போதனையை மேற்கொள்ளும் ஆசிரியர்களை இன்றும் அதிகளவில் காணமுடிகிறது. அத்துடன் ஆசிரியரின் மிகப் பெரிய பணி பரீட்சைக்கு வழிப்படுத்துவதே என்ற எண்ணக்கருவிலிருந்து அவர்கள் விலகுவதாகவும் தெரியவில்லை.

கல்வித் தத்துவ சிந்தனைகளில் குறிப்பிட்டுள்ளவாறு மாணவர்களைப் பிரச்சினை தீர்ப்பதற்கு வழிப்படுத்துவதிலோ. தீர்மானம் மேற்கொள்ளப் பழக்குவதிலோ, வெளிக்களம் சார்ந்த செயற்றிட்டங்களில் பழக்கப்படுத்துவதிலோ, ஆசிரியர்கள் பெருமளவு முனைப்புக் காட்டுவதாகத் தெரியவில்லை. தமது சேவையை உறுதிப்படுத்துகின்ற எழுத்தாவணங்களைச் சேகரிப்பதிலும் அவற்றைக் கோவைப்படுத்துவதிலுமே கூடுதல் முனைப்புக் காட்டுவதாகத் தெரிகிறது.

நடைமுறையில் மாணவர்கள் மத்தியில் மனித விழுமியங்கள் மங்கிச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது. ஒழுக்க நியமங்கள், ஜனநாயகப் பண்புகள், தலைமைத்துவப் பண்புகள், மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றன. இலங்கையில் கலைத்திட்டங்களும் கற்பித்தல் முறைகளும் ஒரு வைத்தியரையோ அல்லது பொறியியலாளரையோ அல்லது வழக்கறிஞரையோ உருவாக்குவதில் முனைப்புக் காட்டுவதை விட நல்ல மனிதப் பண்புகளைக் கொண்ட சமூகப் பிரஜைகளை உருவாக்குவதில் அதிகளவில் முனைப்புக் காட்டுதல் வேண்டும்.

**5. நோக்கம் குறிக்கோள்களைத் தெரிவு செய்வதில் உளவியலின் பங்களிப்பு**

கலைத்திட்ட நோக்கங்கள், குறிக்கோள்களினூடாக மாணவர்களிடம் உடல் உள ஆற்றல்கள், சமூக மனவெழுச்சித் திறன்கள், மொழித்திறன்கள், தொடர்பாடல் திறன்கள், ஒழுக்க விருத்தி, சுய ஊக்கல், ஆளுமை, புலக்காட்சி, எண்ணக்கரு விருத்தி போன்ற அம்சங்களை ஏற்படுத்துதல் வேண்டும். இதற்கு உளவியலே அடிப்படையாகவுள்ளது. கலைத்திட்டத்தை விருத்தி செய்யும்போதும் கற்றல், கற்பித்தல் முறைகளைத் திட்டமிடும் போதும் மாணவர்களின் வயது மட்டம், அறிவு மட்டம் என்பவற்றைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இதற்கு உளவியல் சார்ந்த கோட்பாடுகளே அடிப்படையாகவுள்ளன.

இலங்கையில் கலைத்திட்ட விருத்தியிலும் நடைமுறைப்படுத்தல்களிலும் அதிகளவில் உளவியல் கோட்பாடுகள் பின்பற்றப்படுவதைக் காண முடிகிறது உதாரணமாக ஆரம்ப வகுப்புகளில்,

* பாடசாலைக்குள் பிரவேசிக்கும் குழந்தைகளை இனங்காணல்.
* முதன்மை நிலை 1 இல் திட்டமிடப்பட்ட விளையாட்டுக்களும் விநோதங்களும் அதிகமிருத்தல்.
* பிள்ளைகளின் அடைவு மட்டத்தை ஒப்பிடாமை.
* வளர்ந்த மாணவர்களுடன் குழுவேலை.
* ஒரு பிள்ளைக்கு வகுப்பறையில் குறைந்தது 1 சதுர மீற்றர் இட வசதியளித்தல்.
* ஒவ்வொரு முதன்மை நிலையும் ஒரே ஆசிரியரின் கீழ் செயற்படுத்தப்படல்.

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இலங்கையைப் பொறுத்த வரையில் நடைமுறையிலிருக்கும் பரீட்சை மையக் கலைத்திட்டச் சூழ்நிலை மாணவர்களை உளவியல் ரீதியாகப் பாதிப்படையச் செய்யும் தன்மையைக் கொண்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உதாரணமாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து தகைமை பெற்றும் பல்கலைக் கழகம் செல்ல முடியாத மாணவர்கள், மாவட்ட ரீதியான வெட்டுப் புள்ளி முறையால் பாதிக்கப்படும் மாணவர்கள், கிராமப் புறங்களில் சிறப்புப் பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாமையாலும் கணினி, இணையம் போன்ற நவீன வசதிகள் இல்லாமையாலும் பாதிக்கப்படும் மாணவர்கள் என உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படும் பிள்ளைகள் அதிகம் காணப்படுகின்றனர்.

மாணவர்களின் சுய திறன்களுக்கும், சுய ஊக்கல்களுக்கும் இலங்கையில் நடைமுறையிலுள்ள கலைத்திட்டத்தில் அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. கலைத்திட்டத்தினுள்ளும், நோக்கங்கள், குறிக்கோள்களினுள்ளும் மாணவர்களைக் கட்டுப்படுத்துவதால் மாணவர்கள் அவற்றுக்கு வெளியே சிந்திப்பதிலிருந்தும் தமது ஆக்கத் திறன்களை வெளிப்படுத்துவதிலிருந்தும் தடுக்கப்படுகின்றார்கள் என்ற விமர்சனங்களும் கல்வியியலாளர்கள் மத்தியிலிருந்து தோற்றம் பெறுகிறது. எனவே கலைத்திட்ட உருவாக்குனர்களும் அவற்றை நடைமுறைப்படுத்துபவர்களும் ரைலர் குறிப்பிடுவதுபோல் உளவியலுக்கு முதன்மையளித்தல் வேண்டும்.

**6. பாட உள்ளடக்கம**

ரைலர் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டே பாட உள்ளடக்கத்தைத் தெரிவு செய்ய வேண்டுமென்கிறார். குறிக்கோளுக்கு அமைவாகப் பாட உள்ளடக்கம் தெரிவு செய்யப்படாவிட்டால் சரியான கற்றல் அனுபவங்களை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியாமல் போய்விடும். எனவே கற்பவருக்குப் பொருத்தமாக அவரது நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தக்கூடியதாக இவ் உள்ளடக்கம் தெரிவு செய்யப்படுதல் வேண்டும் என ரைலர் வலியுறுத்துகிறார். அது தவிர குறிக்கோளிலிருந்து தெரிவு செய்யப்படும் பாட உள்ளடக்கம் வகுப்பறைகளில் கற்பிப்பதற்காகத் தயார்ப்படுத்தப்படும் போது பாடங்களுக்கிடையிலான தொடர்புகளும், அலகுகளுக்கிடையிலான தொடர்புகளும் கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார்.

எந்தப் பாடத்தினூடாகவென்றாலும் குறிக்கோள் அடையப்படுதலே முக்கியமானதாகும் என்பதை ரைலர் வலியுறுத்துகிறார். உதாரணமாகப் போசாக்கு எனும் அலகை சமூகக் கல்வி, சுகாதாரம், விஞ்ஞானம், மனையியல், போன்ற பாடங்களில் மாத்திரமல்லாமல் மொழிப் பாடத்திலும் கற்பிக்க முடியும். இலங்கையின் ஆரம்பக் கல்விக் கலைத்திட்டம் ஒன்றிணைந்த கலைத்திட்டமாக ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ள முடியும். ஆரம்ப வகுப்புக்களில் வகுப்புக்களுக்கும் அலகுகளுக்குமிடையில் குத்தாகவும் கிடையாகவும் தொடர்பு காணப்படும் வகையிலேயே கலைத்திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

ஏற்றுக்கொள்ளக்கூடிய நடத்தைகளை உருவாக்கி நிலைபெறச் செய்வதற்கும், ஏற்றுக் கொள்ள முடியாத நடத்தைகளை நீக்கவும் மாணவனுக்கு உதவக்கூடியவாறு திட்டமிடப்பட்டுள்ள கற்றல் அனுபவங்களைக் கொண்டதாகப் பாட உள்ளடக்கம் தயாரிக்கப்படுதல் வேண்டும். உதாரணமாக "ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்புதல்" எனும் கல்விக் குறிக்கோளை அடைவதானால் அதற்குப் பொருத்தமான நடத்தைகளைக் கற்றுக் கொள்ளக்கூடியவாறு சமயம், சமூகக் கல்வி, சுகாதாரம், மொழி, வாழ்க்கைத் தேர்ச்சி போன்ற பாடங்களின் உள்ளடக்கம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

இலங்கையின் பாடசாலைக் கலைத்திட்டத்தில் கூட இவ்வாறான பாடங்களில் இவ்வாறான உள்ளடக்கம் ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. உதாரணமாக தரம் 6 "சுகாதாரமும் உடற் கல்வியும்" எனும் பாடத்தின் உள்ளடக்கத்தில் சில அலகுகள் பின்வருமாறு அமைந்துள்ளதைக் காணலாம்.

* ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்ப நமது பங்களிப்பு
* ஆரோக்கியமாக வாழ்வோம்.
* ஆரோக்கிய வாழ்க்கைக்கான சரியான மெய்நிலைகளைப் பேணுவோம்.
* ஆரோக்கிய வாழ்க்கைக்குப் பொருத்தமான உணவுகளைத் தெரிவு செய்து கொள்வோம்.
* நோய்களை வெற்றிகரமாக எதிர்கொள்வோம்.
* மனவெழுச்சிச் சமநிலையைச் சீரான உடல், உளச் சுகத்துக்காகப் பயன்படுத்துவோம்.

பாட உள்ளடக்கம் தெரிவு செய்யப்படும் போது அது கற்றலில் ஈடுபட்டுள்ள மாணவன் சார்பானதாக அமைதல் வேண்டும். மீத்திறன் மாணவனால் மாத்திரம் கற்கக்கூடியதாகப் பாட உள்ளடக்கம் அமைதல் கூடாது. பின் தங்கிய மாணவனுக்கும், விசேட தேவையுடைய மாணவனுக்கும் பொருத்தமானதாக அமைதல் வேண்டும். அத்துடன் மாணவனின் முதிர்ச்சிக்கும், தேவைக்கும் ஏற்றதாக அமைதல் வேண்டும். கற்றலில் ஊக்கலை ஏற்படுத்துவதாக அமைதல் வேண்டும். அதனாலேயே ரைலர் கற்றலில் ஈடுபட்டுள்ள மாணவர் பற்றிய அறிவு கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும் என குறிப்பிடுகிறார்.

இதற்கமைவாக இலங்கைப் பாடசாலைகளில் தற்போது பரிகாரக்கற்பித்தல் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதைக் குறிப்பிட்டுக்கூற முடியும். அது தவிரப் பின்தங்கிய மாணவர்களும் கற்கக்கூடிய வகையில் தற்காலத்தில் அதிகமான ஆசிரியர்கள் சிக்கலான அலகுகளைக்கூட மிகவும் எளிமையாக்கி சிறு சிறு உப அலகுகளாகப் பிரித்து நவீன கற்பித்தல் சாதனங்களைக்கூடப் பயன்படுத்திக் கற்பிப்பதை அவதானிக்க முடிகிறது.

பாட உள்ளடக்கம் தெரிவுசெய்யப்படும் போது தற்கால வாழ்க்கை முறை பற்றிக் கவனத்தில் கொள்வது அவசியமானது என ரைலர் குறிப்பிடுகிறார். இது உண்மையிலேயே ஏற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த கருத்தாகும். உதாரணமாக தற்காலத்தில் கணினி பற்றிய அறிவு சகல மாணவர்களுக்கும் மிக மிக அவசியமானதாகும். அதற்கு அமைவாக தற்போது இலங்கையில் பாடசாலைகள் தோறும் கணினி மையங்கள் அமைக்கப்பட்டுப் பாட நெறிகளும் பின்பற்றப்படுவதைக் குறிப்பிட்டுக் கூறலாம். ஆங்கிலக் கல்வி முக்கியத்துவப்படுத்தப்படுவதையும் இதற்கு மேலும் ஒரு உதாரணமாகக் கொள்ளலாம்.

கலைத்திட்டம் தயாரிக்கும் போதும் நோக்கங்கள், உள்ளடக்கங்கள் தெரிவு செய்யப்படும்போதும் ஒவ்வொரு பாடம் பற்றியும் கல்வி நிபுணர்களின் அபிப்பிராயம் அவசியம் அறியப்படுதல் வேண்டும். எமது நாட்டின் கலைத்திட்டத்திலும்கூட ஒவ்வொரு சீர்திருத்தத்திலும் பாடங்கள் மாற்றப்படுகின்றன. உதாரணமாக 1997 இல் இடம்பெற்ற சீர்திருத்தத்தில் வாழ்க்கைத்திறன், வாழ்க்கைத் தேர்ச்சியாகவும் விஞ்ஞானம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமுமாகவும் மாற்றம் பெற்றதைக் குறிப்பிடலாம்.

1997 இல் தரம் 6 இல் அதுவரை இருந்து வந்த விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களுக்குப் பதிலாக சுற்றாடற் கல்வி என்னும் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதேவேளை 2007 இல் சுற்றாடற் கல்விக்குப் பதிலாக விஞ்ஞானம், வரலாறு, புவியியல், வாழ்க்கைத் தேர்ச்சிகள் முதலிய தனிப்பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ரைலர் குறிப்பிடுவது போல் முறையாகப் பாட நிபுணர்களின் வழிகாட்டல், ஆலோசனையின் கீழ் பாடங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருப்பின் அடிக்கடி மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாமலிருக்கும்.

## 7. ஒழுங்கமைப்பு

பாட உள்ளடக்கத்தைக் கற்பித்தலுக்குத் தயார்ப்படுத்தும்போது பாடசாலையில் நிலவும் நிலமைகளுக்கு ஏற்ப அதனை ஒழுங்கமைத்தல் வேண்டும். கற்றல் அனுபவங்களையும், பாடவிடயங்களையும் ஒன்றிணைப்பதற்கு ஒழுங்கமைப்பு அவசியமாகின்றது. இவ் ஒழுங்கமைப்பில் கற்பித்தல் திட்டங்கள், வேலைத்திட்டங்கள், கற்றல் உபகரணங்கள், பாடப்புத்தகங்கள், வாண்மையுடைய ஆசிரிய அணியினர், பரீட்சிக்கும் தாபனங்கள் போன்றவை அடங்கும். மாணவர்களுக்கு எத்தகைய நுட்பங்களைக் கையாண்டு எண்ணக்கருக்களையும், திறன்களையும் வழங்க வேண்டுமென்பது பற்றிய ஒரு தெளிவை இவ் ஒழுங்கமைப்பின் மூலமே மேற் கொள்ள முடியுமென ரைலர் எதிர்பார்க்கின்றார்.

கலைத்திட்ட ஒழுங்கமைப்பின்போது கலைத்திட்டத்தையும் மாணவருடைய கற்றலையும் கண்காணிப்பதற்கும் மதிப்பிடுவதற்கும் இடமளிக்கப்படுதல் வேண்டும். சரியான ஒரு கற்றல் சூழல் (Learning Environment) ஒழுங்கமைக்கப்படுதல் வேண்டுமென ரைலர் வலியுறுத்துகின்றார். அதாவது ரைலர் நோக்கம், குறிக்கோள், பாட உள்ளடக்கம், மதிப்பீடு ஆகியவற்றுக்கிடையே பரஸ்பரத் தொடர்பு கொண்டதாகவும், நோக்கம், பாடஉள்ளடக்கம் என்பவை மதிப்பீடு செய்யத்தக்கதாகவும் கலைத்திட்டம் ஒழுங்கமைக்கப்படுதல் வேண்டுமென வலியுறுத்துகின்றார்.

இலங்கையில் பாட வல்லுனர்களால் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு பாடங்கள் முறைசார்ந்த ரீதியில்

நேரசூசிக்குட்படுத்தப்பட்டு ஆசிரியர்களினால் தயார்ப்படுத்தப்பட்டு பல்வேறு கற்பித்தல் முறைகளினூடாகக் கற்பிக்கப்படுகின்றது. ரைலரின் ஒழுங்கமைப்புப் பற்றிய சிந்தனை இங்கு முதன்மை பெறுவதைக் காண முடிகின்றது.

இலங்கையைப் பொறுத்த வரையில் கலைத்திட்ட ஒழுங்கமைப்பில் நகரங்களுக்கும் கிராமங்களுக்குமிடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. பாடசாலை வளங்கள், கவின்நிலை கொண்ட வகுப்பறைகள், நிபுணத்துவம் வாய்ந்த ஆளணியினர், கற்றல் கற்பித்தல் சாதனங்கள், மதிப்பீடு, மேற்பார்வை, என ஒவ்வொரு அடிப்படைகளிலும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகள் நீக்கப்பட்டாலேயே தேசிய ரீதியல் கல்விக் குறிகோள்களை அடையக்கூடியதாகவிருக்கும்.

## 8. மதிப்பீடு

ரைலர் தனது மாதிரியின் இறுதியில் மதிப்பீட்டை வைத்துள்ளார். நோக்கம் அடையப்பட்டுள்ளதா? என்பது மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. இதனாலேயே கலைத்திட்ட அபிவிருத்தியில் மிக முக்கியமான தேவையாகவுள்ளது மதிப்பீடாகும் என இவர் குறிப்பிடுகிறார். பாடவிதானத்தின் வெற்றி இம் மதிப்பீட்டிலேயே தங்கியுள்ளது என்கிறார்.

அறிதல் ஆட்சி, உளவியக்க ஆட்சி, மனவெழுச்சி ஆட்சி ஆகிய மூன்று பிரிவுகளையும் சேர்ந்த நோக்கங்கள் கலைத்திட்டத்தின் ஊடாக நிறைவேற்றப்படுகின்றனவா? என்பது முழுமையான மதிப்பீட்டுத் தொகுதியினூடாகவே தீர்மானிக்கப்படுகின்றது. கலைத்திட்டத்தின் உள்ளடக்கம், அதன் செயற்பாடு தன்மை, குறைபாடுகள், என்பன மதிப்பீட்டின் ஊடாகவே நிரணயிக்கப்படுகின்றன.

கலைத்திட்டம் மாணவனை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும். அது சம கால வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக, அதனை நேரான வழியில் திசைமுகப்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும். இதனடிப்படையிலேயே பாடம் தொடர்பான நிபுணர்கள் பாட உள்ளடக்கத்தைத் தெரிவு செய்தல் வேண்டும். இவை யாவும் தத்துவம், உளவியல், சமூக விஞ்ஞானம், போன்ற அடிப்படைக் கோட்பாடுகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும். இப் பொருத்தப்பாடுகள் யாவும் சரியான முறையில் அடையப்பட்டுள்ளதா? என்பது மதிப்பீட்டின் மூலமே உறுதிப்படுத்தப்படுகின்றது என ரைலர் வலியுறுத்துகிறார்.

ரைலர் மதிப்பீட்டை இறுதிப் படியில் வைத்ததைப் பற்றிப் பல்வேறு விமர்சனங்கள் தோற்றம் பெற்றுள்ளன. கருமத் தொடரின் வெவ்வேறு படிகளின்போது மதிப்பீடோ, சீர்திருத்தங்களோ இம் மாதிரியில் இடம்பெறாதது ஒரு முக்கிய குறைபாடாகவே கருதப்படுகிறது. அதேவேளை அடைய வேண்டிய இடத்தை அடையாவிடின் அதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை யாது? எனவும் இவர் குறிப்பிடவில்லை.

கலைத்திட்ட உருவாக்க வரலாற்றில் ரைலர் ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளார். இவரைப் பின்பற்றியே ஏனையவர்கள் தங்களது வடிவமைப்புக்களை முன்வைத்துள்ளனர். இவரது கலைத்திட்ட அறிவுறுத்தல்கோட்பாடுகள் (Principles of Curriculum and Instruction 1949) எனும் நூல் கலைத்திட்ட வரலாற்றில் ஒரு மைல்கல்லாகவே இன்றும் திகழ்கிறது.

இரண்டாம் உலகப் போரின் பின் கலைத்திட்டம் தொடர்பாகப் பல்வேறு அபிவிருத்திகள் ஏற்பட்டன. ஐக்கிய அமெரிக்காவில் ரைலரின் மாதிரி சிறந்த வரவேற்பைப் பெற்றது. இதற்குக் காரணம், குறிக்கோளை இனங்காண்பதில் அமெரிக்கா கூடிய கவனம் செலுத்தியதாகும். அமெரிக்காவினதும் கலைத்திட்ட உருவாக்குனர்களினதும் கவனத்தை ரைலர் கவர்ந்ததற்குக் காரணம் அவர் நோக்கத்திற்குக் கொடுத்த முக்கியத்துவமாகும். நோக்கமே மாதிரியின் பிதா என இவர் குறிப்பிடுகிறார்.

இன்றைய நவீன உலகில் கல்வியின் போக்கு புதிய பரிமாணங்களை எடுத்துள்ளது. அறிவு வெடித்துப் பிரவாகிக்கும் சூழ்நிலை விருத்தி பெற்றுச் செல்கிறது. ஆசிரியனை விஞ்சியவனாக மாணவன் சென்று கொண்டிருக்கிறான். போதனை முறையும், பரீட்சை மையமும் செல்வாக்கிழந்து சென்று கொண்டிருக்கின்றது. வாழ்நாள் நீடித்த கல்வி, திறந்த கல்வி, வளர்ந்தோர் கல்வி, என உலகம் வித்தியாசமான விருத்திப் போக்கில் சென்று கொண்டிருக்கின்றது. ஆசிரிய மையம் வலுவிழந்து அகிலமெங்கும் மாணவமையம் வலுப்பெற்று வருகின்றது. இச்சிந்தனைகளும் செயன்முறைகளும் உருப்பெறுவதற்கும் விருத்தி பெறுவதற்கும் ரைலர் அத்திவாரமிட்டுள்ளார் எனலாம்

மாணவன் தனது சுய நடத்தைகளையும், விழுமியங்களையும், இலக்குகளையும் பாடசாலைக்குக் கொண்டு வருகின்றான். இவ் வேளையில் ஒவ்வொரு மாணவனினதும் தேவைகளை நிறைவேற்றக்கூடியதாகக் கலைத்திட்டத்தைப் பொருத்தப்பாடுடையதாக்கச் செய்வதே கலைத்திட்டத்தை உருவாக்கும்போது எதிர்நோக்க வேண்டிய பாரிய பிரச்சினையாகும் என ரைலர் குறிப்பிடுகிறார்.

எனினும் ரைலரால் நோக்கம் குறிக்கோள் என்பவற்றுக்குச் சரியான விளக்கமளிக்க முடியவில்லை என்றே கூறுதல் வேண்டும். கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு இவரது மாதிரி பொருத்தமானதே தவிர ஆங்கில இலக்கியம் போன்ற பாடங்களுக்கு, பொருத்தமானதல்ல என்ற விமர்சனமும் இவருக்கு எதிராகப்

பலமாக உருவாக்கம் பெற்றது. தவிர குறிக்கோள்கள் அடையப்பட்டதா? என்பதை அளவிடுவது தொடர்பாக இவரது மாதிரியில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன.

ஒரு இராணுவ வீரன் எவ்வாறு தனது துப்பாக்கியைச் சுத்தம் செய்ய வேண்டுமென்பதை மதிப்பிடுவதற்குரிய செவ்வைபார்த்தல் பட்டியலைத் தயாரிக்க ரைலரின் மாதிரி பொருத்தமானதாகவுள்ளது. ஆனால் கல்வி மிக மிக வித்தியாசமானது துப்பாக்கியில் பெயரிடப்பட்ட பகுதிகளுக்கு ஒப்பானதாகக் கல்வியின் கூறுகளைக் கொள்ள முடியாது என விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவரது மாதிரியில் மதிப்பீடு இறுதியாகவுள்ளது. இது போர் முடிவடைந்த பின்னர் இராணுவப் புலனாய்வு செய்வதற்கு ஒப்பானதாகும் என புறூணர் குறிப்பிடுகிறார். எனவே மதிப்பீடு இறுதியாக இடம்பெறக்கூடாது ஒவ்வொரு கட்டத்திலும் இடம் பெறுதல் வேண்டும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இலங்கையில் கூட இன்றும் பாடத் திட்டமிடலில் மதிப்பீடு இறுதியிலேயே உள்ளடக்கப்படுகிறது. ஏன் 5E மாதிரியில் கூட மதிப்பீடு (Evaluation) 5வது E யாகவே வைக்கப்பட்டுள்ளது. இதனை மையமாக வைத்தே எமது ஆசிரியர்களும் மதிப்பீடு இறுதியில்தானே மேற்கொள்ளுதல் வேண்டும் என்னும் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டவர்களாகவிருக்கின்றனர்.

ரைலரின் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்ட மாதிரியை கல்வியியலாளர்கள் முழுவதுமாக நிராகரிக்கவில்லை. மாணவர்களின் நடத்தையை அளவிடுவதற்குக் குறிக்கோள் பொருத்தமானதல்ல என்றே குறிப்பிடுகின்றனர். ரைலரது கலைத்திட்ட மாதிரிக்கு எழுந்த முக்கியமான எதிர்ப்பு யாதெனில் இவரது கலைத்திட்ட மாதிரி குறிக்கோள் என்றால் என்ன? என்பதைப் புரிந்து கொள்ளக்கூடியவாறு தயாரிக்கப்படவில்லை என்பதேயாகும். உதாரணமாக எப்போது ஒரு நோக்கம் குறிக்கோளாக மாற்றம் பெறுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியாதுள்ளதாகும். குறிக்கோளிலிருந்து நடத்தை சார் நோக்கங்களை உருவாக்குவது தொடர்பாகவும் ரைலரின் மாதிரியில் போதிய விளக்கம் இல்லை என்றே விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இவரது மாதிரியின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டே வீலர் (Wheeler) எலியட் ஈஸ்னர் (Eliot Eisner) போன்றவர்கள் தமது மாதிரிகளை முன்வைக்கின்றனர். ரைலரின் மாதிரி மதிப்பீட்டுடன் முடிவடைய வீலர் மதிப்பீட்டிலிருந்து மீளவும் சுற்று வட்டத்தில் (Cyclical Form) தொடர்கிறார்.

அதேவேளை ஈஸ்னர் குறிக்கோளை இரு வேறு பிரிவுகளாகப் பிரித்துள்ளார். அவையாவன:

* போதனைக் குறிக்கோள் (Instructional Objectives)
* நடத்தைக் குறிக்கோள் (Expressive Objectives)

என்பனவாகும். இதில் போதனைக் குறிக்கோளை விட நடத்தைக் குறிக்கோள் கல்வியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இதன் மூலம் எவ்வாறான நடத்தை மாற்றம் ஏற்படுகின்றதென்பதனை ஆசிரியர் இனங்காண முடியும். இது அவர் கற்பித்தலை வெற்றிகரமாக நடத்த வாய்ப்பை ஏற்படுத்துகின்றது. அது மாத்திரமன்றி நடத்தைக் குறிக்கோள் எந்த மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் திருப்திகரமாக ஈடுபடுகிறார்கள் அல்லது பின்தங்கியுள்ளார்கள் என்பதை இலகுவாக இனங்காண உதவுகிறது. அதாவது மாணவர்களின் பலம், பலவீனங்களைக் கண்டறிய உதவுவதுடன் கற்றல் சூழ்நிலைக்கும், பிரச்சினைக்கும் இடம் கொடுத்துக் கற்பதற்கு உதவுகிறது எனலாம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் அனேகமான ஆசிரியர்களுக்குக் கலைத்திட்டம் பற்றிய விளக்கம் போதாமலுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அனேகமானோர் கலைத்திட்டம் என்பதைப் பாடத்திட்டத்துடன் சமப்படுத்திக் கொள்கின்றனர். தேசிய கல்வி நிறுவகத்தால் அல்லது வலய மட்டத்தில் ஆசிரிய ஆலோசகர்களால் ஓரிரு நாட்கள் நிகழ்த்தப்படும் புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிய பயிற்சிச் செயலமர்வுகள் மூலம் கலைத்திட்டம் பற்றிய விளக்கத்தை ஏற்படுத்த முடியாது என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

எனவே ஆசிரியர்களாகிய நாம் பாடத்தைத் திட்டமிடுவதற்கு முன்னர் அல்லது நடத்தை சார் நோக்கங்களைத் தீர்மானிப்பதற்கு முன்னர் பூரண கலைத்திட்டம் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும். ரைலரின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்ட திட்டமிடல் மாதிரி பற்றிய விளக்கம் அதற்குப் பெரிதும் உதவும் எனலாம்.






வ. மேரியூடிற்,

(ஆரம்பபிரிவு)

வ.தேசிய கல்வியற்கல்லூரி,

வவுனியா.


அலசல்

மாணவர்கள் பின்தங்கிக் கற்பதற்குக் காரணமாக இவர்களின் மந்த புத்தியும், கல்விச்சூழலும் முதற்காரணமாக அமைகின்றன.

# பிரச்சினைக்குரிய குழந்தைகளும் ஆசிரியரும்

சமுதாயத்தில் ஆசிரியர்களின் பணி மிகவும் பொறுப்பு வாய்ந்ததும் மகத்துவமானதுமாகும். தம் குழந்தைகளைப் புத்தி ஜீவிகளாக்கிச் சமுதாயத்திற்கு ஏற்புடைய நல்ல பிரஜைகளாக்கும் பொறுப்பைப் பெற்றோர் பாடசாலையினரிடம் விடுகின்றனர். பாடசாலையில் பிரதான இயக்குனர்கள் ஆசிரியர்களாவர். குழந்தைகள் ஒரே தன்மையான ஆற்றல், அறிவு உடையவராக இருப்பதில்லை. மிகத் திறனுடைய குழந்தைகளும் அதே சமயம் பிரச்சினைக்குரிய குழந்தைகளும் இருக்கின்றார்கள். இவர்களைச் சீரான வழியில் நெறிப்படுத்தும் பாரிய பொறுப்பு ஆசிரியரைச் சார்ந்ததாகும்.

குழந்தைகள் பொதுவாக மூன்று வகையான பிரச்சினைகள் எதிர்நோக்குகின்றார்கள்.

* உளவிருத்தி தொடர்பான பிரச்சினைகள்.
* மனவெழுச்சி தொடர்பான பிரச்சினைகள்.
* உடல்விருத்தி, கல்வி விருத்தி தொடர்பான பிரச்சினைகள்.

உளவிருத்தி, கல்வி விருத்தி தொடர்பான பிரச்சினைகளிலே பின்வரும் தன்மை கொண்ட குழந்தைகளை நாம் வகுப்பறையில் அவதானிக்கலாம்.

* பின்தங்கிக் கற்பவர்கள்
* மீத்திறன் உடையவர்கள்

மாணவர்கள் பின்தங்கிக் கற்பதற்குக் காரணமாக இவர்களின் மந்த புத்தியும், கல்விச்சூழலும் முதற்காரணமாக அமைகின்றன. ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்லாமை, அடிக்கடி பாடசாலைமாறல், வீட்டின் சமூகப் பொருளாதாரப் பின்னணி, குழந்தை முதிர்ச்சி பெறமுன் கற்பித்தல், உடல் நலக்குறைபாடுகள், பாடசாலைக்கும், வீட்டிற்கும் ஒத்திசைவின்மை, பிள்ளைக்குப் பொருந்தாத கற்பித்தல் முறைகள், பாடசாலை, பாடங்கள் போன்றவை தனித்தும் பல சேர்ந்தும் குழந்கைளிடம் பிற்போக்கை ஏற்படுத்துகின்றன.

இப்படியான மாணவர்களை இனங்கண்டு, பாராமுகமாக இராது மாணவனின் வீட்டு வாழ்க்கை, பாடசாலை ஆளுமை பற்றிய விபரங்களை அறிந்து நுண்மதி ஈவு மிகக்-

குறைவாக இருப்பின் மூலாதாரமான எண், எழுத்து என்பனவற்றையாயினும் இவர்களுக்குக் கற்பிக்கலாம். சாதாரண வகுப்புக்களில் வைத்துக்கற்பிக்காமல் தரப்படுத்தி கற்பிப்பது பயனுடையதாகின்றது.

பின்தங்கிக் கற்பவர்களை எடுத்து நோக்கின் பாடங்களை கிரகிக்கும் திறன் இவர்களுக்கு இருந்தாலும் விரைவில் புரிந்து கொள்ளும் தன்மையில்லை. இவர்களுக்கு மேலதிகப் பயிற்சி கட்புல, செவிப்புலத் துணைக் கருவிகளினது பயன்பாடு, வெளிக்கள வேலைகள், பாட நேரங்களை குறுகியதாக்கி, பாடப்பொருள் தரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். உடலியக்க வேலைகள், கைவேலை சித்திரம், சங்கீதம் போன்ற துறைகளில் ஈடுபாட்டை ஏற்படுத்தலாம் ஆசிரியர் இவர்களோடு நண்பரைப் போல் அன்பாக பழக வேண்டும்.

மீத்திறன் உடைய மாணவர்களான உளவிருத்தி கொண்ட இவர்களுக்கு ஏற்ற வழிகாட்டியாக, ஏற்ற துறைகளில் இவர்களை ஈடுபடுத்த வேண்டியவர் ஆசிரியரே. மீத்திறன் பிள்ளைகளைக் கொண்டே வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர் உயர் மனவெழுச்சி, முதிர்ச்சி கொண்டவராகவும் மாணவர் மனநிலை, விருப்பு, பிள்ளைகளின் ஆற்றலை அறிந்து முன்னேறுவதற்கு ஊக்கமும் சந்தர்ப்பமும் அளிக்க வேண்டும்.

மனவெழுச்சிக் கோளாறுகளையுடைய மாணவர்களை ஆராயும் போது பிறழ்வான பொருத்தப்பாடுடையோர், நெறி பிறழ்ந்தவர்கள் என வகைப்படுத்தலாம். இவ்வாறான காரணங்கள் ஏற்படுவதற்கு பெற்றோர், சகோதரர்கள், ஆசிரியர் வகுப்பில் இனங்காண பிழையான நடத்தை இயல்புகளை அறிந்திருத்தல் அவசியம். இத்தகைய மாணவரின் பிழையான இயல்புகளை ஆசிரியர் ஆரம்பத்திலேயே இனங்கண்டு இந்த இடத்தில் அவதானமாக இருத்தல் வேண்டும். அன்புடன் கூடிய கண்டிப்பு இங்கே தேவைப்படுகின்றது. ஒவ்வொரு பிள்ளையும் ஏதோ ஒரு வழியில் வெற்றி பெறத்தக்கவாறு தொழிற்பாடு அமைத்துக் கொடுப்பதுடன் பெற்றோருடன் தொடர்பு கொள்வதும் அவசியம். விளையாட்டுக்கள், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் இவர்களை ஈடுபாடு கொள்ளச் செய்தல் வேண்டும்.

பொதுவாகச் சிறார்களிடையே காணப்படும் முக்கியமான பிரச்சினை பாடசாலைக்கு கள்ளம் பண்ணுவதாகும். இதற்கான காரணங்களை ஆசிரியர் அறிய முன்வர வேண்டும். சில வேளைகளில் போதிய உடுப்புக்கள், புத்தகங்கள் இன்மை, பெற்றோர் வீட்டில் மறிப்பதால் பாடங்களில் பின்தங்கி இதனால் கள்ளம் பண்ணுதல், திறமை போதாமை, திருப்தியற்ற ஆசிரியர் மாணவர் தொடர்பு, பாடசாலை வகுப்பறையின் மிதமிஞ்சிய கட்டுப்பாடுகள் காரணமாகவும் பாடசாலைக்கு வருவதில் நாட்டம் குறைந்தவராகக் காணப்படலாம்.

இங்கே மாணவர்களின் வரவின்மைக்கான காரணங்களை அறிந்து வழிநடத்துதல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

இன்னொரு விதத்தில் உடல் சம்பந்தமான குறைபாடுகளும் குழந்தைகளிடையே காணப்படுகின்றது. இதில் முக்கியமானது பேச்சுக்குறைபாடு ஆகும். குழந்தை பேசும் போது பெற்றோர் ஊக்கமளியாமை போன்றவற்றினால் இக்குறைபாடு ஏற்படலாம். ஆசிரியர்கள் இக் குறைபாட்டை மிகைப்படுத்தக்கூடாது. இப்படியான குழந்தைகளை வகுப்பில் உரத்து வாசிக்குமாறு கட்டாயப்படுத்தாது, மற்றப் பிள்ளைகள் கேலி செய்ய வழி ஏற்படுத்தாது அன்புடன் மாணவனை அணுகிப் பேச்சுப் பயிற்சிகளை அளித்தல் வேண்டும்.

உடல் அங்கங்களில் குறைபாடுடைய பிள்ளைகளும் தாழ்வு மனப்பான்மை, மனமுறிவு உள்ளவராகக் காணப்படுவர். ஏனைய மாணவர்கள் இவர்களை துன்புறுத்தாது அவதானித்தல் அவசியம்.

சுருங்கக் கூறின் ஆசிரியரானவர் குழந்தையின் உடல், உள நியமங்களை அறிந்து செயற்படுதல் அவசியம். ஆசிரியர் நியம நிலையில் உள்ள பிள்ளைகளின் இயல்புகளை அறிந்திருப்பதன் மூலம் குழந்தைகளின் பிழையான இயல்புகளை இனங்கண்டு அன்பு, ஆதரவுடன் அணுகி ஆரம்பத்திலேயே குறைபாடுகளை அவதானித்து வழிநடத்துவதன் மூலம் கற்பித்தல் செயற்பாட்டில் பெரு வெற்றியடையலாம். இதனால் இத்தகைய பிழையான நடத்தைக்கான குழந்தைகளும் ஏதோ ஒரு வழியில் பலனடைவர் என்பதில் ஐயமில்லை.

---

- பல்லின மக்களிடையேயான புரிந்துணர்வு,
- தேசிய ஒருங்கிணைப்பு,
- நாட்டைக் கட்டியெழுப்புதல்

என்ற செயற்பாடுகள் வெறும் மேடைப் பேச்சுக்களாலும், போலிக் கோஷங்களாலும், கூட்டறிக்கைகளாலும் நடைமுறைப்படுத்தப்பட முடியாதவை. அவை எதிர்காலச் சிற்பிகளான இளையசிறார்களிடையேதான் அழுத்தப்பட வேண்டிய. அதற்கு ஆரம்பக்கல்வி மட்டத்திலேயே அடிக்கல் இடப்படவேண்டும். அது ஆரம்பக்கல்வி ஆசிரியர்களாலேயே சாத்தியமாக முடியும்.

(நன்றி: கலாநிதி.அனுஷ்சியா சத்தியசீலன், அகவிழி-30, பக்-13)






**ஆர். சுரேஸ்குமார்** (ஆரம்பப் பிரிவு)
தேசிய கல்வியியற் கல்லூரி,
வவுனியா.


அலசல்

"அவர் பாடசாலைக்கு வருவார்.
வந்து அதிபரின்
அறையில் தான் இருப்பார்.
பாடத்திற்கு வருமாறு
போய்க் கூப்பிட்டால்
போங்க வாரன் என்பார்."

# ஆசிரியர்கள் நிர்வாகக் கடமைகளில் ஈடுபடல் - பிரதிபலிப்பு

"தொழில்நுட்ப பாடஆசிரியர் எப்போதாவது இருந்துவிட்டு ஒரு நாளைக்கு வகுப்பறைக்கு வருவார் அப்படி வந்தாலும் பயிற்சிகளை செய்யச் சொல்லிட்டு வகுப்பறைக்கு வெளியே சென்றுவிடுவார்" என்று தரம் 7இல் கல்வி கற்கும் ஓர் மாணவன் கற்பித்தல் பயிற்சியின் போது என்னிடம் சொன்னார். அதற்கு ஆசிரியர் ஏன்? வருவதில்லை என நான் அவ்வகுப்பு மாணவர்களை வினாவினேன். அதற்கு அவர்கள் "அவர் பாடசாலைக்கு வருவார். வந்து அதிபரின் அறையில் தான் இருப்பார். பாடத்திற்கு வருமாறு போய்க் கூப்பிட்டால் போங்க வாரன் என்பார்." என்று பதில் சொன்னார்கள்.

"சேர் எங்கட வகுப்புக்கு வாங்களேன். டீச்சர் கொலேஜ் சேர்மாரை கூட்டிட்டுப் போய் படிக்கச் சொன்னார்" என்ற ஒரு மாணவியின் கூற்றையும் நான் கேட்டேன். நான் அந்த மாணவி ஏன் அப்படிச் சொன்னார்? அவர் (டீச்சர்) லீவுல வீட்டிற்கு போகிறாரா? என வினாவினேன். "இல்லை சேர் டீச்சர் அதிபர் அறையில் இருக்கிறார்" என்று அம்மாணவி கூறினார். இவை இரண்டும் கற்பித்தல் பயிற்சி கட்டம் இரண்டில் நான் பெற்ற அனுபவங்களாகும்.

குறித்த பாடசாலையில் குறித்த பாடங்களின் அடைவு மட்டம், ஆசிரியர் மீதான அதிபரின் அக்கறை, அதிபரின் உள்ளக மேற்பார்வை, மாணவர் மீதான ஆசிரியர்களின் மனநிலை, பாடசாலையின் பயன்தகு நிலை என்பன இந்தப் பாடசாலையில் எந்த அளவில் வெற்றிகரமாக நடைபெறுகின்றது என்பது பற்றி எனதுள்ளத்தில் பல கேள்விகள் தோற்றம் பெற்றன. எனவே மாணவர்களின் கற்றல்-கற்பித்தலுக்கு உதவுவதற்காக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு வகுப்பறை நேரங்களில் அதிபர் அறையில் என்ன வேலை என்கின்ற வினா உருவாகின்றது. இக் கேள்வியை அதே பாடசாலையில் ஓர் ஆசிரியரிடம் கேட்ட போது "சேர் நான் தான் நிர்வாக கடமைகளை மேற்கொள்கின்றேன். அதனால் ஒழுங்காக வகுப்பறைக்குச் சென்று கற்பிக்க முடியவில்லை என்றார்." இவ்வாறு செய்வது சரியா? தவறா என அவரிடமே கேட்டேன். அதற்கு அவர் மௌனம் காத்தார். நிர்வாகக் கடமைகளில் ஈடுபடாத ஓர் ஆசிரியரிடம் ஏன் நீங்கள் மட்டும் அதிபர் அறையில் அமர்ந்து ஏதும் வேலைகள் செய்வதில்லையா என

வினாவினேன். அதற்கு அவர் பின்வரும் கருத்துக்களை வழங்கினார்.

* அதிபர் எல்லோரையும் நம்பி வேலைகளை ஒப்பிடைக்க மாட்டார்.
* நாங்கள் அதிபர் அறைக்கு போவதே அதிபருக்கு விருப்பமில்லை.
* அதிபர் மட்டும் தான் எல்லா வசதிகளையும் அனுபவிக்கிறார்.
* அதிபருக்குப் பந்தம் பிடித்து, கையாட்களாக இருப்பவர்களே நிர்வாக கடமைகளில் ஈடுபடுகிறார்கள்.
* நிர்வாக கடமைகளில் ஈடுபட்டு ஏதாவது தவறு இளைத்தால் எங்களுக்கு பென்சன் இல்லை என்று பயமுறுத்துவார்.

தொடர்ந்து அந்த பாடசாலையில் பத்து ஆசிரியர்களுடன் கலந்துரையாடிய போது ஒரு முடிவினை எடுக்கக்கூடியதாக அமைந்தது.

| ஆசிரியர் | கற்பித்தல் | இணைப்பாடவிதான செயற்பாடு | நிருவாகக் கடமைகளில ஈடுபடல் |
|---|---|---|---|
| A | அதிகம் | குறைவு | இல்லை |
| B | அதிகம் | ஓரளவு | இல்லை |
| C | குறைவு | இல்லை | அதிகம் |
| D | குறைவு | அதிகம் | இல்லை |
| E | அதிகம் | அதிகம் | அதிகம் |
| F | குறைவு | குறைவு | இல்லை |
| G | குறைவு | இல்லை | அதிகம் |
| H | குறைவு | அதிகம் | இல்லை |
| I | அதிகம் | இல்லை | இல்லை |
| J | அதிகம் | இல்லை | இல்லை |

குறிப்பாகப் பார்த்தால் அநேகமான ஆசிரியர்கள் கடமைகளை ஒழுங்காகவும் நேர்மையாகவும் செய்கின்றனர். ஆனால் சிலர் நிர்வாகக் கடமை என்கிற போர்வையில் பலர் வகுப்பறை பக்கமே போவதில்லை. ஒரு சிலர் நிர்வாக சேவை என்று பாடசாலைக்கு வெளியே வங்கி சந்தை, தபாற்கந்தோர்களில் தமது சொந்தத் தேவைகளை நிறைவு செய்கின்றனர். வேறு சிலர் "வேலைக்காரிக்கு பிள்ளைச்சாட்டு" என்றாற் போல பாடசாலையின் சாவிக்கோர்வைகளுடன் பாடசாலையை வலம் வந்த வண்ணம் உள்ளனர். வேறு சிலர் மதிப்பீடு, வரவுப் பதிவு என்றெல்லாம் சாட்டுச் சொல்லிக் கொண்டு அங்குமிங்கமாக அமர்ந்து கூட்டமாக அரட்டை அடிக்கின்றனர். இன்னும் சிலர் வகுப்பறைகளில் பிள்ளைகளை வேலைசெய்யச் சொல்லிட்டு வெளியில் அமர்ந்து பொழுது போக்குகின்றனர். இப்படியான செயற்பாடுகளில் வெளிப்பாடுகள் அல்லது விளைவுகள் ஏப்படி அமையும் என எந்த ஆசிரியரும் சிந்திப்பதில்லை.

**✡ ஆசிரியர்கள் நிர்வாகக் கடமைகளில் ஈடுபடுவதால் ஏற்படும் நன்மைகள்.**

1. பாடசாலையின் நிர்வாகக் கடமைகள் பூரணத்துவமடையும்.

* குறித்த ஆசிரியர்களின் பதவி உயர்வுகளுக்கு ஒரு சந்தர்ப்பமாக அமையும்.
* ஆசிரியர்கள் முகாமைத்துவம் தொடர்பான அறிவினைப் பெறக்கூடியதாக அமையும்.

**✡ பிரதிகூலங்கள்**

* பாட அலகுகள் உரிய காலத்தில் பூரணமாக்கப்படாது.
* மாணவர்கள் குறித்த பாடத்தில் பின்னடைவாக காணப்படுவார்கள்.
* இதனால் அடைய வேண்டிய தேர்ச்சிகளை பிள்ளைகள் அடைய மாட்டார்கள்.
* வகுப்பறை உரிய முறையில் கவனிக்கப்பட முடியாது.
* இதனால் பிள்ளைகள் பிறழ்வான நடத்தைகளில் ஈடுபடுவார்கள்.
* இதனால் ஏனைய வகுப்பறையில் கற்றல்-கற்பித்தல் தடைபடும்.
* குறித்த பாடத்தில் பிள்ளைகள் அசமந்தப் போக்கில் காணப்படுவர்.

* மாணவன் - ஆசிரியர் உறவு சிறப்பாக அமையாது.
* கற்றல் - கற்பித்தல் நேரம் மழுங்கடிக்கப்படும்.
* ஆசிரியர் முன்மாதிரிகளை பின்பற்ற முடியாமல் போகும்.
* குறித்த பாடத்தை வேறொரு தினத்தில் கற்பிக்க நேரிடும்.
* இப்படி கற்பிப்பதால் குறைந்த நேரத்தில் கூடிய தகவல்களை திணிக்க முனைதல்.
* இதனால் கற்றல் சுமையான ஒன்றாக பிள்ளைகளுக்கு காணப்படும்.
* இதனால் பிள்ளைகளின் வேறு தேவைகளை நிறைவேற்ற முடியாமல் போகின்றது.
* ஆசிரியர் - ஆசிரியர் உறவுகள் பேணப்படாது.
* பிள்ளைகள் குழுக்களாக பிரிந்து செயற்பாடுவார்கள்.
* சமூகத்தில் குறித்த ஆசிரியர் குறைவாக மதிப்புப் பெறுவர்.


✡ பிரதிகூலங்களை வெற்றி கொள்ளும் முறைகள்.

* பாடசாலை தொடங்கு முன்னரோ அல்லது முடிந்த பின்னரோ சிறிது நேரத்தை நிர்வாகக் கடமைகளுக்காக ஒதுக்குதல்.
* பாடவேளைகள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் நிர்வாக கடமைகளில் ஈடுபடல்.
* நிர்வாக கடமைகளை தனியொருவர் மேற்கொள்ளாது ஏனைய ஆசிரியர்களிடம் பகிந்து கொள்ளல்.
* நிர்வாக கடமை தொடர்பான முறையான பயிற்சிகளை வழங்கல்.
* நிர்வாகக் கடமைகளுக்கென செயற்படும் ஆசிரியர்களை வகுப்பறைக்குச் செல்லவிடாது நிர்வாக கடமைகளில் மட்டும் செயற்பட வைத்தல்.
* உள்ளக மேற்பார்வைகளை சிறப்பாக மேற்கொள்ளல்
* ஒழுங்கு முறையில் வகுப்பறைக்குச் சென்று மனதிருப்தியுடன் கற்பிக்கும் ஆசிரியர்களை பாராட்டி ஊக்குவித்தல்.

மேற்கூறிய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நிர்வாகக் கடமைகளில் ஈடுபடும் ஆசிரியர்களை வகுப்பறைக்குச் செல்ல வைக்கலாம். மேலும் ஆசிரியர்கள் எப்பொழுதும் தமது கடமைகளை உணர்ந்து செயற்படும் போது தான் பிள்ளைகளின் எதிர்காலம் வளமுள்ளதாக அமையும். ஆசிரியர்கள் உலகத்தில் இரண்டாவது படைப்பாளியாகவே காணப்படுகிறார்கள். எனவே பிள்ளைகளை நல்ல சிற்பங்களாக செதுக்கும் சிற்பிகளாக ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். அப்படியாயின் வகுப்பறைக்குச் செல்லாத ஆசிரியர்கள் எப்படி சிற்பங்களை செதுக்க முடியும்.

வகுப்பறை என்பது ஒரு செழிப்பான மரத்தைப் போன்றது. அந்த மரத்திற்கு வேர் எவ்வளவு முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றதோ அதே போல தான் வகுப்பறையில் ஆசிரியரும் இன்றியமையாதவராக காணப்படுகிறார். சிறந்த கனிகளையும், காய்களையும், மணம் வீசும் பூக்களையும், பயனுள்ள பெறுமதியான பொருட்களையும் பெறவேண்டுமென்றால் வேரானது நிலத்தடியில் நன்றாக ஓடி கனியுப்புகளையும் நீரையும் மேல்நோக்கி கடத்த வேண்டும். அதே போன்று சிறந்த ஆசான் வகுப்பறையில் நிலையாக இருந்து தனது பிள்ளைகளை பராமரித்து நல்ல மனிதர்களாக உருவாக்க வேண்டும்.

"தன்னை நம்பி வரும் ஒவ்வொரு பிள்ளையின் எதிர்காலமும் எனது கையில்" என்று ஆசிரியர்கள் சிந்தித்தார்களேயானால் வேறு எதனையும் காரணம் காட்டாது வகுப்பறைக்குச் செல்வார்கள். வீணை ஒன்றில் ஒரு தந்தி அறுத்தாலும் இனிமையான இசையைப் பெற முடியாது அதேபோல் தான் வகுப்பறையில் எத்தனை ஆசிரியர்கள் காணப்படுகிறார்களோ அத்தனைபேரும் ஒழுங்காக வகுப்பறைக்குச் செல்வது முக்கியமாகும். பொறுப்பு வாய்ந்ததும், சிக்கல் நிறைந்ததுமான ஒரு தொழில் என்றால் அது ஆசிரியர் தொழிலே தவிற வேரொன்றுமில்லை. ஆசிரியர்களின் பற்றுணர்வுமிக்க கற்பித்தலே சிறந்த விளைச்சளான நற்பிரஜைகளை உருவாக்கும். எனவே வகுப்பறையில் ஆசிரியர் என்பவர் ஒரு வழிகாட்டியாவார். ஆகவே சிறந்த முறையில் பிள்ளைகளை வழிக்காட்டி நல்ல இடத்திற்கு கொண்டு செல்வது ஒவ்வொரு ஆசிரியரினதும் கடமையாகும். மேய்ப்பனானவன் நல்ல மேய்ச்சலான இடங்களுக்கு மந்தைகளை அழைத்துச் செல்வது போல நல்லவற்றை கற்று நாட்டின் நற்பிரஜைகளை உருவாக்க ஒவ்வொரு ஆசானும் வழிகாட்ட முனைய வேண்டும். அதற்கு ஒழுங்காகவும், தவறாமலும் வகுப்பறைக்குச் செல்வது கட்டாயமாகும்.






**சபா.ஜெயராசா,**
முன்னாள் பேராசிரியர்,
கல்வியியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.


விவாதம்

# ஐந்தாம் வகுப்புத் தேசியப் பரீட்சையும் மீளாய்வுக்குரிய சிந்தனைகளும்

> பிறப்பிலிருந்து கால அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுவது காலவயது. சமூக முதிர்ச்சிக் கணிப்பீடுகளை அடியொற்றிக் கணிக்கப்படுவது சமூகவயது.

**உ**ளவயது (Mental Age) என்பது கல்வியியலிலும் கணிப்பீட்டியலிலும் சிறப்பிடம் பெறும் ஓர் எண்ணக்கருவாகின்றது. அல்பிரெட்பீனே (1857-1911) மற்றும் சிமோான் (1873-1961) முதலாம் உளவியலாளர் இத்துறையில் பல பரிமாணங்களைக் கொண்ட பங்களிப்பைச் செய்துள்ளனர். குறிப்பிட்ட வயது வீச்சில் சிறுவரால் ஆற்றுகை செய்யப்படக் கூடிய திறன்களின் நியமப்பாட்டை உளவயது விளக்குகின்றது. இத்துறையில் மேலும் விளக்கங்களைப் பெறுவதற்கு காலவயது, (Choronological Age) சமூகவயது (Social Age) முதலாம் எண்ணக்கருக்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. பிறப்பிலிருந்து கால அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுவது காலவயது. சமூக முதிர்ச்சிக் கணிப்பீடுகளை அடியொற்றிக் கணிக்கப்படுவது சமூகவயது.

1905 ஆம் ஆண்டில் பீனேயும் சிமோனும் ஒன்றிணைந்து நியமப்படுத்தப்பட்ட ஒரு நுண்மதித் தேர்வை உருவாக்கினர். அது பின்வரும் பண்புகளை உள்ளடக்கியதாக அமைந்தது.

* போதனைக் கட்டளைகளை விளங்கிக் கொள்ளும் ஆற்றல்.
* தருக்கவழிப்பட்ட தீர்ப்புக்கூறும் திறன்.
* பல்வேறு வகைப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் ஆற்றல்.

மேற்கூறியவற்றை அடியொற்றி மேலெழுத் தொடங்கிய பீனேயின் நுண்மதித் தேர்வுகளை தரப்படுத்தும் முயற்சியை மேற்கொண்ட மடிசன் ரேர்மன் அவர்கள் அத்தகைய தேர்வுகளில் பண்பாட்டுச் சார்புடைமையும், பால்நிலைச் சார்புடைமையும் இருத்தலாகாது என வலியுறுத்தினார். எத்தகைய ஒரு நியமப்படுத்தப்பட்ட தேர்விலும் இப்பண்புகள் முக்கியமானவை. ஆனால் இந்த அடிப்படைப்பண்புகள் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்குரிய தேசியப் பரீட்சையில் இடம் பெற்றுள்ளனவா என்பது கேள்விக்குரியது 2008 பரீட்சை இரண்டாம் வினாத்தாளின் 17ஆம் 18ஆம் வினாக்கள் குறிப்பிட்ட பண்பாட்டுச் சார்புடையதாக இருப்பதால் அப்பண்பாட்டுக்கு அன்னியமாகிய மாணவர்களுக்குப் பாதகமான நிலை உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிட்டத்தக்கது.

நுண்மதித் தேர்வுகளின் வளர்ச்சிகள் நிகழ்ந்து கொண்டிருந்த வேளை அறிகை உளவியலில் ஏற்பட்ட ஆய்வுகள் சிறாரின் கல்வியிலும் கணிப்பீட்டிலும் பல்வேறு பரிமாணங்களை ஏற்படுத்தத் தொடங்கின. இத்துறையிலே சிறப்பார்ந்த பங்களிப்பை மேற்கொண்ட ஜீன்பியாசே அவர்கள் சிறாரின் அறிவு படிமுறை வளர்ச்சியை விளக்கினார். ஏழு வயது தொடக்கம் பதினொருவயது வரையுள்ள காலப்பகுதியை அவர் **"பருப்பொருள் வடிவிலான உளத் தொழிற்பாட்டுப் பருவம்"** (Concrete Operational Stage) என்று குறித்துரைத்தார். இப்பருவத்தில் பின்வரும் ஆற்றல்கள் சிறாரிடத்து நிலைபேறு கொண்டிருக்குமென விளக்கப்படுகின்றது. இவை அடிப்படைகளே அன்றி மேலெழுச்சிகள் அல்ல என்பதை முதலில் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

* ஒரு நிகழ்வின் ஒன்றுக்கு மேற்பட்ட பரிமாணங்களை ஒரே நேரத்தில் கவனம் செலுத்தும் ஆற்றல்.
* ஒரு நிகழ்வின் ஒத்த இயல்புகளையும் ஒவ்வாத பொருத்தமற்ற இயல்புகளையும் கண்டறியும் ஆற்றல்.
* பொருட்களை வகைப்படுத்தும் ஆற்றலும் வரிசைப்படுத்தும் ஆற்றலும் உளத்தொழிற்பாட்டு நிலையிற் செப்பம் பெறுதல்.
* நிலை பற்றிய 'காப்பு' எண்ணக்கரு வலுப் பெறுதல்.
* K = L மற்றும் L = M எனின் K = M என்றவாறான தொடர்புகளை உருவடிவில் நியாயித்தறியும் திறன் வளர்ச்சியடைதல்.
* அறிவைத் துணிக்கைகளாக நோக்காது தொடர்புபடுத்திக் காணும் ஆற்றல் மேம்பாடு பெறல்.
* பகுத்தறிதலும் தொகுத்தறிதலும் பெருநிலையிலும் நுண்பாக நிலையிலும் வளர்ச்சி பெறல்.
* பொருட்களையும் அவற்றின் இயல்புகளையும் பொருண்மை கொண்ட வகையில் உய்த்து அறிதலும் தருக்கப்படுத்தி அறிதலும் ஒப்புமை காணலும் விருத்தி பெறல்.

ஆனால், ஐந்தாம் வகுப்புத் தேசியப்பரீட்சையில் இடம் பெறும் வினாக்கள் பியாசே குறிப்பிடும் பருப்பொருள் வடிவிலான உளத்தொழிற்பாடுகளை மீறி 12 வயது தொடக்கம் 15 வயதுக்குரிய நியமசிந்தனை அல்லது வரன் முறைத் தொழிற்பாட்டுக்கு (Formal Operation) உரியனவாக இருத்தல். குறிப்பிடத்தக்கது. அங்கு பருப்பொருள்வடிவிலான உளத் தொழிற்பாட்டு இயல்புகள் போதிய கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

குறியீடுகளைப் பயன்படுத்தி வினைத்திறன்மிக்க உளத்தொழிற்பாடுகளை மேற்கொள்ளல் இப்பருவத்திலே மேம்பாடு கொள்வதாக பியாசே குறிப்பிட்டுள்ளார். ஐந்தாம் வகுப்பு 2008 ஆம் ஆண்டுத் தேசிய பரீட்சையின் முதலாம் வினாத்தாளில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான வினாக்கள் 12 வயது தொடக்கம் 15 வயது கொண்ட வயது வீச்சில் உள்ள மாணவர்களுக்கே பொருத்தமானவையாக அமைந்துள்ளன. அதேவேளை அவ்வினாக்கள் பத்து பதினொருவயது கொண்ட மாணவர்களுக்கு அதீத உளவியல் அழுத்தங்களைப் பிரயோக்கிக்கும் முனைப்புக்களைக் கொண்டிருத்தலும் சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது. குறித்தவயதுக்குரிய அறிகை மட்டங்களை மீறி வினாக்கள் அமைக்கப்படுகின்றன.

2008ஆம் ஆண்டுப் பரீட்சை முதலாம் பகுதி வினாக்கள் ஆறு தொடக்கம் நாற்பது வரை மாணவரிடத்து உள அழுத்தங்களையே உருவாக்கி நிற்கின்றன.

**2008 ஆம் ஆண்டுத் தேசிய பரீட்சையின் முதலாம் வினாத்தாளில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான வினாக்கள் 12 வயது தொடக்கம் 15 வயது கொண்ட வயது வீச்சில் உள்ளமாணவர்களுக்கே பொருத்தமானவையாக அமைந்துள்ளன.**

மீத்திறன்மிக்க மாணவர்களைக் கண்டறிவதற்கு ஐந்தாம் வகுப்பு வயது வீச்சின் உள ஆற்றல்களைக் கொண்ட வினாக்களைத் தயாரிப்பதே பொருத்தமான நடவடிக்கை. அதைவிடுத்து உயர் வள வயது மட்டங்களுக்குரிய வினாக்களைக் கொடுத்தல் அனர்த்தம் விளைவிக்கவல்ல கணிப்பீட்டு முறையாகும்.

நாற்பத்தைந்து நிமிடங்களில் ஒரு மாணவர் நாற்பது வினாக்களுக்கு விடைதர வேண்டும். எந்த ஒரு கடின வினாவுக்கும் ஒரு மாணவர் பருமட்டாக ஒரு நிமிடத்துக்கு மேல் செலவு செய்ய முடியாது. ஆனால் இருபத்து மூன்றாம் வினாவில் நான்கு ஒப்புமைகள் தரப்பட்டுள்ளமையால் நான்கையும் ஒப்பு நோக்கிய பின்னரே சரியான துலங்கலைத் தரமுடியும். அதாவது 'நூலகம்' என்ற விடையைக் கண்டுபிடிப்பதற்கு முன்னர் பேரூந்துத் தரிப்பிடம், மருத்துவமனை, பாடசாலை முதலியவற்றை ஒப்புநோக்குவதற்கு கொடுக்கப்பட்டுள்ள நேர அளவு போதாதிருத்தலை எந்த அனுபவமுள்ள ஆசிரியரும் ஏற்றுக் கொள்வர்.

கோட்பாட்டு நிலையில் பியாசே குறிப்பிட்டுள்ள படிநிலை வளர்ச்சிக்கும் உளத் தொழிற்பாட்டுகளுக்கு மிடையேயுள்ள முன்மொழிவுகளில் மட்டுப்பாடுகள் காணப்படுகின்றனவாயினும் உள ஆற்றல்கள் சிறாரின் வயதுப் படிநிலைகளை அடியொற்றி வளர்ந்து செல்லலை நிராகரிக்க முடியாது.

உலகெங்கணும் கல்வியின் தரமேம்பாடு பற்றி விதந்து பேசப்பட்டு வருகின்றது வேளையில் தரம் நோக்கிய செயற்பாடுகள் கடினத்தன்மைகளை நோக்கி நகர்ந்து செல்லல் தவிர்க்க முடியாதது. ஆயினும் சிறார் மட்டத்தில் இவ்வாறான கடினத்தன்மை நோக்கிய நகர்ச்சியை உளவியல் மயப்படுத்தியே முன்னெடுக்க வேண்டியுள்ளது.

தரமேம்பாட்டை நோக்கிய கணிப்பீட்டுத் திட்டங்களும் தேர்வுகளும் "அறிகைத் தடம்புரழ் தலை (Cognitive Derailment) ஏற்படாது பார்த்துக் கொள்ளல் கல்வியயலாளரின் கடமையாகின்றது. ஐந்தாம் தரத் தேர்வுக்கட்டமைப்பு அறிகைத் தடம் புரழலையே உந்திவிடுகின்றது.

தரமேம்பாட்டு நடவடிக்கையின் பிறிதொரு பரிமாணமாக "அறிகைச் சிக்கனம்" (Cognitive Economy) அமைகின்றது. தகவல்களைக் குறைந்தளவு முயற்சியோடு நிரற்படுத்திக் கொள்ளல். அல்லது பயனுள்ள வகையிலே விரைந்து தொகுத்துக் கொள்ளலை இந்த எண்ணக்கரு குறிப்பிடுகின்றது. இது குறைந்த முயற்சிக்கோட்பாட்டை (Principle of Least Effort) அடிப்படையாகக் கொண்டது. அறிகைச் சிக்கனத் தொழிற்பாடு சிறாரின் வயது வளர்ச்சியோடு இணைந்த செயற்பாடாகும். சிக்கனச் செயற்பாட்டை வயது வளர்ச்சியுடன் தொடர்புபடுத்தியே கற்றலையும் கணிப்பீடுகளையும் மேற்கொள்ளல் வேண்டும்.

தரமேம்பாடு என்பது பரீட்சைப் பதகளிப்பை (Test Anxiety) ஏற்படுத்தும் செயற்பாடு அன்று. பரீட்சைச் செழுமைப் பாட்டைக் (Test Sophistication) கொண்டதே தரமேம்பாடு என்பதைக் கல்வியியலாளர் வலியுறுத்தி வருகின்றனர்.

ஆறாம் வகுப்பிற்கற்பதற்கு மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுத்தல் என்ற செயற்பாட்டில் வர்க்கச் சார்புடைமை உள்ளீடாக இருத்தலை முதற்கண் நினைவிற் கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறாக உதவும் ஒரு பரீட்சை.

ஆறாம் வகுப்பு பாட உள்ளடக்கங்களோடும் கற்றல் உள்ளடக்கங்களோடும் எத்துணை இசைவையும் நிமிர் அசைவியத்தையும் (Ariticulation) ஏற்படுத்தத்துணை நிற்கின்றது என்பதும் ஆய்வுக்குரியது.

இந்நிலையில் பரீட்சைகள் "அந்நிய நிலை" கொண்டதாக ஆக்கப்படாது ஆதாரநிலை கொண்டதாக உருவாக்கப்படல் வேண்டும். இந்நிலையில் மரபு வழியான நுண் மதிக் கூறுகளை மட்டும் சிலாகித்து அளவீடுகளை மேற்கொள்ளல் காலாவதியான கருத்துக்களின் மீள வலியுறுத்தலாகின்றது.

மேலைப்புலக்கல்விச் செயற்பாடுகளில் மனவெழுச்சி நுண்மதி உள்ளடக்கங்களுக்கு அதிகமுக்கியத்துவம் கொடுத்து வருகின்றார்கள். மனவெழுச்சிகளைக் கற்றலுக்கும் பிறதொழிற்பாடுகளுக்கும் ஈடுபடுத்தும் திறன் மனவெழுச்சி நுண்மதியில் உள்ளடங்கி நிற்கின்றது. அறிகைத் தொழிற்பாடுகளை வளப்படுத்துவதில் மனவெழுச்சிகளின் பங்கு முக்கியமானதாக இருத்தலை அண்மைக்காலத்தைய உளவியல் ஆய்வுகள் மீளவலியுறுத்தி வருகின்றன. ஒருவர் தன்னை நெறிப்படுத்திக் கொள்வதற்கும், முன்னேற்றங்களை நோக்கி நகர்ந்து செல்வதற்கும் சமூகஇசைவாக்கத்தை முன்னெடுப்பதற்கும், புதிய கண்டுபிடிப்புக்குரிய உசாவல் விருப்புக்களை வளர்த்துக் கொள்வதற்கும் மனவெழுச்சி நுண்மதியின் பங்கு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. ஆனால் மனவெழுச்சி நுண்மதியினைக் கண்டறிவதற்கும் வளப்படுத்துவதற்குமுரிய ஏற்பாடுகளில் ஐந்தாம் தரப் பரீட்சை வினாத்தாள் உரிய கவனம் செலுத்தாமலிருத்தல் குறிப்பிடத்தக்கது.

பலநோக்குகளும் பல பரிமாணங்களும் கொண்டதாக பரீட்சைகள் அமையும் நிலையில் அவற்றைக் குறிப்பிட்ட ஓரிருபரிமாணங்களுக்குள் மட்டும் அடக்கிவிடும் "சுருக்க முளைப்பு வாதம்" (Reductionism) கைவிடப்படுதலே கல்விச் செயற்பாடுகளை மேலும் வளமாக முன்னெடுப்பதற்கு அனுகூலமாக அமையும்.

தேசிய மட்டத்திலான ஐந்தாம் தரக்கல்வி ஏற்பாட்டினையும் பரீட்சை வினாத்தாள்களையும் அறிகைத் தளத்திலும், உளவியல் தளத்திலும் விரிவான ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய தேவை மேலெழுந்துள்ளது. அதனைச் செவ்விதாகச் செய்யத்தவறுமிடத்து இந்நாட்டின் ஆரம்பக்கல்வியின் விளைவாக உளநலப்பாதிப்புக்குள்ளான சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லலைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கும்.

வேண்டத்தகாத அழுத்தங்களைச் சுமத்துதல் எந்தப் பரீட்சையினதும் நோக்கமாக இருத்தலாகாது. கல்விச் செயல்முறையில் விருப்புடன் ஆழ்ந்து ஈடுபடச் செய்யும் அறிகைத் தளங்களை உருவாக்குதலும் வயது நிலைக்கும் முதிர்ச்சிக்குமுரிய உசாவல் விருப்பைத் தூண்டுதலும், குறித்த வயது வீச்சுக்கள் அமையும் அறிகைவிளிம்பின் உச்சங்களை அடைதலும் சிறந்த பரீட்சையின் பரிமாணங்களாகின்றன.

# கல்வி குடிபெயர்வுக்கான சாதனம்: ஒரு மாற்று அணுகுமுறை






**மா. சின்னத்தம்பி**

முதுநிலைவிரிவுரையாளர்,

யாழ்.பல்கலைக்கழகம்.


மாற்றுப்பார்வை

இன்று கல்வி ஒரு பொருளாதார முதலீடாகவும், அதிக விளைவுகள் தரும் தொழில்துறையாகவும் இனங்காணப்பட்டுள்ளது.

## அறிமுகம்

கல்வி சிறந்த குடிமக்களை உருவாக்கவல்லது; தனி மனிதர் ஒழுக்கமும், ஒழுங்கும், நிதானமும் உடைய மனிதனாவதற்கு கல்வி உதவுகிறது; தனிமனிதர்கள் பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் முரண்பாடுகளின்றி இசைந்து வாழப்பழக்குவது; தனதும் சூழலினதும் இயலுமையை விருத்தி செய்து உச்ச பொருளாதார நலன்களை உறுதிப்படுத்த உதவுவது கல்வி மரபு வழியான கல்வி நோக்கங்களிலிருந்து வேறுபட்டதாக நவீன கல்விக் குறிக்கோள்கள் விரிவுபட்டுச் செல்கின்றன.

இன்று கல்வி ஒரு பொருளாதார முதலீடாகவும், அதிக விளைவுகள் தரும் தொழில்துறையாகவும் இனங்காணப்பட்டுள்ளது. உலக ரீதியில் முதலீடு, தொழில் வாய்ப்பு, தொழில்நுட்பம், இலாபம் என்பவற்றை நகர்த்தும் முதன்மையான துறைகளில் ஒன்றாக கல்வி வளர்ந்துவிட்டது. சர்வதேசநிதிக்கூட்டுத்தாபனம் (International Finance Corporation - IFC) கல்விக் கைத்தொழில்களை தனியார் துறையில் ஊக்கத்துடன் வளர்ப்பதற்கு பல முனைகளிலும் முயன்று வருகின்றது.

இந்த தொடர்பில், இன்று வளர்முகநாடுகளில் உள்ளவர்கள் செல்வந்தநாடுகளில் சென்று குடியேறுவதற்கு உதவும் வலுவானதும் கவர்ச்சிகரமானதுமான சாதனமாக கல்வி இனங்காணப்பட்டுள்ளது. உலகரீதியில் குடியகல்வு முதன்மையானதாக மாறிவருகின்ற இன்றைய கால கட்டத்தில் அதில் கல்வி முக்கியமான பங்கை ஏற்றுக் கொண்டுள்ளது.

## குடியகல்வும் கல்வியும்

உலக ரீதியில் நோக்குமிடத்து 192 மில்லியன் மக்கள் தாம் பிறந்த இடத்துக்கு வெளியேதான் வாழ்ந்து வருகின்றனர். இலங்கையிலிருந்து 2 இலட்சம் பேர் வருடாந்தம் குடிபெயரும் தொழிலாளர்களாக வெளிநாடுகளுக்கு பயணம் செய்து வருகின்றனர். ஏறக்குறைய 10 இலட்சம் இலங்கையர் வெளிநாடுகளில் பணியாற்றி வருகின்றனர். ஐக்கிய அமெரிக்காவின் சட்டமா அதிபரின் மதிப்பீட்டின்படி 6 இலட்சம் - 8 இலட்சம் பேர் வரை சட்டபூர்வமற்ற முறையில் நாடுகளுக்குள் நுளைவதாக தெரிகின்றது.

எனினும் இலங்கை, இந்தியா போன்ற வளர்முக நாடுகளில் கல்வி குடிபெயர உதவும் சாதனமாக முக்கியத்துவம் பெற்றுவருகின்றது. வறுமையும், பரபரப்பும், சமூக முரண்பாடுகளும், எதிர்கால நிச்சமின்மைகளும் அதிகம் கொண்ட வளர்முகநாடுகளிலிருந்து வெளியே தப்பித்துச் செல்வதற்கு கல்வி உதவுகின்றது. உயர்ந்த வாழ்க்கைத்தரமும், உயர்ந்த சம்பளமும், நீடித்த அரச சேமநல உதவிகளும் கிடைக்கும் வளர்ச்சியடைந்த நாடுகளில் சென்று சேர்ந்து வாழ்வதற்கு கல்வி உதவுவதான உணர்வு வலுப்பெற்றுள்ளது.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மத்தியதர வகுப்பினர், அல்லது உயர் மத்தியதர வகுப்பினர் தம் நாடுகளை விட்டு வெளியேறுவதற்கு கல்வியை நன்கு பயன்படுத்துகின்றனர். முன்பு மூளைசாலிகள் வெளியேற்றம் (Brain Drain) என்பது இந்த நாடுகளுக்கு பாதகமானது போல் சுதேசிய அபிவிருத்தி நோக்கில் விளக்கப்பட்டது. இன்று உலக ரீதியாகவே படித்தவர்கள், கற்றறிந்த புலமையாளர், உயர் தொழில் நுட்பநிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் இவ்வாறு வெளியேறுவதால் நாடுகள் நன்மையடைவதாக கருதப்படுகின்றது. 'மூளைசாலிகளின் நயம்' (Brain Gain) என்று விளக்கப்படுகின்றது.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில், மாணவர்களை வெளிநாடு சென்று குடியேறுவதற்கு தயார் செய்வதற்கான கல்வி முறைமை வளர்ந்து வருகிறது. குடிபெயருவதற்குப் பயன்படும் கல்வி முறைமை வளர்ச்சி பெறுகிறது. இதற்கு பின்வரும் அதிகரித்து வரும் கல்விசார் செயற்பாடுகளைக் குறிப்பிடலாம்.

- வெளிநாட்டு பல்கலைக்கழக கலைத்திட்டங்களை கற்பிக்கின்ற, வெளிநாட்டு மொழிகளில் கற்பிக்கின்ற சர்வதேச பாடசாலைகள் நன்கு வளர்ச்சி பெறுதல்.
- சர்வதேச கல்வி வாய்ப்புகளையும், அவற்றை வழங்கும் நிறுவனங்கயையும், பற்றி விளம்பரம் செய்யும் சர்வதேச கல்விக்கண்காட்சிகள் பெரியளவில் ஒழுங்குபடுத்தப்படல்.
- சர்வதேச பல்கலைக்கழகங்களில் நுழைவதற்கு தகுதியை உறுதிப்படுத்தும் சர்வதேச தரத்திலான பரீட்சைகளுக்கு (SAT மற்றும் GRE) மாணவர்களை தயார் செய்யும் நிறுவனங்கள் வளர்ச்சி பெறுதல்.
- சர்வதேச பல்கலைக்கழகங்களில் கற்பதற்கான சர்வதேச ஆங்கிலமொழித்தகைமைகளை (IELTS, TOEFL போன்ற) பெறுதற்கு பயிற்றுவிக்கும் கல்வி நிறுவனங்கள் வளர்ச்சியடைதல்.
- வெளிநாடுகளுக்கு குடிபெயரும் மாணவர்கள் மற்றும் உயர் தொழில்வல்லுனர்களுக்கு குடிபெயர்வதற்குத் தேவையான பயிற்சி மற்றும் முன்னேற்ற வழிமுறைகள் தொடர்பான வழிகாட்டல் நெறிகளை வழங்கும் கல்வி வளங்கள் பல வளர்ச்சியடைந்து செல்லுதல்.
- வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் உள்நாட்டில் செயல்படுவதற்கான அனுமதியை அரசாங்கங்கள் வழங்கியிருத்தல்.

கல்வி மக்களை தகைமைப்படுத்துவதன் மூலமாக வெளிநாடுகளுக்கு நகர்த்துவதற்கான வலுமிக்க சாதனமாக வளர்ந்து வருகின்றது.

## இந்திய அனுபவம்

வெளிநாடுகளுக்கு தமது நாட்டு ஆற்றல் மிகு மனித வளத்தை அனுப்புவதன் மூலம் உத்தம நன்மைகளை உறுதிப்படுத்துவும் வகையில் கல்வியின் நோக்கு, செயற்பாடுகள் என்பவற்றை மாற்றுவதில் இந்தியக் கல்விமுறை முக்கியமானதாயுள்ளது.

இந்தியாவில் வருடாந்தம் 4 மில்லியன் டொலர் செலவிட்டு வெளிநாடு செல்லும் மாணவர்கள் 100,000 - 160,000 பேர் வரையில் காணப்படுகின்றனர் (Sunit Arora 2008:42). இந்தியாவின் கல்வி முறையானது கற்கும் வழிமுறையாகவன்றி வெளிச்செல்லும் போக்குவரத்து வழிமுறையாகவே செயல்படுவதாக பலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

1970களில் ஐக்கிய அமெரிக்கா உலகில் ஒரு கல்விசார் வலு (Educational Power) வாக வளர்ச்சி பெற்றபோது, பயிற்சி பெற்ற மனித வளத்தை அசுரவேகத்தில் உறுஞ்சிக் கொள்வதாக மாறியது. இதனை இந்தியாவின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் மருத்துவம் சார்ந்த கல்வித்துறையினர் சரியாகப் பயன்படுத்திக் கொண்டனர். 1990களில் இது படித்தவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு பெருமளவில் பயன்படும் வலுவான மார்க்கமாகிவிட்டது.

இந்தியாவின் தகவல்தொழல்நுட்பக் கல்வியின் விரைவான வளர்ச்சி, ஐரோப்பிய நாடுகளில் அனுமதிப்பத்திரங்கள் (Grean Cards) பெற்று வருவதற்கு பெரிதும் உதவியுள்ளது. இரட்டைக் குடியுரிமை (Dual Citizenship) நடைமுறைகளும் இத்தகைய குடிபெயர்வுக்கு தூண்டுதல் வழங்கியுள்ளது. உண்மையில் உலக தரத்தில் கற்பிக்கும் உயர்கல்வி மற்றும் தொழில் நுட்ப நிறுவனங்களின் வளர்ச்சி, அவற்றின் தரமான வெளியீடுகள், அவற்றுக்கான சர்வதேச தொழிற் சந்தையில் உருவாகியுள்ள நன்மதிப்பு என்பனவே வெளிநாடுகளில் அதிக கிராக்கி ஏற்படுவதற்கு காரணமாகியுள்ளது. இந்திய முகாமைத்துவ நிறுவனம் (Indian Institute of Management - IIM) இந்திய தொழில் நுட்ப நிறுவனம் (Indian Institute of Technology) போன்றவற்றின் கடுமையான மாணவர் அனுமதி தகுதிவிதிகள், புதியதும் பொருத்தமானதுமான கலைத்திட்டம், நவீன கற்பித்தல் தொழில் நுட்பங்கள், தொழிலிட பயிற்சி, தொழில் நிறுவன நிபுணர்களின் வழிகாட்டல், இறுக்கமான தரம் கூடிய செயலாற்றுகை கணிப்பீட்டு மற்றும் மதிப்பீட்டு உபாயங்கள் போன்ற தொழிற்பாட்டு முறைகளினால் இவற்றின் வெளியீடுகள் தரம் உயர்ந்த மனிதவளமாக உலகரீதியில்

அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத்தகைய தரமான நிறுவனங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் இந்திய மத்திய அரசின் மனிதவள அமைச்சு, உயர்கல்வி அமைச்சு என்பன அதிக ஆர்வம் காட்டி வருகின்றன. தரமான உயர் கல்வி நிறுவனங்களை விரிவுபடுத்துவதற்கென இந்திய மத்திய அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் (2009 இல்) அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல் வெளிநாட்டுப்பல்கலைக்கழகங்களை இந்தியாவுக்குள் அனுமதிப்பதற்கான சட்ட மூலமான வெளிநாட்டு கல்வி வழங்குவோர் சட்டம் (Foreign Education Providers (Regulations)Act) இயற்றப்பட்டுள்ளது. இத்தகைய பல்கலைக்கழகங்கள் அதிகம் தொழிற்படும் போது கல்வி மேலும் பலமான குடிபெயரச் செய்யும் சாதனமாக செயற்படும் என்று நம்பப்படுகின்றது. வெளிநாட்டு மூலதனம், தொழில் நுட்பம், நிபுணத்துவம் என்பன ஒன்றிணைந்த வகையில் வெளிநாட்டு புகழ் பெற்ற கல்வி நிறுவனங்கள் இந்தியாவில் செயற்படுமிடத்து வெளிநாடுகளுக்கு குடிபெயரத்தூண்டும் பலமான சாதனமாக கல்வி வலுப்படுத்தப்பட்டு விடும்.

### இலங்கை அனுபவம்

இலங்கையிலும் 2000 ஆண்டளவிலிருந்து கல்வி மேற்குலக நாடுகளில் இலங்கையர் குடியேறுவதற்கு துணை செய்யும் வகையில் செயற்பட்டு வருகின்றது. கொழும்பு நகரையண்டிய பகுதிகளிலும் கண்டி மாநகரிலும் நவீன கல்வி வழங்கும் தனியார் துறை உயர் கல்வி நிறுவனங்கள் நன்கு வளர்ந்து வருகின்றன. குடிபெயருவதற்கான தகைமையையும், முனைப்பையும் வழங்கும் வகையில் கல்வி எனும் துணைத்துறையில் (Subsector) பலமாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

- இலங்கை முதலீட்டுச்சபை (BOI)யின் அனுமதியுடன் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் கூட்டிணைவு நிறுவனங்கள் பல பல்கலைக்கழக பட்டங்களை வழங்குதல்.
- சர்வதேச பாடசாலைகள் பல ஆங்கில மொழிமூலமாக வெளிநாட்டு கலைத்திட்டங்களின் படி கற்பித்து வருகின்றன.
- வெளிநாட்டுக்கு குடிபெயர்வதற்கான மொழித் தகுதியை வழங்குவதற்கு பல்வேறு கல்வி நிறுவனங்கள் தொழிற்பட்டு வருகின்றன.
- வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்கும் குடிபெயர்வதற்கும் துணை செய்யும் அநேக முகவர் நிறுவனங்கள் தொழிற்படுகின்றன.
- சர்வதேச பல்கலைக்கழகங்களின் அனுமதிமுறை, அவற்றின் கல்வி ஏற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வையும், அறிவையும் அதிகரிக்கும் வகையில் கல்விக் கண்காட்சிகள் (Educational Fairs) பல நடாத்தப்படுகின்றன. வெளிநாட்டு கல்விமான்கள் பல வழிகாட்டல் செயலமர்வுகளையும் (Educational Seminars) நடாத்தி வருகின்றனர்.

இத்தகைய நடைமுறைகள் குடிபெயர்வதற்கு கல்வ அடித்தளமாக வளர்ச்சியடைய உதவி வருகின்றன. கேள்விப்பக்கத்திலிருந்து தனியார்துறை உயர்கல்வி வளர்ச்சியடைவதற்கும் இப்புதிய மாற்றங்கள் வழிகாட்டி வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. தேசிய ரீதியல் வழங்கல் பக்கத்தில் அரச தனியுரிமையாக உயர்கல்வியை வழங்குவது தொடர்பான பிரச்சினைகளிலிருந்து அரசாங்கம் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் இந்த மாற்றங்கள் துணை புரிவதாக நம்பப்படுகின்றன.

### முடிவுரை

கல்வி தனிமனிதனை மேன்மைப்படுத்தவும், சமூக இடைவினையுறவுகளில் இணக்கப்பாட்டை உயர்த்தவும், தேசிய ரீதியில் வினைத்திறன்மிக்க மனிதவளத்தை அதிகரிக்கவும் உதவுகிறது. இன்று கோளமயமாதலில் பொருளாதாரத்தை துரிதப்படுத்தும் பிரதான மைய விசையாகவும் பொருளாதார வல்லாண்மைக் காரணியாகவும் கல்வி வலுப்பெற்று விட்டது.

இதே சமயம் கோளமயமாதல் நாடுகளின் எல்லைகளை மங்கிவிடச் செய்தவன் மூலம் எல்லாக் காரணிகளையும் தடையற்று நகர்த்துவதில் பெரும் பங்கு வகிக்கிறது. மக்கள் நாடுகளிடையே பயணம் செய்வதும் தொழில் நாடி நகர்வதும், கல்விக்காக நகர்வதும் பெருகியுள்ளது. குடிநகர்வு உலக செயற்பாடுகளில் முதன்மையானதாகிவிட்டது. இதில் கல்வியின் பயன்பாடும் புதிய மாற்றுத் தேவைகளை நோக்கி விரிவுபட்டுச் செல்கின்றது.

இதனடிப்படையில் மக்கள் போதுமான கல்வியைப் பெறுவதில் அதிக முதலீடுகளை மேற்கொள்கின்றனர். வசதிமிக்க சமூக வகுப்பினர் கல்வியில் முதலீடு செய்தவன் மூலமாக செல்வந்த நாடுகளில் குடியேறி உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை தமக்கும் தமது தலைமுறையினருக்கும் உறுதிப்படுத்தமுயல்கின்றனர். செல்வந்த நாடுகளில் செழிப்பும் உயர் மனிதவளத்துக்கான கேள்வியும் தொடர்ந்திருக்கும் வரை கல்வி குடிபெயர்வதற்கு துணை புரியும் காரணியாக செயற்படும் என்பதில் பிரச்சினை ஏதுமில்லை. ஆனால் அண்மையில் ஐக்கிய அமெரிக்க பொருளாதாரத்தில் அதிக நெருக்கடிகள் ஏற்பட்டு வருகின்றன. எரிபொருள் நெருக்கடி, நாணயச் சந்தைகளிலான மந்த நிலை போன்ற பிரச்சினைகள் வலுவடையுமானால் கல்விகற்பதன் மூலம் குடிபெயரும் எத்தனங்கள் பலவீனமடையும் நிலைமைகள் அதிகரித்துச் செல்லும் என அஞ்சவே வேண்டியிருக்கும். இத்தகைய நிச்சயமின்மையை எதிர் கொள்வதற்கான புதிய வழிமுறைகளை தேட வேண்டிய கட்டாயமும் வளர்முகநாடுகளுக்கு ஏற்படும்.

(10ம் பக்கத் தொடர்ச்சி)

## 50வது இதழை நோக்கி.....

விபரித்து மாணவர் சமூகத்தினரை வாசிக்கத் தூண்டுவதுடன் அவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் களமாகவும் அகவிழி அமைந்து அனைவரினதும் பாராட்டையும் விருப்பையும் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அகவிழியின் உள்ளே ஊடுருவும் போது பெரும்பாலும் முதல் அமைந்திருக்கும் கட்டுரை கல்வி சம்பந்தமாக அமைந்திருப்பது சிறப்பம்சமாகும். கல்வியின் நோக்கங்கள் நவீன கல்வியியல் அணுகுமுறைகள், நவீன போக்குகள், கல்விக்கான தலைமைத்துவம், கல்வியும் பின்நவீனத்துவமும் உலகமயமாக்கல் என்ற ரீதியில் பல புதிய புதிய விடயங்களை உள்வாங்கி வெளிவருகின்றது.

இரண்டாவதாக இடம் பெறும் கட்டுரைகள் 'ஆசிரியத்துவம்' சம்பந்தமானதாக இருக்கும் மாறி வரும் வாண்மைப் பின்னணியில் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் பல் பரிமாண அணுகுமுறை வினைத்திறனான கற்பித்தல் நுட்பங்கள், ஆசிரியரும் கல்வித் தொழில்நுட்பமும், முழுமைத்துவ முகாமைத்துவம், சமூக தலைமைத்துவமும் ஆசிரியரும் போன்ற தலைப்புக்களை அண்மியதான ஆசிரிய வாண்மைத்துவத்தின் அம்சங்களின் ஊடாக வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள், கற்பித்தல் நுட்பங்கள், முகாமைத்துவ நுட்பங்கள் போன்றவற்றை மிக அழகாகவும், ஆழமாகவும் வாசிப்போர் உள்ளங்களைத தொடக்கூடியதாகவும் புதிய சிந்தனைகளை உள்வாங்கிச் செயற்படக்கூடியதாகவும் அமைந்திருப்பது அச்சஞ்சிகைக்கு மேலும் அழகு சேர்ப்பதாகும்.

சமூக அசைவியக்கத்தில் கல்வியின் பாத்திரம் நிலவும் சமூக அதிகாரப்படிநிலைகளைக் கட்டிக்காக்கும் நிலையில் கருத்துருவ ஆதிக்கமாகவே தொழிற்படுகின்றது. இன்றைய நிலமைகளினால் உடல் - உள ரீதியாகப் பாதிப்புள்ளாகி அவலங்களின் மத்தியில் சஞ்சரிக்கும் சமூகத்தினரை ஆற்றுப்படுத்தும் நூலாகவும் இது அமைந்து வருகின்றது. சமூகத்தின் உயிரோட்டமுள்ள விடயங்களை இலகுவான மொழி நடையைக் கையாண்டு சமூகப்பிரச்சினைகள், தேவைகளை பல்வேறு பரிமாணங்களினூடாகத் தத்ரூப-மாக வெளிப்படுத்தியிருப்பது இந்நூலுக்கு மேலும் அணிசேர்க்கும் விடயமாகும்.

சமூகப் புலத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும், நவீனத்துங்களைச் சுமந்துவரும் தரமான ஆக்கங்கள் வெளிவருவதில்லை என்ற ஆதங்கத்தைப் போக்கும் அருமருந்தாக இந்நூல் அமைந்து வெளிவருவது கற்றறிந்தோர் அறிந்த விடயமே.

இன்றைய நவீன யுத்தில் மாறும் தேவைகளிற்கும் மாற்றமுறும் சமுதாயத்திற்கும் மேற்படி கல்வி மாற வேண்டியுள்ளது. நவீன விடயங்களை உள்வாங்கி செயற்படுத்த முனையும் போது ஏற்படும் சிந்தனை மாற்றங்கள், சிந்தனை அர்த்தங்கள் மீதான எதிர்ச்சிந்தனை நடவடிக்கைகள், மாற்றுச் சிந்தனைகள் போன்றவற்றை அவ்வவ்போது அகவிழி வாயிலாக ஆக்கங்களினூடே வெளிப்படுத்தி தலைமுறைக் கடத்தலையும், தலைமுறைக் கையளிப்பையும் உருவாக்குவதில் பாரிய பங்களிப்பை ஆற்றிவரும் அகவிழி காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு வெளிவரும் காத்திரமான ஒரு சஞ்சிகையாகும். கல்விப் புலத்தினருக்குக் கை கொடுக்கும் ஒரு நூலாகவும் தரணியில் உயர்ந்து நிற்கும் அகவிழி மேலும் புது மெருகுடன் அவனியில் உலாவந்து கல்விப்புலத்தையும், சமூகப்புலத்தையும் அலங்கரிக்க எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

### ஆசிரியரும் தலைமைத்துவமும்

வகுப்பறையில் மாணவர்களை வழிநடாத்தி அவர்களிடமிருந்து தலைமைத்துவ நோக்கை நிறைவேற்றும் ஆசிரியர்கள் புதிய தேர்ச்சிகளை, கற்பித்தல் நுட்பங்களை, முறையல்களை, குழுவேலைகளை, விவாத அரங்குகளை, ஒப்படை முறையியல்களை கள ஆய்வுகளை பரிசோதனைகளை, செயல்நிலை ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமெனப் புதிய கல்விச்சீர்திருத்தம் பல முன்மொழிவுகளை விதந்துரைத்துள்ளது. இதை 'National Teacher Education Policy 2001' என்ற கல்வி அமைச்சின் 2001ம் ஆண்டு வெளியீடு உறுதி செய்கின்றது. மேலும் ஆசிரியர் தொடருறு கல்வி மூலம் இத்தேர்ச்சியை தரமேம்பாடு, தகைமை விருத்தி, மீள் பயிற்சி, புத்தூக்கச் செயற்பாடுகள் மூலம் மேற்கொள்ளலாம்.

(நன்றி: எஸ்.கே.யோகநாதன், அகவிழி-28, பக்-07)






ஏ.சி. யோர்ச்
ஆசிரிய ஆலோசகர்,
யாழ்.கல்விவலயம்.


முகாமைத்துவம்

"எல்லோருக்கும் கல்வி"
என்ற நிலையில்
இருந்து
"எல்லோருக்கும் தரமான கல்வி"
என்ற நிலைக்கு
மேல் நோக்கி
நகர்வதாகும்.

# பாடசாலை மட்ட முகாமைத்துவத்தில் ஆசிரியர் தரவட்டங்கள்.

## அறிமுகம்:-

கல்வி சார் நடவடிக்கைகளில் அளவுரீதியான முன்னேற்றமான நிலைமைகளை வலுப்படுத்தும் முதலாம் கட்ட நிலையில் இருந்து பண்புசார் அல்லது தரவிருத்தியினை நோக்கி நகரும் 2ம் கட்ட கல்வி நடவடிக்கை யொன்றினை நோக்கி இலங்கை பாடசாலைகள் நகர்வதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2012ஆம் ஆண்டளவில் இலங்கை பாடசாலைகள் தரமான கல்வியொன்றிற்கான அடிப்படை கட்டுமானங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்ற வகையில் கல்வியில் மறுசீரமைப்புக்களும், பண்பு சார் விருத்திக்கான வேலைத்திட்டங்களும் முன்மொழியப்பட்டு அமுலாக்கப்பட்டு வருகின்றன. வேறு ஒரு வகையில் இதனைக் கூறுவதாயின் "எல்லோருக்கும் கல்வி" என்ற நிலையில் இருந்து "எல்லோருக்கும் தரமான கல்வி" என்ற நிலைக்கு மேல் நோக்கி நகர்வதாகும்.

இக்கட்டுரையானது பாடசாலை மட்ட முகாமைத்துவத்தில் அதிபர் ஒருவர் கல்வியின் தர உறுதிப் பாட்டிற்காக ஆசிரியர் தர வட்டங்களை உருவாக்கிக் கொள்வது பற்றியும் அதன் மூலம் கல்வியில் தர மேம்பாட்டினை ஏற்படுத்தக் கூடியதாக அமையும் என்பதினை கருப் பொருளாக கொண்டுள்ளது.

## ஆசிரியர் தரவட்டம் என்றால் என்ன?

A Quality Circles is a get together of teachers who teach a subject in the schools in a division. The program me provides a forum for teachers to discuss their problems and exchange experiences. ஆசிரியர் தர வட்டங்கள் என்பது ஒரு பாடசாலையில் எதிர் கொள்ளப்படும் சவால்கள் பிரச்சினைகள், பாடம் தொடர்பான சிக்கல்கள் சார்ந்து அவற்றுடன் தொடர்புடைய ஆசிரியர்கள் அல்லது சேவையாளர்கள் ஒன்று கூடி அச்சவால்கள் அல்லது பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து கலந்துரையாடி தீர்மானங்களை தேடியறிந்து பாடசாலையின் செயற்பாடுகளைத் தரமாக்கும் .அதேவேளை தமது சுயதொழில் மேம்பாட்டினையும் தொழில் வாழ்கையையும் சிறப்பாக்குவதற்கு பயன்படும் ஒரு உத்தி ஆசிரிய தரவட்டம் எனப்படும். இது கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகளில் இடம் பெற்ற ஒரு விடையமாகும். பாடசாலை மட்டத்தினை அடிப்படையாக கொண்ட முகாமைத்துவ அணுகு முறையில்

ஆசிரியர் தரவட்டமானது கீழிருந்து மேல் நோக்கிய முகாமைத்துவ அணுகு முறையாகும். அத்துடன் அது

- பங்கேற்பு அணுகு முறையாகவும்.
- படிப்படியாக மேல் நோக்கி நகரும் அணுகு முறையாகவும்.
- ஒவ்வொரு ஆசிரியரையும் பாடசாலை செயற்பாட்டில் ஈடுபடுத்தும் முகாமைத்துவ அணுகு முறையாகவும் காணப்படுகின்றது.

பாடசாலைகளின் முகாமைத்துவ கலாச்சாரத்தில் முக்கிய தாக்கத்தினை ஏற்படுத்தவல்ல சாதனமாக ஆசிரியர் தரவட்டங்கள் காணப்படுகின்றது. முழுப்பண்புத்தர விருத்தியின் (TQ) ஓர் அங்கமாக ஆசிரியர் தரவட்டங்கள் காணப்படுகின்றது. அதிபர் ஒருவருக்கு தமது பாடசாலை மட்ட முகாமைத்துவத்தின் போது பிரச்சினைகள் அல்லது பலவீனங்கள் ஏற்படும் போது அப்பிரச்சினை உருவாகும் இடத்தின் பின்னணியான வகுப்பறை அல்லது விஞ்ஞான கூடம், கணித வள நிலையம் ஆகிய இடங்களில் வைத்து தாமதமின்றி தீர்வுகளை மேற் கொள்ள உதவும்.

பாடசாலையொன்றில் அமுல்படுத்துவதற்கு நடத்துவதற்கு பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றி கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதற்கு ஆசிரியர் தரவட்டம் சிறப்பான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுக்கும்.

சுயமதிப்பீடு, அபிவிருத்தி செயல்முறைகளுக்கான வழிகாட்டல் சூழலை ஆசிரியர் தரவட்டம் ஏற்படுத்தும்.

**ஆசிரியர் தரவட்டம் நோக்கங்கள்**

பாடசாலைகளில் ஆசிரியர்கள் தரவட்டங்களை உருவாக்குவதின் மூலம் கீழ்வரும் நோக்கங்களை அடைய முடியும்.

- ஒரு பாடத்தில் ஆசிரியர் கற்றல் கற்பித்தலின் போது எதிர் நோக்கும் பிரச்சினைகளை இனங்காணவும் கலந்துரையாடவும் வாய்ப்புண்டாகும்.
- அனுபவங்களை பரிமாறிக் கொள்ள முடியும்.
- ஏதாவதொரு புதிய கற்பித்தல் முறையியலை குறித்தவொரு கருப்பொருளில் பயன்படுத்த முடியும்.
- பின்னூட்டல் பற்றி திட்டமிட முடியும்.
- குறிப்பிட்ட பாடப்பரப்பு அல்லது விடயம் சார்ந்து எத்தகையவொரு வளவாளரின் உதவியினை பெறமுடியும் என்பதினை இனங்காணலாம்.
- ஆசிரியருடைய பாட அறிவை தேவையேற்படின் மேம்படுத்த முடியும்.
- செயற்பாடுகள் சார்ந்த வேலைகளை திட்டமிட முடியும்.
- வளவாளர்களை பங்கிட முடியும்.
- ஆசிரியர்களிடையே ஒத்துழைப்பினை ஏற்படுத்தி நலன்புரி சேவைகளை நடத்த முடியும்.
- தவறுகளை சுட்டிக் காட்டுதல் அல்லது தேடுதல் என்பதினை விடுத்து தவறுகளை இயன்றளவு தடுத்தல் என்பதற்கு தரவட்டம் உதவும்.
- மேலும் தவறுகளை கண்காணித்து பின்னர் பின்னூட்டல் செய்யும் முகாமைத்துவ செயற்பாட்டிற்குப் பதிலாக தரவட்டம் அமர்வின் போது முன்னூட்டல் செய்வதற்-குதவும்.
- எந்தவொரு கருமமும் திட்டமிட்ட அடிப்படையில் உரிய நேரத்தில் ஆரம்பித்து உரிய நேரத்தில் முடிப்பதற்கான கலந்துரையாடல் களமாக ஆசிரியர் தரவட்டம் உதவும்.

ஆசிரியர் தரவட்டம் குறித்து மேற்படி நோக்கங்களை நிறைவு செய்து கொள்ள முடியுமாதலினால் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் தரவட்டங்களை பாடசாலை மட்ட முகாமைத்துவத்தின் போது பாடசாலையில் வழங்கப்படும் சேவையொன்றின் தரத்தின் தரவட்டங்கள் மூலம் தர உறுதிப்பாட்டினையும் வழங்க முடியும். கல்வித் துறையானது ஒருவகையான பண்ட உற்பத்தித்துறை அல்லாத போதும் மனித உயிர்களோடு தொடர்புபடும் கல்விச் சேவைகளின் பண்பு, தரம் என்பனவற்றை வழங்க வேண்டிய ஒரு நிலைக்கு கல்வித் துறையும் வந்துள்ளது.

**ஆசிரியர் தரவட்டங்களை எவ்வாறு அதிபர் ஒருவா உருவாக்கிக் கொள்ளலாம்.**

பாடசாலைகளுக்கு இடையில் பாடம் சார்ந்து 30-35 பேர் கொண்ட ஆசிரியர் தரவட்டங்களை வலய மட்டத்தில் ஆசிரிய ஆலோசகரின் உதவியுடன் நியமிக்கலாம். பாடசாலை மட்டத்திலாயின் பாடம், மற்றும் தேவைகள் சார்ந்து ஆசிரியர் தர வட்டங்களை உருவாக்கலாம். வலய மட்டத்தில் உருவாக்கினால் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் பாடம் சார் ஆசிரிய ஆலோசகரும் ஆசிரிய தரவட்ட அங்கத்தவர்களாக செயற்படுவர். பாடசாலை மட்டத்திலாயின் எந்நோக்கத்திற்காக அமைக்கப்படுகின்றதோ அது சார்ந்த ஆசிரியர், அதிபர், கூட்டம் நடைபெறும் தினத்திற்குரிய செயலாளர் ஒருவரையும் தெரிவு செய்யலாம்.

புதிய சுற்று நிருபங்களின் படி ஆசிரிய தரவட்டங்களுக்கு ESDFP மூலமான நிதி, வசதிகளையும் பெற்று தரவட்டச் செயற்பாடுகளை மேம்படுத்த முடியும்.

ஆசிரியர் தரவட்டங்களை கூட்டும் போது அது பாடசாலை அல்லது வலய மட்டத்தில் கூட்டப்படுமாயினும் கூட்ட ஆரம்பத்தில் அதன் நோக்கத்தினை சகல ஆசிரியர்களுக்கும் விளக்க வேண்டும்.

ஆசிரியர் தரவட்டக் கூட்டங்கள் ஒரு செயலமர்வு சார்ந்தது அல்ல என்பதும் அனைவரும் சமமான நிலையில் சுதந்திரமான ஆரோக்கியமான கலந்துரையாடல் மூலமும், வெளிப்படைத் தன்மையான அணுகு முறையுடனும் கூட்டாகப் பங்கெடுப்பதின் ஊடாக தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்பது மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

கூட்ட மொன்றின் போது இருக்கைகள் வட்ட வடிவில் (Fish Bowl Shape) அமர்ந்து கலந்துரையாடி அனைவரும் சமமாணவர்கள் இதில் முதன்மையானவர் இல்லை என்றவோர் கருத்தினை ஆசிரியர் தரவட்ட மொன்றின் போது. இருப்பதினை உறுதி செய்து கொள்ள வேண்டும். அப்போது தான் ஆசிரியரின் கற்பித்தல் ஆமம்பாட்டிற்கான அல்லது கற்பித்தலில் தரத்தினை மேம்படுத்தல் என்ற தொனிப் பொருள் கூட்ட மொன்றில் காணப்படும். எவ்விதமான சட்ட திட்ட அதிகார வரம்பு எல்லைகளை வகுத்துக் கொள்ளாது கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விடயம் சுயாதீனமான விவாதத்திற்கும் கலந்துரையாடலுக்கும் உட்படும்.

The discussions should be directed to meet it is needs of different teachers. It should be realized that this is entirely a participatory exercise.

ஆசிரியர் தரவட்ட மென்பது பங்கேற்புப் செயற்பாடு என்பது அனைவர் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும் எல்லோரும் தமது பிரச்சினைகளை தேவைகளை முன்வைக்க ஊக்கப்படுத்துவதுடன் கூட்டான தீர்மானம் மொன்றினை எடுப்பதற்கான சூழலலையும் ஆசிரியர் தரவட்டங்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும் ஆசிரியர் தரவட்டங்கள் இலக்கு நோக்கி செயற்பட வேண்டுமாயின் ஆசிரிய தரவட்டத்தின் போது கீழ் வரும் முன்னாயத்த படிவம் ஒன்றினை வைத்திருப்பதினூடாக இதனை நிறைவு செய்து கொள்ளலாம்.

ஆசிரியர் தரவட்டம் மொன்றின் போது பயன்படுத்தத்தக்கதான கூட்ட முகாமைத்துவ அட்டவணையொன்றினை பயன்படுத்தலாம்.

## கீழ்வரும் மாதிரியினை பயன்படுத்த முடியும

| | | |
|---|---|---|
| | ஆசிரியர் தரவட்டம். | |
| கலந்துரையாடப்படும் தலைப்பு | | |
| நோக்கங்கள் | | |
| செயற்பாடுகள் | | |
| எதிர்பார்க்கப்படும் அடைவு | | |
| அங்கத்தவர்கள் | பெயர்கள் | பதவி |

**முடிவுரை:**

பாடசாலையின் தலைவர் அதிபர் என்ற வகையில் பாடசாலை மட்ட பண்புசார் முகாமைத்துவத்தின் ஒரு கூறாக ஆசிரியர் தரவட்டங்களை பயன்படுத்தும் ஆற்றலை அதிபர் பெற வேண்டும். மரபு நீதியான அதிகார அணுகு முறைகளில் இருந்து விடுபட்டு அதாவது சகலரும் அபிமானத்துடன் செயற்படக் கூடிய சூழலைத் தோற்றுவிக்க வேண்டும். பாடசாலையின் முகாமைத்துவ செயன் முறைகளில் சகலரும் ஒத்துழைப்பு பெறப்பட்டு (தரவட்டம்) கீழ்மட்டத்தில் இருந்து மேல்மட்டம் வரைக்கும் சகலரும் பங்கெடுத்து செயல்படுவதற்குரிய கற்றல் அமைப்பாகவும் பாடசாலையை மாற்றுவதற்கு ஆசிரியர் தரவட்டங்கள் சிறப்பான கருவியாகும். பாடசாலை யொன்றில் "அவர்கள்" "நாங்கள்" என்ற நோயினை விரட்டி அடிக்க ஆசிரியர் தரவட்டம் பாடசாலைத் தலைவருக்கு உதவும்.

அகவிழி

**AHAVILI**
3, Torrington avenue, Colombo - 07
Tel : 011-2506272, Fax: 011-2585190
Email:- ahavili2004@yahoo.com,
ahavili2004@gmail.com

# சந்தா விண்ணப்பப் படிவம்

பெயர் (முழுப் பெயர்) :

கற்பிக்கும் பாடசாலை :

பாடசாலை முகவரி :

தொலைபேசி/தொலைநகல் இல. :

மின்அஞ்சல் முகவரி :

கற்பிக்கும் பிரிவு : ஆரம்பம்/இடைநிலை/உயர்தரம்

அகவிழி அனுப்ப வேண்டிய முகவரி :

இத்துடன் ரூபா ______ க்கான காசோலை/காசுக் கட்டளையை

இல ______ இணைத்துள்ளேன்.

கையொப்பம் திகதி

காசோலை மூலம் பணம் செலுத்துபவர்கள் AHAVILI எனப் பெயரிட்டு அனுப்புக. காசுக் கட்டளையாயின் AHAVILI எனப் பெயரிட்டு HAVELOCK TOWN தபால் நிலையத்தில் மாற்றக் கூடியவாறு மட்டுமே அனுப்பி வைக்கவும்.

இப்படிவத்தை போட்டோ பிரதி செய்து உபயோகிக்கவும்.

## சந்தா செலுத்த சில எளிய வழிமுறைகள்

அகவிழி சந்தா செலுத்த விரும்புவோர் மற்றும் அகவிழி வெளியீடுகளை நேரடியாகப் பெறப் பணம் செலுத்த விரும்புவோருக்கான சில எளிய வழிமுறைகள்.

அகவிழி, கொமஷல் வங்கி, வெள்ளவத்தை
நடைமுறைக் கணக்கு எண் 1100022581

Commercial வங்கியின் எந்த கிளைகளிலிருந்தும் அகவிழி கணக்கு எண்ணுக்கு சந்தா அல்லது புத்தக விலையை பணமாக வைப்பு செய்யலாம்.

வங்கி கமிஷன் இல்லை

பிற வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் VILUTHU - AHAVILI பெயருக்கு காசோலை எழுதி அகவிழி கணக்கு எண்ணைக் குறிப்பிட்டு உள்ளூர் Commercial வங்கியில் வைப்பு செய்யலாம்.

மேற்படி வழிமுறைகளில் பணம் அனுப்புவர்கள் செலுத்தப்பட்ட தொகை, தேதி, இடம், நாள் மற்றும் தேவைகளைக் குறிப்பிட்டு அகவிழி தலைமை அலுவலக முகவரிக்கு கடிதம் எழுதவேண்டுகிறோம். அல்லது மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | 50/= |
| ஆண்டு சந்தா (தபால் செலவுடன்) | : | 1000/= |

## அகவிழி விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின் அட்டை | : | 7000/- |
| உள் அட்டை (முன்) | : | 6000/- |
| உள் அட்டை (பின்) | : | 5000/- |
| உள் பக்கம் | : | 4000/- |
| நடு இருபக்கங்கள் | : | 6500/- |

**தொடர்புகட்கு**

**Colombo**
3, Torringto Avenue, Colombo - 07.
Tel: 011-2506272

**Jaffna**
189, Vembadi Road, Jaffna.
Tel: 021-2229866

**Trincomalee**
81 A Rajavarodayam Street, Trincomalee
Tel: 026-2224941

**Batticaloa**
19, Saravana Road, Kallady Batticaloa
Tel: 065-2222814




சேமமடு பொத்தகசாலை
**CHEMAMADU BOOK CENTRE**
Tel: 011-247 2362,232 1905 Fax: 011-244 8624
E Mail: chemamadu@yahoo.com
UG 49, 50, People's Park, Colombo 11, Sri Lanka

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

முரளி கொமினிகேஷன்
185, டன்பார் வீதி,
ஹற்றன்
தொ.பே.இல: 051-2222041/42/43

குமரன் ரேட் சென்டர்
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா.
தொ.பே.இல: 052-2223416

அருணா ஸ்ரோஸ்
38, கம்பளை வீதி,
நாவலப்பிட்டி.
தொ.பே.இல: 077-4728883

நியூ கேசவன் புக்ஸ்டோல்,
56, டன்பார் வீதி,
ஹற்றன்.
தொ.பே.இல: 051-2222504
051-2222977

அபிஷா புத்தகக் கடை
137, பிரதான வீதி,
தலவாக்கல.
தொ.பே.இல: 052-2258437

அருள் ரேட் சென்டர்
19, பிரதான வீதி,
தலவாக்கல
தொ.பே.இல: 052-2258584

எம்.ஐ.எம். ஷியாட்
46, கோட்ஸ் வீதி,
மாவனெல்ல, 71500
கை.தொ.இல: 0777-065123

அகவிழி நிலையம்
81ஏ, இராஜவரோதயம் வீதி
திருகோணமலை.
தொ.பே.இல: 026-2224941

அறிவாலயம் புத்தகக்கடை
190B, புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.
தொ.இல: 0777-222366

நூர் மொகமட் நியுஸ் ஏஜன்ஸ்
132, பிரதான வீதி,
கிண்ணியா 03
தொ.பே.இல: 026-2236266

அகவிழி நிலையம்
19, சரவணா வீதி, கல்லடி
மட்டக்களப்பு.
தொ.பே.இல: 065-2222500

பி. ஜெகதீஸ்வரன்
அமரசிங்கம் வீதி, ஆரயம்பதி
மட்டக்களப்பு .
தொ.பே.இல: 065-4920925
கை.தொ.இல: 0777-9028679

அன்பு ஸ்ரோஸ்
14, பிரதான வீதி,
கல்முனை
தொ.பே.இல: 067-2229540

எம். சண்முகராஜா
56, பதுலுசிறிகம
பதுளை
தொ.பே.இல: 055-2229137/072408521

புக் லாப்
172, ராமனாதன் வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290
கை.தொ.இல: 0777-840318

எஸ். ஏ. முஹீர்
ஆசிரிய நூலகர்
மர்க்கஸ் வீதி
மூதூர் - 05
தொ.பே. இல: 060 226 1158,
077 991 7758

கவிதா புத்தகக் கடை
வவுனியா
தொ.பே.இல: 0572223556

பராசக்தி ஏஜன்சீஸ்
71, பிரதான வீதி
பண்டாரவளை
தொ.பே.இல: 0572223556

சன் புக் சொப்
27,1ம் குறுக்கு தெரு
சிலாபம்
032-2220807

பூபாலசிங்கம் புத்தகக் கடை
202, செட்டித் தெரு,
கொழும்பு - 11
தொ.பே.இல: 011-2422321

பூபாலசிங்கம் புத்தகக் கடை
309- A 2/3, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு.
தொ.பே.இல: 4515775/2504266

சேமமடு புத்தகக்கடை
UG 50, 52 பீப்பில்ஸ் பார்க்
கொழும்பு 11.
தொ.பே.இல: 011- 2472362

ஜோதி புக் சென்டர்,
கிரான் பாஜார்,
மன்னார்
தொ.பே.இல: 023- 2222052

அகவிழி நிலையம்
189, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-2229866

அகவிழி நிலையம்
66, பேராதனை வீதி,
கண்டி.
தொ.பே.இல: 081-2224041
கை.தொ.இல: 077-9148987